Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 தை 26 சனிக்கிழமை (08.02.2014) பக்கங்கள் 20 ஓசை – 130

07
பாதிப்பு



18
பரிந்துரை



## குருநகர் துறைமுக புனரமைப்பு; களநிலையில் ஆராய்வு


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகரிலுள்ள படகு கட்டும் துறைமுகத்தை மீள் புனரமைப்பது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

குருநகர் பகுதிக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர் குறித்த விடயம் தொடர்பாக நேரில் சென்று ஆராய்ந்தார்.

இதன்போது குறித்த பகுதியில் படகு கட்டும் துறைமுகத்தை மீள்புனரமைப்புச் செய்வதன் ஊடாக அப்பகுதி கடற்றொழிலாளர்கள் அடையக்கூடிய நன்மைகள் தொடர்பில் அமைச்சர் துறைசார்ந்தோரிடம் கலந்துரையாடிக் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன், மீள் புனரமைப்பின் போதும், துறைமுகம் ஆழப்படுத்தப்படும் பட்சத்திலும், அதனால் ஏற்படக்கூடிய சாதக, பாதக நிலைமைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட அதேவேளை, இவ்விடயம் தொடர்பில் துறைசார்ந் (19) பக்கம் பார்க்க...



# பொறுப்புக்கூறும் பொறிமுறையை உறுப்பு நாடுகளே தீர்மானிக்கட்டும்



## ஐ.நா. பொதுச்செயலரின் பேச்சாளர் தெரிவிப்பு

(ஜெனிவா)

வடக்கில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் உரிமை மீறல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய விசாரணைப் பொறிமுறை குறித்து ஐ.நா.வின் உறுப்பு நாடுகளே இறுதித் தீர்மானம் எடுக்க வேண்டும் என்று ஐ.நா. பொதுச்செயலரின் பதில் பிரதி பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அவுஸ்ரேலியாவைத் தளமாகக் கொண்ட அமைப்பு ஒன்று வெளியிட்ட ஆய்வு அறிக்கையில், போரின் போது இடம்பெற்ற பெரும்பாலான போர்க்குற்றங்களுக்கு இராணுவமே பொறுப்பு என்று கூறப்பட்டுள்ளது குறித்து, ஐ.நா. பொதுச்செயலரின் பதில் பிரதி பேச்சாளரிடம் கேள்வி எழுப்பப்பட்ட போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்த குற்றச்சாட்டுகளுக்கு பொறுப்புக் கூறப்பட வேண்டும் என்ற ஐ.நா. பொதுச்செயலரின், நிலைப்பாட்டில் தான் ஐ.நா. தொடர்ந்தும் உள்ளது.

நம்பகமான உள்நாட்டு தேசிய செயல்முறையா, அனைத்துலக விசாரணைப் பொறிமுறையா என்பதை தீர்மானிக்க வேண்டியது ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் தான். நாம் அவர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்கியுள்ளோம்.

(19) பக்கம் பார்க்க...

## அமைச்சர் பீரிஸ் சீனாவுக்கு

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் 3 நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நாளை மறுதினம் சீனாவுக்குப் பயணமாகின்றார்.

சீனாவின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் வாங்

(19) பக்கம் பார்க்க...

## வடக்கிற்கு அமைச்சர் டக்ளஸ் வழங்கிய விலைமதிப்பற்ற சொத்து

### விவசாய, பொறியியல் பீட ஆரம்ப விழாவில் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை கருத்து

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ள யாழ்.பல்கலைக்கழக வளாகத்தின் உருவாக்கத்தினூடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடபகுதி மக்களுக்கு ஒரு நிலையான செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளார்.

என வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார். கடந்த புதன்கிழமை அறிவியல் நகரில் அமையப்பெற்றுள்ள விவசாய, பொறியியல் பீடங்களுக்கான கட்டடத் தொகுதிகளின் மீள்கட்டுமானப் பணிகளை அமைச்சர் பார்வையிட்டபின் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வடபகுதி மக்களுக்காக ஒரு நிலையான செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நான் கேட்



(19) பக்கம் பார்க்க...

## அமெரிக்காவின் விசேட தூதர் முன்னாள் புலிகளைச் சந்தித்தது ஏன்?

### ஐ.ஓ.எம். மீது கோத்தாபய கண்டனம்

போர்க்குற்றங்கள் தொடர்பிலான அமெரிக்க விசேட தூதர ஸ்டீபன் ராப்புடன், முன்னாள் விடுதலைப்புலிகளை இரகசியமாக சந்திக்க வைத்ததன் மூலம் சர்வதேச புலம்பெயர்ந்தோர் அமைப்பான ஐ.ஓ.எம். தமது கடப்பாட்டை மீறியுள்ளது என்று அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இந்தச் சந்திப்பு கடந்த ஜனவரி இரண்டாம் வாரத்தில், கிளிநொச்சியில் இடம்பெற்றது. இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்த ஐ.ஓ.எம். நிறுவனம் தமது கிளிநொச்சி காரியாலயத்தையும் அதற்காக வழங்கியிருந்தது.

கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகளின் வதிவிட இணைப்பாளர் சுப்னாய் நண்டியின் ஒத்துழைப்புடன் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இது குறித்து இலங்கை அரசாங்கத்திடம் எவ்வித அனுமதி

(19) பக்கம் பார்க்க...

## முறைப்பாடுகளை ஏற்க மறுத்தால்; பொலிஸார் மீது நடவடிக்கை



### பொதுமக்களுக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களால் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களில் ஏற்க மறுத்தால் உடனடியாக மேலதிகாரியுடனோ அல்லது என்னுடனோ தொடர்புகொண்டால் அதற்கான தீர்வு கிடைக்கும் என யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யு.பி. விமலசேன தெரிவித்தார்.

குடாநாட்டில் மட்டுமல்ல எல்லாப் பொலிஸ் நிலையங்களிலும் முறைப்பாட்டை ஏற்க முடியாது என பொலிஸார் சொல்ல முடியாது. பொலிஸ் நிலையங்களில் உள்ள முறைப்பாட்டுப் பிரிவில் முறையிட முடியும். அவர்கள் அதை மறுக்க முடியாது. அவ்வாறு மறுக்கப்பட்டால் உடனடியாக எழுத்து (19) பக்கம் பார்க்க...

## யாழ்.இந்திய துணைத்தூதர் மகாலிங்கம் கயானாவுக்கு



### யாழ்ப்பாணத்துக்கு இனி புதிய தூதர்

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதர் வெ.மகாலிங்கம் தென் அமெரிக்காவிலுள்ள கயானா கூட்டுறவுக் குடியரசுக்கான இந்திய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளதாக யாழிலுள்ள இந்தியத் துணைத்தூதரகம் தெரிவித்துள்ளது. கடந்த 2010 ஆம் ஆண்டு (19) பக்கம் பார்க்க...

# குடாநாட்டில் தொடரும் காசோலை மோசடிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கடந்த வாரத்தில் 32 இலட்சத்திற்கும் அதிகமான காசோலை மோசடிச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.பி.விமலசேன தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். பொலிஸ் பிரிவில் 2 இலட்சத்து 13 ஆயிரம் பெறுமதியான காசோலை மோசடி ஒன்று ஸ்ரான்லி வீதியில் உள்ள ஒருவரிடம் இடம்பெற்றுள்ளதுடன், ஏழாலையில் 12 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா காசோலையும், கல்வியங்காட்டில் 10 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலையும், கச்சேரியடிக்கருகில் 2 இலட்சத்து 62 ஆயிரம் ரூபா காசோலையும், யாழ். ஆஸ்பத்திரி வீதியில் 5 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை ஒன்றும் கடந்த ஒரு வாரத்தில் மோசடி செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# கடந்த வார குற்றச்செயல்; குடாநாட்டில் 175 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கடந்த வாரத்தில் பல்வேறு குற்றச் செயல்களின் நிமித்தம் 175 பேர் வரை கைதுசெய்யப்பட்டதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.பி.விமலசேன தெரிவித்தார்.

யாழ். பொலிஸ் பிரிவில் மது போதையில் வாகனம் செலுத்திய 10 பேரும், அடித்துக் காயப்படுத்திய 13 பேரும், சுற்றாடல் தூய்மையற்றமைக்காக 2 பேரும, வேறு குற்றச்செயல்களில் 12 பேரும், பொது இடங்களில் மது அருந்தியமைக்காக இரண்டு பேரும், காயம் மற்றும் சந்தேகத்தில் 36 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 18 பேரும், வாகன விபத்தில் ஒருவரும், அத்துமீறிய உட்புகுதலில் ஒருவரும் திருட்டு தொடர்பில் 5 பேரும், சொத்து சேதம் விளைவித்தமைக்காக ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் பெருங்குற்றம் விளைவித்த 3 பேரும், சிறு குற்றங்களால் 7 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 11 பேரும், சந்தேகத்தில் 11 பேரும் குடிபோதையில் வாகனம் செலுத்திய 5 பேரும், வேறு குற்றங்களுக்காக 37 பேரும் மொத்தமாக 175 பேர் கடந்த வாரத்தில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## யாழ். மாநகர சபையின் முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் முக்கிய கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு யாழ். மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி, சனசமூக நிலையங்கள் ஒப்பந்த வேலைகளைச் செய்வதற்கான கலந்துரையாடல், சோலைவரி அறவீடு செய்வதற்கு சனசமூக நிலையங்களை பயன்படுத்தி ஊக்குவிப்புத் தொகை வழங்கல், இயங்காது உள்ள நிலையங்களின் நிலைமைகளை ஆராய்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாக யாழ். மாநகரசபை பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

## மாணவத் தலைவர் தினம் ஸ்கந்தாவில் நாளை

(யாழ்ப்பாணம்)

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் மாணவத் தலைவர் தினம் நாளை காலை 9.30 மணியளவில் கந்தையா உபாத்தியாயர் மண்டபத்தில் அதிபர் இ.ஈஸ்வரதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவன் டாக்டர் ரி.சேத்திரபாலனும், கௌரவ விருந்தினராக பழைய மாணவி செல்வி டாக்டர் எஸ்.சசிகலாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## கோரிக்கைகளை அறியத்தரவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சுகாதாரம், கல்வி, கூட்டுறவு, மின்சாரம், விவசாயம், நீர்ப்பாசனம், வாழ்வாதாரம், நீர் விநியோகம், வீதி அபிவிருத்தி, உள்ளூராட்சி, போக்குவரத்து, கமநலசேவைகள், மீன்பிடி, வீடமைப்பு ஆகிய துறைசார்ந்த பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களுடைய கோரிக்கைகள் தொடர்பாக யாழ். செயலகத்திலுள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ காலக்கிரமத்தில் அறியத்தருமாறு இணைப்பாளர் அறிவித்துள்ளார்.


### சிறு விளம்பரம்

**தவறிவிட்டது**

Dyke Street, திருகோணமலையைச் சேர்ந்த ஜெயவீரசிங்கம் சூரியபிரகாசம் என்பவது தேசிய அடையாள அட்டை (561601216V), சாரதி அனுமதிப் பத்திரம், தொழில் அடையாள அட்டை என்பன 06.02.2014 அன்று திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் வரும்போது பஸ்சில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 0772662006 (C/3344)


## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(வடமராட்சி)

புலோலி மேற்கு சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் 63 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை பி.ப. 5.30 மணிக்கு வே.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக புருத்தித்துறை சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கிருஷ்ணா தயாநிதி சத்தியலோகன், சிறப்பு விருந்தினராக புலோலி மத்தி கிராம அலுவலர் சி.லம்போதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். தொடர்ந்து இந்நிகழ்வில் புதிய செயற்குழு உறுப்பினர் தெரிவும் இடம்பெறும் என நிலைய செயலாளர் அ.ஜெயநிமலன் அறிவித்துள்ளார். (109)


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1032

திகதி 06.02.2014

வெற்றி எண்கள்: 23 33 54 59 — ஆங்கில எழுத்து: M

**ஜக்பொட் பரிசு ரூ. 2,13,11,460/= வெல்லப்படவில்லை**

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 2,13,11,460/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 2 | 10,00,000/= | ரூ. 20,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 4 | 50,000/= | ரூ. 2,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 263 | 1,000/= | ரூ. 2,63,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 572 | 1,000/= | ரூ. 5,72,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11878 | 60/= | ரூ. 7,12,680/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6135 | 40/= | ரூ. 2,45,400/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 156609 | 20/= | ரூ. 31,32,180/= |
| ஆங்கில எழுத்து | 22799 | 20/= | ரூ. 4,55,980/= |
| | | மொத்தம் ரூ. | 75,81,240/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 விதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 705681105-1-01 |
| கொழும்பு | 705686009-6-16 |
| நுவரெலியா | 705681150-4-44 |
| காலி | 705691010-6-36 |
| புத்தளம் | 705690075-8-38 |
| அம்பாறை | 705689955-0-20 |
| மொனராகலை | 705680152-3-23 |
| மன்னார் | 705686889-5-45 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 79,81,240/=

**எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 21,617,700/=**

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.02.10 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**அபிவிருத்தி லொத்தர் சபை**

356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333546/7

(C/3264)



## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Renovation of Ward No 22 | 500.00 | 54,000.00 | 90 | 2.7 | C8 |
| Renovation of Medical Clinic Dispensary | 500.00 | 18,000.00 | 90 | 0.9 | C 10 |
| Renovation of Skin Clinic & Aluminum Partition of SMO Room in OPD (Rabies Unit) | 500.00 | 29,500.00 | 90 | 1.5 | C9 |
| Renovation of Ponnampalam Road Boundary Wall, Construction of Toilet in Male Nursing Officers Rest Room and Renovation of Toilets in Ward No.1 & ward No 26 | 500.00 | 27,500.00 | 90 | 1.3 | C 10 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders Language from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 10.02.2014 until at 4.00 pm on 19.02.2014. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
5. Sealed bids shall be delivered to the address below at before 10.00 hrs on 20.02.2014, late bides will be rejected. Bids will be open at 10.15 hrs at Director's Office. Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders' representatives who choose to attend.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**
**08/02/2014.**

(C/3343)

# பன்முக புலமை கொண்டவர் பேராசிரியர் சின்னத்தம்பி

## பேராசிரியர் சத்தியசீலன் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

கவ்வி, பொருளியல், நிதியியல் மற்றும் பல்வேறுதுறைகளில் நிபுணத்துவம் சார் புலமையை பெற்றவர் மா.சின்னத்தம்பி இளமைக்காலத்தில் இருந்து இன்று வரை பன்முகப்புலமையைப் கொண்ட பேராசிரியர் சின்னத்தம்பி யாவரும் விளங்கிக் கொள்ளக்கூடிய பல்துறை நூல்களை சமூகத்திற்காக வழங்கியமை இந்த உலகில் உள்ள எவரும் அறிவர் என யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புக்கள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் தெரிவித்தார்

கல்வியற்துறை ஓய்வு நிலைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பியின் சேவையைப் பாராட்டி விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு யாழ். பல்கலைக்கழகத்தில் அண்மையில் இடம்பெற்றது

யாழ் பல்கலைக்கழக முதுகல்விமாணி பத்தாம்பிரிவு தலைவி செல்வி ஜெயா தம்பையா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பேராசிரியர் சின்னத்தம்பி கல்வித்துறையில் கலங்கரை விளக்காக திகழ்ந்தவர்

கல்வித்துறையாக இருக்கலாம் அல்லது பொருளியல் துறையாக இருக்கலாம் அவர் கல்விகற்பிற்கும் போது மாணவர்கள் ஒவ்வொருவரினது நலனில் கூடிய அக்கறை கொண்ட ஒருவராக காணப்பட்டார்

எளிய முறையில் விரிவுரை நடாத்தும் ஆங்கில தமிழ் புலமை என்று அவருக்கு நிகர் அவரே என்ற அடிப்படையில் திகழ்ந்தவர்.

பல்கலைக்கழகங்களில் ஒவ்வொரு மணி நேரத்தையும் மாணவர்களின் வளர்ச்சிக்காக பயன்படுத்திய பெருந்தகையாவார் எனத் தெரிவித்தார். வாழ்த்து மடலை கல்வியியற்துறை கலாநிதி ஜெ.இராச நாயகம் வழங்கினார் பேராசிரியர் சத்தியசீலன் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவித்தார்

# பொதுக்கூட்டம்

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களை புனரமைப்பதற்கான ஆண்டுப் பொதுக் கூட்டத்தை நடாத்துவதற்கு பிரதேச செயலர் கோ.நாகேஸவரன் ஏற்பாடுகளை செய்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை சாந்தபுரம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கான நிர்வாகத் தெரிவும், 11 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை . சிவநகர் கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றுக்கான நிர்வாக தெரிவும், 13 ஆம் திகதி வியாழக்கிழமை தொண்டமான்நகர் மாதர்கிராம அபிவிருத்திச்சங்கத்திற்கான நிர்வாகத் தெரிவும் நடைபெறவுள்ளது. அலுவலர்கள், கிராம அபிவிருத்தி அலுவலர் ஆகியோர் இதில் பங்குகொள்ள உள்ளனர். (90)

# கலாசாரப் பேரவையின் கலைப்பாலம் நிகழ்வு

திருமறைக் கலாமன்றமும்,கரைச்சி பிரதேச செயலக கலாசார பேரவையும் இணைந்து நடத்தும் கலைப்பாலம் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

தமிழ், சிங்கள கலைஞர்கள் இணைந்து வழங்கும் கலைப்பாலம் நிகழ்வில் பரத நடனம, கண்டிய நடனங்கள், புத்தாக்க நடனங்கள், நாடகம் உட்பட பல்வேறு கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் நிதி அனுசரணையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (90)

# குடிநீர் விநியோகம் நிறுத்தம் சிரமத்துக்குள்ளாகும் வட்டு மக்கள்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை சுகாதார பரிசோதகரின் தன்னிச்சையான தீர்மானத்தால் இப்பகுதியை அண்டிய 100 குடும்பங்கள் குடிநீர் வசதி இன்றி அவலநிலைக்கு ஆளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதாவது வட்டுக்கோட்டை மூளாய் மாவடி வீதியில் உள்ள மக்களும் வட்டு தென் மேற்கு பகுதி மக்களும் பெரும் அல்லலுறுவதாக அப்பிரதேச மக்கள் வலி. மேற்கு பிரதேச செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

மேற்படி விடயமாக மேலும் தெரிவிக்கையில்,

வட்டுக்கோட்டை மூளாய் மாவடி வீதியில் அமைந்துள்ள ஸ்கந்தா கல்வி நிலைய உரிமையாளர்கள் தமது சொந்த நிதியில் நன்னீர் கிணற்றில் இருந்து பொது மக்களின் தேவை கருதி தண்ணீர் தாங்கி அமைத்து குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கி வந்தனர்

குறிப்பிட்ட தண்ணீர் தொட்டியை தினமும் 80 முதல் 100 குடும்பங்களுக்கு மேல் முழுமையாக பாவித்து வந்தனர். இந்நிலையில குளோரின் தொட டிக்கு இடுவது தொடர்பான சர்ச்சையை அடுத்து தற்போது இத்தொட்டி மூலம் குடிதண்ணீர் வழங்குவது இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை அப்பகுதியில எங்கும் நன்னீர்க் கிணறு கிடையாது. அதேவேளை நன்னீர்க் கிணறு உள்ளவர்களும் குடிதண்ணீர் மக்களுக்கு வழங்க மறுத்து வருகின்றனர்.

இந்நிலையில் சொந்தக் கிணற்றில் அவர்களின் நிதியிலிருந்து தொட்டிமூலம் மக்களுக்கு வழங்கப்பட்ட குடிதண்ணீர் இன்று வழங்கப்படுவதில்லை.

வலி. மேற்கு பிரதேச சபையினரும் இவ்விடயத்தில் பாராமுகமாக உள்ளனர் எனப் பொதுமக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.



யாழ். மத்திய கல்லூரியின் முதல்வர் சபையின் மத்திய முதல்வன் சஞ்சிகை வெளியீட்டு விழா நேற்றுமுன் தினம் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற போது அதிபர் எஸ்.கே.எழிலவேந்தன் சஞ்சிகையை வெளியிட்டு வைக்க பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பழைய மாணவன் கே.பாலகிருஸ்ணன் பெற்றுக்கொள்வதைக் காணலாம். (63)

# வடக்கு விமான நிலையங்கள் மக்களுக்காக இயங்குவது எப்போது?




இலங்கையில் ஏறக்குறைய 10 விமான நிலையங்கள் உள்ளன. இதில் 02 சர்வதேச விமான நிலையங்கள் ஆகும். ஏனையவை உள்ளூர் விமான நிலையங்களாக செயற்படுகின்றன.

ஆனால் 25ஆண்டுகளுக்கு முன்னர் பலாலி விமான நிலையத்திலிருந்து திருச்சிக்கு போய்வரக்கூடியதாக இருந்தது. அன்று விமானப் போக்குவரத்தை செய்கின்றவர்கள் தொகை இன்றையைப்போல் அல்ல. மிகக்குறைந்த எண்ணிக்கையானவர்களே விமானப் பயணங்களைச் செய்தனர். இருந்தும் பலாலி – திருச்சி விமானசேவை நடைபெற்றது.

இப்பொழுது மிக அதிகமானவர்கள் விமானப் பயணங்களைச் செய்கிறார்கள். அதிலும் புலம்பெயர்ந்த நாடுகளில் இருக்கும் அதிக மானவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். அல்லது வட பகுதியைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் அங்கிருந்து கொழும்புக்கு வந்து யாழ்ப்பாணம் வருகிறார்கள். அதேபோல யாழ்ப்பணத்திலிருந்து தமிழகத்திற்கும் தமிழகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் பயணஞ்செய்வோரும் அதிகமானவர்கள். இவர்களும் கொழும்புக்கு வந்து யாழ்ப்பாணம் வரவேண்டும். அல்லது கொழும்புக்குச் சென்றே விமானம் ஏறவேண்டும்.

இவ்வளவுக்கும் வடபகுதியில் மூன்று விமான நிலையங்கள் உள்ளன. ஆனால் இவற்றினால் பெரும் பயன்கள் கிடையாது. இதில் இரண்டு விமான நிலையங்கள் பொதுமக்களின் நிலங்களிலே அமைந்துள்ளன. அப்படி அமைந்தும் அவற்றினால் மக்களுக்கு பயன்கள் ஏதும் இல்லை.

அப்படியென்றால் எதற்காக இந்த விமான நிலையங்கள்?

முன்னர் போருக்காக இந்த விமானநிலையங்கள் பயன்படுத்தப்பட்டன. இப்போது?

அண்மையில் அமைக்கப்பட்ட விமான நிலையம் எதற்காக என்று இன்னும் மக்களுக்கு விளங்கவில்லை.

வடக்கின் விமான நிலையங்கள் மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்றமாதிரி வடிவமைக்கப்பட்டால் வடக்கின் உற்பத்திப் பொருட்கள் நேரடியாக வெளிநாடுகளுக்கு – குறிப்பாக புலம்பெயர் நாடுகளுக்கு செல்ல வாய்ப்பாகும்.

யாழ்ப்பாணத்தின் வாழைப்பழத்தையும், மரக்கறிகளையும், திராட்சையையும், வன்னியின் நெல்லையும் புலம்பெயர்ந்த மக்கள் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இதைப்போல ஏராளம் அனுகூலங்கள் உண்டு.

ஆனால் இதைப்பற்றி சிந்திப்பதற்கு அரசாங்கம் இன்னும் தயாராகவில்லை.

எனவே, பேரளவில்தான் இந்த விமான நிலையங்கள் இருக்கின்றனவா? அப்படியென்றால் எதற்காக இந்த விமான நிலையங்களுக்காக அரசாங்கம் செலவுகளைச் செய்ய வேண்டும்?

இன்றைய வாழ்வில் விமானப் பயன்பாடும் அவற்றை பிராந்திய மட்டத்தில் பயன்படுத்துவதும் மிகமிக தேவையானவை. செலவையும், நேரத்தையும் மிச்சப்படுத்துவதற்கு பிராந்திய ரீதியான விமான சேவைகள் இலகுவாகவும், தாராளமாகவும் நடைபெற வேண்டும்.

இன்றைய பொருளாதார கட்டமைப்பில் இது அவசியமான ஒரு நிலை.

உள்ளூர் பொருளாதார விருத்திக்கும் இது அவசியமானது.

ஆனால் இதைப்பற்றியெல்லாம் சிந்திப்பதாகத் தெரியவில்லை. என்றால் அபிவிருத்தியின் அர்த்தம் என்ன? வளப்பகிர்வு – பரவலாக்கம் போன்றவற்றின் பொருள் என்ன?

இலங்கையைப் பொறுத்தவரையில் பெரும்பாலான விடயங்களில் அரசும் சரி, எதிர்த்தரப்புகளும் சரி சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் பெரும் இடைவெளியைக் கொண்டிருக்கின்றன.

இதனால்தான் இலங்கையும், இலங்கையர்களும் மிக பின்தங்கி இருக்கவேண்டியுள்ளது.

உண்மையில் இலங்கையின் பொருளாதாரத்தை விசுவாசமாகவே மேம்படுத்த வேண்டுமென்றால் பிராந்திய ரீதியான விமான சேவையும், பிராந்தியம் தோறும் உள்ள விமான நிலையங்களும் சர்வதேச தொடர்பாடல் வலையமைப்பில் இணைக்கப்பட வேண்டும்.

விமான நிலையங்கள் மட்டுமல்ல துறைமுகங்கள், ரயில் நிலையங்கள் போன்றனவும் பொது வலையமைப்பில் இணைக்கப்பட வேண்டும். போக்குவரத்து, பொருள் விநியோகம் மற்றும் சந்தைப்படுத்தல், தொடர்பாடல் போன்ற அனைத்தும் ஒரு சீரான ஒழுங்கில் இருந்தால்தான் நவீன சமூக இயக்கம் செம்மையுறும்.

இதைநோக்கி சிந்திக்கும் காலம் – செயற்படும் நிலை எப்போது உண்டாகும்?

நாட்டிலும் சரி, வீட்டிலும் சரி ஒழுக்கம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, பொறுமை இருத்தல் வேண்டும்.

- நெப்போலியன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## அந்த நாளும் வந்திடாதோ!

கிளிநொச்சி அறிவியல் நகரில் யாழ் பல்கலைக்கழகத்தின் பொறியியல் மற்றும் விவசாய பீடங்கள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளன. வடபகுதி கல்வி வளர்ச்சிக்கு மட்டுமல்லாது வட பகுதியின் பல்வேறு அபிவிருத்தி மாற்றங்களுக்கு வித்திடப் போகும் ஒரு வரலாற்று நிகழ்வு நடந்தேறியுள்ளது என்பதில் சந்தேகமில்லை.

1974 ஆகஸ்டில் திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரி அமைந்திருந்த இடத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திறந்து வைக்கப்பட்ட போது தமது அரசியல் சுயலாப நோக்கங்களுக்காக எதிர்ப்புத் தெரிவித்த அதே சக்திகள் இப்போதும் எதிர்க்க முனைந்தமையானது, அவர்களது வரலாறு மாறவில்லை என்பதையே உணர்த்தி நிற்கிறது.

அன்று உண்ணாவிரதமிருந்து மக்களிடையே வன்முறைப் பேச்சுக்களை விதைத்து பகிரங்கமாக பல்கலைக்கழக வருகையை எதிர்த்தார்கள். இன்று இரகசியமாக எதிர்த்துப் பார்த்து முடியாமல் கைவிட்டும், பின்னர் செய்திகளை அடக்கி வாசித்தும் எதிர்ப்பைக் காட்டிக் கொண்டார்கள் என்பதுதான் வித்தியாசம்.

கிளிநொச்சியில் பல்கலைக்கழக பீடங்களை அங்குரார்ப்பணம் செய்துவைத்து உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க பேசும்போது, சர்வதேச தரத்திலான ஒரு சிறந்த பல்கலைக்கழகமாக சகல பீடங்களையும் கொண்டதாக இப்போது யாழ் பல்கலைக்கழகத்தை தரம் உயர்த்தியுள்ளதற்கு மகிழ்ச்சி தெரிவித்துப் பேசுகிறார். நம்மவர்களோ எந்த முன்னேற்றத்திலும் குறை காண்பவர்களாக இருக்கிறார்களே தவிர, நமது மக்களுக்குக் கிடைக்கும் நல்வாய்ப்புகளுக்காக மகிழ்ச்சி காட்டுபவர்களாக இல்லை.

கிளிநொச்சி அறிவியல் நகரில் காணப்படும் பரந்த நிலப்பரப்பு, ஏனைய பீடங்களையும் அங்கு விரிவாக்கம் செய்து, வெளிநாடுகளிலிருந்தும் மாணவர்கள் வந்து படிக்கக் கூடியதாக உலகத் தரத்திற்கு யாழ் பல்கலைக்கழகத்தை எடுத்துச்செல்ல வாய்ப்பேற்பட்டிருப்பதாகவும் உயர்கல்வி அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

வன்னியின் எதிர்காலத்திற்கு ஒளி பாய்ச்சப்போகும், வடக்கு கல்விச் சூழலை மேன்நிலைக்குக் கொண்டுசெல்லப்போகும் தீர்க்கதரிசனம் மிக்க இந்தத் திட்டத்தை நடைமுறையாக்குவதற்காக தொடர்ந்து விடாமுயற்சியுடன் பாடுபட்டு சாதித்து காட்டியிருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிச்சயம் பாராட்டுக்குரியவர்.

தமிழ் மக்கள் இதற்காக நன்றி பாராட்டாவிட்டாலும், தன் கட்சிக்கு அரசியல் லாபம் கிடைக்கா விட்டாலும், வடக்கு மக்களுக்குத் தன்னால் பெற்றுத்தர முடிந்த எல்லாவற்றையும் முடிந்தளவுக்கு எடுத்துத் தந்துவிட வேண்டும் என்ற முனைப்போடு அவர் செய்து காட்டியிருப்பவை ஏராளம்.

நல்லது செய்தவர்களுக்குப் பதிலாக சிறு நன்றியையேனும் தெரிவிக்க வேண்டும் என்ற மனநிலை கொண்டவர்கள், அவர் செய்துமுடித்த செயல்களுக்காக நிச்சயம் மனதுக்குள்ளாகவேனும் பாராட்டுவர் என்று நம்பலாம். போருக்குப் பின் வடக்கில் நிகழ்ந்தேறிய மாற்றங்களை அனைத்து மக்களும் அறிவர் என்பதால், இங்கு பட்டியல் போட்டுக் கொண்டிருக்கத் தேவையில்லை.

தமிழ்ப் பெரும்போக்கான மனநிலை என்பது நாம் கவலை கொள்வதற்குரியதுதான். அது முன்னேற்றங்களிலும் செழிப்பான வாழ்விலும் காழ்ப்புணர்ச்சி கொள்ளப் பழக்கப்படுத்தப்பட்டிருக்கிறது. நமக்கு நல்லது செய்யப்படும்போது நன்றியும் பாராட்டும் தொவிப்பது சாதாரண மனிதப்பண்பு என்பதை மறந்துபோயிருக்கிறது.

இங்கு சிதைவும் தேய்வும் வலிகளும் கூடுவதே–அல்லது கூடியருப்பதாகக் காட்டுவதே–நமக்கான தன்னாட்சியை உருவாக்கிக் கொள்வதற்கான வழி என்னும் ஏமாற்றையே இன்னும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அதிலிருந்து விடுபடுவதுதான் நமக்கு நல்லது என்பதை எவ்வளவு விரைவாகப் புரிந்துகொள்கிறோமோ அப்போது நல்ல வாழ்வும் வந்துசேரும். - ஆசிரியர்.

# நாட்டில் போதைப் பொருளை ஒழிக்க விசேட வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க உத்தரவு

போதைப்பொருள் ஒழிப்புக்கு விசேட வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தி, போதைப்பொருள் ஒழிப்புக்காக விசேட வேலைத் திட்டத்தை தயாரிப்பது தொடர்பாக நேற்று முன்தினம் மாலை அலரிமாளிகையில் நடைபெற்ற விசேட பேச்சுவார்த்தையின் போது ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

போதைப்பொருள் நாட்டுக்குள் கொண்டு வரப்படுவது, அது பரவுவது, பாடசாலை மாணவர்கள் போதைப் பொருள், பாபுல், மோதக, போதை வில்லைகள் ஆகியவற்றுக்கு அடிமையாகுவது ஆகியவற்றை தவிர்ப்பதற்காக தேசிய வேலைத் திட்டத்தை தயாரிப்பது தொடர்பாக இங்கு ஆராயப்பட்டது.

இதனை நடைமுறைப்படுத்த விசேட குழுவை நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.போதைப் பொருள் தொடர்பான சட்டங்களைக் கடுமையாக்குமாறும் போதைப் பொருளுக்கு அடிமையாகுவோரை முறையான புனர்வாழ்வில் ஈடுபடுத்துமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

நாட்டுக்குள் போதைப் பொருள் கொண்டுவரப்படுவதைத் தவிர்ப்பதற்காக சுங்கப் பரிசோதனைகளுக்காக நவீன தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்துவதை துரிதப்படுத்துமாறும் பாடசாலைகளுக்கு அருகில் பாபுல், மோதக மற்றும் சிந்தடிக் போதைப்பொருள்களை விற்பனை செய்யும் கடைகளுக்கு எதிராக கடுமையான சட்டங்களை அமுலாக்குமாறும் திடீர்ப் பரிசோதனைகளை அடிக்கடி மேற்கொள்ளுமாறும், பாடசாலைகளுக்கு அருகில் நடமாடும் இனம் தெரியாத நபர்கள் தொடர்பாக விழிப்பாக இருக்குமாறும் பொலிஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டார்.

சிவில் பாதுகாப்புக் குழுக்களைப் பலப்படுத்த வேண்டும். பாடசாலைகளைச் சுற்றி சோதனைகளை மேற்கொள்ளவும் தேடுதல் நடவடிக்கைகளை மேலும் வேகப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

போதைப் பொருளுக்கு அடிமையாகி சிறைச்சாலைகளில் உள்ளவர்களுக்காக துரிதமான, முறையான புனர்வாழ்வுத் திட்டத்தை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

2005 முதல் அரசு நடைமுறைப்படுத்தும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் போதைப் பொருளுக்கு அடிமைப்பட்ட 92,000 பேரும், சிகரெட் பாவிப்புக்கு அடிமைப்பட்ட 82,000 பேரும் அதிலிருந்து அகற்றப்பட்டு சிறந்த சமூக வாழ்வுக்கு பழக்கப்பட்டு விட்டதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் தி.மு. ஜயரத்ன, அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, பசில் ராஜபக்ஷ, சந்திரசிறி கஜதீர, திஸ்ஸ கரலியத்த, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ, அமைச்சரவை செயலாளர் சுமித் அபேசிங்க, ஜனாதிபதியின் செயலணி பிரதானி காமினி செனரத் ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

# நாடாளுமன்ற அமர்வுகளை பார்வையிட்டது ரஷ்யக்குழு

(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ரஷ்ய நாடாளுமன்ற தூதுக்குழுவினர் நாடாளுமன்றத்திற்கு வருகை தந்து சபை நடவடிக்கைகளை பார்வையிட்டனர்.

நாடாளுமன்றம் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடியின் தலைமையில் கடந்த புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு கூடியதும், பிற்பகல் 1.35 மணிக்கு ரஷ்ய நாடாளுமன்றத்தின் பிரதி சபாநாயகர் செர்ஜே செலசென்ஜெக் தலைமையில் ஐவர் கொண்ட அந்நாட்டு நாடாளுமன்றத் தூதுக்குழுவினர் நாடாளுமன்றத்திற்கு வருகை தந்து சபாநாயகரின் விருந்தினர்களின் ஆசனத்தில் அமர்ந்தனர்.

சபை நடவடிக்கைகளை பார்வையிடுவதற்காக நாடாளுமன்றத்திற்கு வருகைதந்துள்ள ரஷ்ய பிரதி சபாநாயகர் தலைமையிலான தூதுக் குழுவை நாடாளுமன்றத்தின் சார்பில் வரவேற் பதாக பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி சபைக்கு அறிவித்தார்.

இந்த அறிவிப்பை அடுத்து ரஷ்ய நாடாளுமன்ற பிரதி சபாநாயகர் தனது ஆசனத்திலிருந்து எழுந்து மரியாதை செலுத்தியதுடன் ஆளும் மற்றும் எதிர்த் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மேசையில் தட்டி ரஷ்ய தூதுக்குழுவை வரவேற்றனர்.

சுமார் 10 நிமிடங்கள் சபை அமர்வுகளை பார்வையிட்ட ரஷ்ய நாடாளுமன்றத் தூதுக்குழுவினர் பிற்பகல் 1.45 மணிக்கு சபையிலிருந்து சென்றனர்.

# சண்டிலிப்பாய் இளைஞர் கழக புதிய நிர்வாகத் தெரிவு

(சண்டிலிப்பாய்)

வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இவ் நிர்வாகத் தெரிவு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இப் பொதுக் கூட்டத்தில் வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட 2014ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு இளைஞர் கழகங்களினதும் தலைவர், செயலாளர், பொருளாளர், உப தலைவர், உப செயலாளர், அமைப்பாளர் ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஆர்.நவசக்தியா கேட்டுள்ளார். மேலும் இக் கூட்டத்தில் வைத்து இடம்பெறவுள்ள வருடாந்த பிரதேச இளைஞர் விளையாட்டுப் போட்டி சம்பந்தமான இறுதி முடிவுகள் பல எடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (48)

# பாலியல் இலஞ்சம் கோரிய அதிபருக்கு விளக்கமறியல்

பாலியல் இலஞ்சம் பெற்றுக் கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்ட பாடசாலை அதிபர் ஒருவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

புத்தள நவோதய வித்தியாலயத்தில் கடமையாற்றி வரும் அதிபருக்கே விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உடலிகே சுனில் சாந்த என்பவரை எதிர்வரும் 11 ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்கு மாறு உத்தரவிடப்பட்டுள்ளது,

பெண் ஒருவரிடம் பாலியல் இலஞ்சம் பெற்றுக கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சந்தேக நபர் குறித்த பெண்ணை சுய விருப்பின் அடிப்படையில் வெல்லாவய பிரதேச ஹோட்டல் ஒன்றுக்கு அழைத்துச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி அறிந்து கொண்ட குறித்த பெண்ணின் கணவரான இராணுவ உத்தியோகத்தர் புத்தள பொலிஸில் புகார் செய்துள்ளார்.

இந்தப் புகாரை முதலில் விசாரணை செய்த பொலிஸார், பெண் சுய விருப்பில் அதிபருடன் ஹோட்டலுக்குச் சென்றதாகத் தெரிவித்து பிரச்சினையை தீர்த்து வைத்தனர். எனினும் பொலிஸாரின் விசாரணைகளில் திருப்தி அடையாத குறித்த பெண்ணின் கணவர், சிறுவர் மற்றும் மகளிர் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார். இதன் படி குறித்த பெண்ணிடம் பாலியல் இலஞ்சம் பெற்றுக்கொண்டதாகத் தெரிவித்து வெள்ளவாய பொலிஸார் அதிபரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தி இருந்தனர்.



# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் 63

■ வே. அர்ச்சுனன்

**அனுராதபுரத் தாக்குதலின் பின்பு தொடர்ந்தும் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் பல்வேறு தாக்குதல் திட்டங்களை திட்டமிட்டு செயற்படுத்த முனைந்த போதிலும் அந்தத் தாக்குதல்கள் எவையும் வெற்றி அளிக்கவில்லை. குறிப்பாக பிரபாகரன் தனது நம்பிக்கைக்குரிய தளபதிகளாக கருதி இருந்தவர்கள் பெரும்பாலானோர் இறுதி நாட்களில் பிரபாகரனின் செயற்திட்டங்களை சீராக நடைமுறைப்படுத்த தவறினர். இறுதி நாட்களில் விடுதலைப்புலிகளை அழித்தொழிப்பதில் அமெரிக்காவும், இந்தியாவும் அதிதீவிரம் காட்டியதை இலங்கை பாதுகாப்பு அமைச்சு வெளிப் படையாகவே சுட்டிக்காட்டி இருந்தது. அதாவது புலிகளின் கப்பல்களை அழிப்பதில் இருந்து பல்வேறு இராணுவ ரீதியிலான உதவிகளையும் போரியல் சார்ந்த வியூகங்களையும் இலங்கை அரசுடன் அமெரிக்காவின் ஆசிய பசுபிக் பிராந்திய கட்டளைப் பீடம் பகிர்ந்து கொள்ள தவறவில்லை.**

விடுதலைப் புலிகளின் இந்த வெற்றிகரமான தாக்குதல் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்த துடன், உலக நாடுகள் பலவும் மேலும் சிந்திக்கத் தொடங்கின. இலங்கைப் படைத்துறையினரும் தமது பலவீனங்கள் தொடர்பில் விரிவாக ஆராய முற்பட்டதுடன் தங்களது பலவீனங்களைபலமாக மாற்றுவதற்குரிய முயற்சிகளில் ஈடுபட்டனர். பாதுகாப்பு அமைச்சு உடனடியாக பாதுகாப்புத் தொடர்பான மாநாட்டைக் கூட்டி, அமெரிக்கா, பாகிஸ்தான், சீனா, இந்தியா, போன்ற நாடுகளின் அவசர உதவிகளைப் பெற்று போரை விரிவாக வேகமாக முன்னெடுப்பது என்று தீர் மானத்தையும் எடுத்தது.

இந்தத் தாக்குதல் என்பது இலங்கை அரச படைத்துறைக்கு ஏற்பட்ட பேரிழப்பு என்பதற்கப் பால் பெரிய அவமானமாகவும் விளங்கியது. இலங்கையின் அதி உச்ச பாதுகாப்பு பிரதேசத்தில் வந்து புலிகள் வெற்றிகரமாக இந்தத் தாக்குதலை நடத்தியமை யானது, பாதுகாப்பு தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆய்வாளர்களிடையே கூட பல மான கேள்விகளை எழுப்பி இருந்தது.

இத்தாக்குதலின் மூலம் பல செய்திகளை விடுதலைப் புலி கள் இலங்கை அரசிற்கும் அனைத்துலக சமூகத்திற்கும் உணர்த்த முயன்றிருக்கின்றார்கள். அதாவது இலங்கைத் தீவின் அரசியல் மற்றும் படைத்துறை தொடர்பான விடயங்களை தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்துகின்ற பாரிய சக்தி யாக புலிகள் தொடர்ந்தும் விளங்குகின்றனர். இலங்கை அரசின் பாதுகாப்பு கட்டமைப் புக்களுக்கெல்லாம் தண்ணிகாட்டி தென்னிலங்கையின் எப்பகுதி களுக்குள்ளும் ஊடுருவி தம்மால் வெற்றிகரமாக தாக்குதல் நட வடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

அத்துடன், படைத்துறையின் வட போரரங்கு தாக்குதல் நட வடிக்கைகளுக்கான பிரதான பின்தள மையமாக இருந்த அனுராதபுர படைத்தளம் மீது மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதல் மூலம் அரச படைத் தரப்பின் எதிர்கால மூலோபாய நடவடிக்கைகளில் தாக்கத்தினை ஏற்படுத்தியமை, அரச படை யினர் வடக்கில் அகலக்கால் வைப்பதனால் தென்னிலங்கை யில் காணப்படுகின்ற சிங்கள படைமுகாம்களும் புலிகளினால் தாக்கியழிக்கப்படும் என்ற செய்தியை தெரிவித்துள்ளமை, விடுதலைப் புலிகளின் தரைப் படையுடன், வான்படையும் இணைந்து நன்கு ஒருங்கிணைக் கப்பட்ட வெற்றிகரமான தாக்கு தல் நடவடிக்கைகளை மேற் கொள்ள முடியும் என்ற மரபுவழி போரியல் ஆற்றலை வெளிப்படுத் தியமை, இந்தத் தாக்குதல் மூலம் தாயகம் மற்றும் புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழ் மக்களின் மனங் களிலே வெற்றிக் களிப்பினையும் உற்சாகத்தினையும் ஏற்படுத்தியமை போன்ற விடயங்கள் அன்று முக்கிய விடயங்களாகத் தெரிவிக்கப்பட் டிருந்தன.

ஆனால் இத் தாக்குதலின் பின்பு தொடர்ந்தும் புலிகள் இயக்கத் தலை- வர் பிரபாகரன் பல்வேறு தாக்குதல் திட்டங்களை திட்டமிட்டு செயற்படுத்த முனைந்த போதிலும் அந்தத் தாக்கு தல்கள் எவையும் வெற்றி அளிக்க வில்லை. குறிப்பாக விடுதலைப் புலி களின் புலனாய்வுத் துறையின் நட மாட்டங்கள் செயற்பாடுகள் என்பன தென்பகுதியில் முழுமையாக கட்டுப் படுத்தப்பட்டதுடன் தென் பகுதி முழுமையான தீவிரமான கண் காணிப்பிற்கும், உட்படுத்தப்பட்டது.

அத்துடன் பாதுகாப்பு விடயங்களில் காணப்பட்ட ஓட்டைகள் அனைத்தும் அடைக்கப்பட்டு பாதுகாப்பு மிகவும் இறுக்கமாகப் பேணப்பட்டது. பாது காப்பு நிலைவரங்களில் காணப்பட்ட சிறியளவிலான ஓட்டைகளைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொள்வதற்கு முயற்சிகளை எடுத்த போதிலும், எந்த முயற்சிகளும் வெற்றி அளிக்கவில்லை. குறிப்பாக பிரபாகரன் தனது நம்பிக் கைக்குரிய தளபதிகளாக கருதி இருந்தவர்கள் பெரும்பாலானோர் இறுதி நாட்களில் பிரபாகரனின் செயற் திட்டங்களை சீராக நடைமுறைப் படுத்த தவறியமையும் இங்கு முக்கி யமான ஒரு விடயமாகும்.

முள்ளிவாய்க்காலுடன் இறுதிப்போர் முடிவுக்கு வந்தபோது, இறுதி நேரத் தில் 200 பேரைக் கொண்ட எல்லாளன் படையணியுடன் பிரபாகரன் நின்று போராடியதாக கூறப்படுகின்ற போதி லும் இறுதி நாட்கள். தொடர்பில் உறுதியான தகவல்கள் தொடர்ந்தும் மர்மமாகவே நீடித்து வருகிறது.

இறுதி நாட்களில் விடுதலைப்புலிகளை அழித்தொழிப்பதில் அமெரிக்காவும், இந்தியாவும் அதிதீவிரம் காட்டியதை இலங்கை பாதுகாப்பு அமைச்சு வெளிப்படையாகவே சுட்டிக்காட்டி இருந்தது. அதாவது புலிகளின் கப்பல்களை அழிப்பதில் இருந்து பலவேறு இராணுவ ரீதியிலான உதவிகளையும் போரியல் சார்ந்த வியூகங்களையும் இலங்கை அரசுடன் அமெரிக்காவின் ஆசிய பசுபிக் பிராந்திய கட்டளைப் பீடம் பகிர்ந்து கொள்ள தவறவில்லை.

குறிப்பாக அமெரிக்கா பெண்டகன் மீதான தாக்குதலை அடுத்தே புலி- களை குறிவைக்கத் தொடங்கியது. அத் தாக்குதலை அடுத்து அமெரிக்கா உலக நாடுகள் பூராகவும் விடுதலைக் காகப் போராடி வருகின்ற அமைப்பு களை தடைசெய்ததுடன் அவற்றை பயங்கரவாத அமைப்புகளாக பிர- கடனம் செய்து தனது படையியல் நடவடிக்கைகளையும், குறித்த நாடு களின் அரசுகளுடன் இணைந்து பகிர்ந்து கொள்ளத் தொடங்கியது. இதன் அங்கமாகவே அமெரிக்காவின் உதவி இலங்கை அரசிற்கு கிடைக்கத் தொடங்கியது.

வல்லரசு நாடான அமெரிக்காவுக்கு எதிராக பயங்கரவாதிகளால்மேற்கொள் ளப்பட்ட பாரிய தாக்குதலாக பெண்டகன் தாக்குதல் வரலாற்றில் பதியப்பட்டுள்ளது. நியுயோர்க் நகரில் கம்பீரமாக காட்சியளித்த உலக வர்த்தக மையத்தின் வடக்கு மற்றும் தென்பகுதி கட்டடங்கள் 110 மாடி களை உள்ளடக்கிய பாரிய கட்டட மாகும். குறித்த கட்டிடம்மீது 1993ஆம் ஆண்டில் முதலாவது தாக்குதல் நடத் தப்பட்டது. அதில் 6 பேர் கொல்லப் பட்டதோடு கட்டடம் சிறியளவிலான தேசங்களுக் குள்ளாக்கியது.

இந்நிலையில் 2ஆம் தடவையாக குறித்த கட்டடம் மீது கடந்த 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் 2,973 பேர் கொல்லப்பட்டதோடு 6291 பேர் காயங்களுக்குள்ளாகினர்.

வல்லரசு நாடான அமெரிக்கா பயங்கர வாதத்திற்கு எதிராக மேற்கொண்ட அழுத்தத்தினூடாக சந்தித்த பாரிய அழிவு இதுவென ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இதன்பின் தீவிர வாதத்தை உலகிலிருந்து வேரோடு அழிக்கும் முயற்சியில் அமெரிக்கா தீவிரம் காட்டத் தொடங்கியது. பாகிஸ் தானில் வைத்து அல்கைதா தலைவர் உட்பட அவரது குழுவினர் அமெரிக்கா வின் விசேட உளவுப்பிரிவினரான சீல் பிரிவினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதன் மூலம் அமெரிக்காவின் நீண்ட கால அவமானத்தைப் போக்கிக் கொள்ளும் ஆசையும், முக்கிய நோக்கமும் நிறைவேற்றப்பட்டது.

அதேபோல இலங்கையில் செயற் பட்டு வந்த விடுதலைப் புலிகள் அமைப்பையும் அதன் தலைவர் வே.பிரபாகரனையும் அழித்துவிடவும் அமெரிக்கா முனைப்பு காட்டலாயிற்று. 1997லேயே அமெரிக்கா விடுதலைப் புலிகளை அந்நிய பயங்கரவாத அமைப்பு என்று பிரகடனம் செய்தது. 2001இல் தனிச்சிறப்பான உலக பயங்கரவாதி என்று முத்திரை குத்தி தனது பயங்கரவாதத்திற்கு எதிரான உலகப் போர் கொள்கைக்கு ஏற்ப விடுதலைப் புலிகளை சித்தரித்தது.

2006 இல் அமெரிக்காவின் நிர்ப்பந்தத் திற்கு பணிந்து ஐரோப்பிய ஒன்றிய மும் புலிகளை பயங்கரவாத அமைப் பில் பட்டியலிட்டது.அதேவருடம் புலம் பெயர் தமிழர்களிடமிருந்து புலிகளுக்கு வந்து கொண்டிருந்த நிதியை நிறுத்த இலங்கை நடவடிக்கைகளை மேற்கொண்டது. இருந்த போதிலும் விடுதலைப் புலிகளும் தங்களுடைய அனைத்துலக தொடர்பகத்தின் ஊடாக இரகசியமான முறையில் தங்களுடைய நிதி திரட்டல்களை கச்சிதமாக மேற் கொண்டு வந்தனர்.ஆனால் ஏற்கனவே திரட்டப்பட்ட நிதியின் அளவீட்டில் பெருமளவில் விழுக்காடு ஏற்பட்டதை யும், மறுக்க முடியாது.

தொடர்ந்தும் அமெரிக்கா என்ன செய்தது? விடுதலைப் புலிகள் தொடர்ந்து என்ன செய்தார்கள் என்பதை தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)

# சர்வதேசத்தின் அழுத்தம் இன விரிசலையே ஏற்படுத்தும்

## தென்னாபிரிக்க தூதுவருக்கு நீதியமைச்சர் விளக்கம்

(கொழும்பு)

அரசாங்கம் பொறுப்புக் கூறவேண்டிய கடப்பாடு சம்பந்தமான விடயங்களில் சர்வதேச சமூகம் கூடுதலான அழுத்தங்களை பிரயோகிக்குமானால், அது எதிர் விளைவுகளை ஏற்படுத்துவதோடு, இனங்களுக்கிடையிலான விரிசலையும், துருவப்படுத்தலையும் அதிகரிக்கவும், நல்லிணக்க முன்னெடுப்புகளை பாதிப்படையவும் செய்யக்கூடும் என்று தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் ஜிஒப் டொயிட்ஜ்யிடம் நீதியமைச்சரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் நல்லிணக்கத்துக்கான செயற்பாடுகளில் அதிக அக்கறை காண்பித்து வரும் தென்னாபிரிக்க குடியரசின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் ஜிஒப் டொயிட்ஜ், அந்நாட்டைச் சேர்ந்த தன்னார்வத் தொண்டர் நிறுவனம் ஒன்றான மாற்றமுறுதலை ஊக்குவிக்கும் அமைப்பின் பணிப்பாளர் ஐவர் எச். ஜென்கின்ஸ் சகிதம் நீதியமைச்சர் ஹக்கீமை நேற்று முன்தினம் பிற்பகல் நீதியமைச்சில் சந்தித்து நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடினார்.

அப்பொழுது நாட்டின் பிரச்சினைகளுக்கு உள்நாட்டில் காணப்படும் தீர்வே சாலச்சிறந்ததாக அமையுமென்று தாம் கருதுவதாக உயர்ஸ்தானிகர் ஜிஒப் டொயிட்ஜ் மற்றும் ஐவர் எச். ஜென்கின்ஸ் ஆகியோர் அமைச்சர் ஹக்கீமிடம் கூறியதோடு, மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை பொறுத்தவரை அவற்றைப் பற்றி ஆராய்வதற்கு ஓர் உள்நாட்டுப் பொறிமுறையை கையாள்வதே மிகவும் உகந்தது என்றனர். அதேவேளையில் அதற்குச் சமாந்தரமாக பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் அரசியல் தீர்வுக்கான பயனுள்ள பேச்சுவார்த்தை ஒன்றின் அவசியத்தையும் அவர்கள் வலியுறுத்தினர்.



தென்னாபிரிக்காவில் மேலாதிக்கம் செலுத்திய வெள்ளை நிற பொலிஸாரும், ஆயுதப்படையினரும் கறுப்பினத்தவருடனான நல்லிணக்க முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாகவும், எதிராகவும் இருந்த அதேவேளையில், அத்தகையோர் மேற்கொள்ளும் இவ்வாறான முயற்சியில் கறுப்பினத்தவர் நம்பிக்கை இழந்தவர்களாகவே காணப்பட்டனர் எனவும் உயர்ஸ்தானிகர் கூறினார்.

இலங்கையிலும், தென்னாபிரிக்காவிலும் நடைமுறையில் இருந்து வரும் ரோமானிய, டச் சட்டம் எத்துணை தூரம் பொருத்தப்பாடானது என்பதை பற்றிய ஆய்வு முயற்சிகள் இரு நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் கூட்டாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்று அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

யுத்தம் முடிவடைந்து, அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் சூழ்நிலையில் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு தென்னாபிரிக்க முதலீட்டாளர்களை ஊக்குவிக்குமாறும் அமைச்சர் ஹக்கீம் அந்நாட்டு உயர்ஸ்தானிகரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

நீதியமைச்சின் செயலாளர் திருமதி கமலினி டீ சில்வா, மேலதிகச் செயலாளர் குமார் ஏக்கரத்ன, அமைச்சரின் ஆலோசகர் சட்டத்தரணி எம்.எச்.எம். சல்மான், இணைப்புச் செயலாளர் ரஹ்மத் மன்சூர் ஆகியோரும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

## வேட்பாளர் தெரிவில் ஊடகவிமர்சனங்களுக்கு மதிப்பு



(கொழும்பு)

மேல் மாகாணம் மற்றும் தென் மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர் தெரிவின் போது ஊடகங்களின் விமர்சனங்களும் கவனிக்கப்பட்டதென அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடுவதற்காக பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நேர்முகத் தேர்விற்கு தோற்றினர். நேர்முகத் தேர்விற்கு தோற்றிய நபர்கள் தொடர்பிலும் பல்வேறு விமர்சனங்கள் வெளியிடப்பட்டன. பொருத்தமான தகுதியானவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் இம்முறை தேர்தலில் போட்டியிட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## 159 பேரை தெரிவு செய்ய 3794 பேர் போட்டி

மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கு 159 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 3794 பேர் போட்டியிடுகின்றனர்.

இரண்டு மாகாணங்களில் ஐந்து மாவட்டங்களிலிருந்து அரசியல் மற்றும் சுயேட்சைக்குழுக்களிடமிருந்து 129 வேட்பு மனுக்கள் கிடைக்கப்பெற்றன. அதில் 123 மனுக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆறு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்று தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

இவ்விரு மாகாண சபைகளுக்கும் அரசியல் கட்சிகளிடமிருந்து 82 வேட்பு மனுக்கள் கிடைத்தன. அதிலொரு கட்சியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது.

சுயேட்சைக்குழுக்களிடமிருந்து 47 வேட்பு மனுக்கள் கிடைத்தன. அதில் ஐந்து குழுக்களின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

## மாணவர் விபத்துக்களை தடுக்க புதிய பாதுகாப்பு திட்டம்

### கல்வியமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்கள் பல்வேறு விபத்துகளுக்கு ஆளாவதை தடுப்பதற்கான புதிய பாதுகாப்பு திட்டமொன்றை தயாரிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஏனைய நாடுகளில் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக முன்னெடுக்கும் வழிமுறைகளையும் இந்த திட்டத்திற்குள் உள்ளடக்குவதற்கு எண்ணியுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் அனுர திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன இதற்கான ஆலோசனைகளை எனக்கு வழங்கியுள்ளார்.

நாட்டில் காணப்படுகின்ற நடைமுறை ரீதியிலான குறைபாடுகளை புதிய திட்டத்தின் ஊடாக நிவர்த்தி செய்துகொள்ள முடியும்.

அதன் பிரகாரம் பாடசாலை நேரம் நிறைவடைந்த பின்னர் பிள்ளைகள் மீது பெற்றோர்கள் கவனம் செலுத்துவதற்கும், அதிபர்களை தெளிவுபடுத்துவதற்கும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இனஒடுக்கு முறையில் படையினர் ஈடுபடவில்லை



### ஆஸிக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

படையினர் இன ஒடுக்குமுறையில் ஈடுபட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் இல்லை என முன்னாள் கடற்படைத் தளபதியும், அவுஸ்ரேலியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகருமான திசரசமரசிங்க தெரிவித்துள்ளார்.

யுத்தம் தொடர்பில் சர்வதேச நாடுகள் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடாத்தப்பட வேண்டிய அவசியம் கிடையாது.

அரசாங்கம் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட வில்லை என்பதனை பொறுப்புணர்ச்சியுடன் அறிவிக்கின்றேன்.

யுத்தம் இடம் பெற்ற காலத்தில் கடற்படைத் தளபதியாக கடமையாற்றியுள்ளேன்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் பொதுமக்கள் கொல்லப்படவில்லை எனக் குறிப்பிடவில்லை யுத்தத்தின் போது சில பொதுமக்கள் உயிரிழந்திருக்கலாம்.

எனினும், அவை திட்டமிட்ட அடிப்படையில் பொதுமக்கள் மீதான தாக்குதல்களாக கருதப்பட முடியாது யுத்தக் குற்றச் செயல்கள் இடம்பெற்றதாக சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை.

இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் மட்டுமே சர்வதேச சமூகம் கவனம் செலுத்தி வருகின்றது. 30 ஆண்டுகளாக இலங்கையில் யுத்தம் நீடித்து வந்தது.

மதவழிபாட்டில் ஈடுபட்டு வந்த அப்பாவி சிறுவர் சிறுமியரை பாண் வெட்டுவது போன்று புலிகள் வெட்டிய போது சர்வதேச சமூகம் கேள்வி எழுப்பவில்லை. இலங்கையில் உள்நாட்டு யுத்தமே நடைபெற்றது இந்த உள்நாட்டு யுத்தம் தொடர்பிலான பிரச்சினைகளுக்கு உள்நாட்டு ரீதியிலான தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்படும்.

இலங்கை ஓர் ஜனநாயக நாடு நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைமைகள் நிலைநாட்டப்பட்டுள்ளது என்றார்.

## குட்டியானைகளின் கடத்தலை தடுக்க ஒத்துழைப்பு வழங்கக் கோரிக்கை



காடுகளில் இருந்து யானைக குட்டிகள் கடத்தப்படுவதை தடுப்பதற்கு வனவிலங்குகள் திணைக்களம் மக்களின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளது.

யானைக்குட்டிகளை கடத்துவதற்கு சில குழுக்கள் திட்டமிட்டு வருகின்றமை குறித்து தகவல்கள் கிடைத்துள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எச்.டீ. ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், அத்தகைய தகவல்களை இதுவரை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதுள்ளது.

இதேவேளை, யானைக் குட்டியொன்றை கடத்தமுற்பட்ட நடவடிக்கையொன்று மஹவ பிரதேசமக்களால் நேற்று முன்தினம் வழங்கப்பட்ட தகவலுக்கமைய, வனவிலங்குகள் திணைக்கள உத்தியோகத்தர்களால் தோற்கடிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறான தகவல்கள் இருப்பின்,24 மணித்தியாலமும் செயற்படும் 011 2 888 585 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறியத்தருமாறு அவர் கோரியுள்ளார்.

## பெற்றுக்கொண்ட அமைதியை விட்டுக்கொடுக்க வேண்டாம்




### அமைச்சர் ரத்நாயக்க வேண்டுகோள்

இலங்கை ம்க்கள் பெற்றுக்கொண்ட அமைதியை விட்டுக்கொடுக்காது கட்சி நிற பேதமின்றி ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று தனியார் போக்குவரத்து அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்:

இலங்கை அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுகளை சுமத்தி, புலம்பெயர்ந்த தரப்பினரின் விருப்பு வெறுப்புகளை நிறைவேற்ற சிலர் முனைகின்றார்கள்.

அவர்களுக்கு உதவும் நோக்கில் புரட்சியாளர்களாகவும், கிளர்ச்சியை ஏற்படுத்துபவர்களாகவும் தம்மை காட்டிக்கொள்ளும் சிலர் நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கு தயாராகின்றார்கள்.

எனினும், கட்சி நிற பேதங்கள் இன்றி இலங்கைப் பிரஜைகள் என்ற நிலையில், அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

தாயகத்தை ஈடுவைத்து அதிகாரத்தை பெறமுனைபவர்கள், போராடிப் பெற்றுக்கொண்ட அமைதியை விட்டுக்கொடுக்க முனைய வேண்டாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.


யாழ்.அரியாலை ஏழிசை மிருதங்க நர்த்தனாலயத்தின் கலைவிழா அண்மையில் அன்புமகாலில் கல்லூரியில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபர் துஷ்யந்தி துசிகரன் மங்கள விளக்கேற்றுவதையும் நர்த்தனாலய மாணவர்களின் நடன நிகழ்வு மற்றும் மிருதங்க நிகழ்வையும் காணலாம்.

# இ.போ.ச ஊழியர்களுக்கான சம்பளப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும்

## வடபிராந்திய ஊழியர் சங்கத் தலைவர் புவி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்கதையாகவுள்ள நிலையில் இப் பிரச்சினைக்கு உரிய அதிகாரிகள் தலையிட்டு தீர்வைத் பெற்றுத் தர வேண்டும் என வடமாகாண ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்கத்தின் தலைவரும் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினருமான கி. புவி தெரிவித்துள்ளார்.

வடமாகாண ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்கத்தின் 2014 ஆம் ஆண்டிற்குரிய புதிய நிர்வாக சபைத் தெரிவில் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் உரை நிகழ்த்துகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் சபை ஊழியர்களின் சம்பளப் பிரச்சினை தீர்வின்றி தொடர்கின்றது. இப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். உரிய முறையில் சம்பளம் வழங்கப்பட வேண்டும் அத்துடன் வடபிராந்தியத்தில் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வங்கியில் வைப்பிலிடுவது போல் எமது சாலை ஊழியர்களுக்கும் உரிய தேவைக்கு அதனைப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் வடபிராந்திய இ.போ.ச கோண்டாவில் சாலைக்கு 20 புதிய பேருந்துகள் வழங்கப்பட வேண்டும். பல பேருந்துகள் பழுதடைந்த நிலையில் சீர்செய்யப்பட்டு சேவையில் ஈடுபட்டு வருகின்றன. தொடர்ந்தும் இப் பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

இவ் விடயங்கள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலையிட்டு தீர்வைப் பெற்றுத்தர வேண்டும நாம் எல்லோரும் அமைச்சரின் கரங்களை பலப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார் (65)

# சௌத்பார்பகுதி மீனவர்களின் தொழில் நடவடிக்கை பாதிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் சௌத்பார் கடற்கரைப்பகுதியில் தென்னிலங்கை மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதால் பரம்பரையாக இப்பகுதியில் வாழும் மீனவக் குடும்பங்களின் தொழில் நடவடிக்கை பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கடலில் மீன்களின் வரத்து அதிகமாகவுள்ள காலப்பகுதியான மார்ச், ஏப்ரல் மாதங்களில் தென்பகுதி மீனவர்கள் மீன்பிடிப்பதால் இப்பகுதி மீனவர்கள் தொழில் செய்ய முடியாது வாழ்வாதார ரீதியாக பாதிப்புக்களை எதிர்கொண்டு வருவதாக பாதிக்கப்படும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

சிலாபம் பகுதியில் இருந்து இக் கடற்கரைப் பகுதியில் மீள் குடியேறி வசித்து வரும் மீனவர்களே இவ்வாறு மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுகிறது. (140)

# விசேட வேலைத்திட்டம்

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் குடும்பப் பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சிறுவர் அபிவிருத்தி பெண்கள் விவகார அமைச்சின் பெண்கள் பணியகம் இதற்கான தரவுகளை திரட்டி பொருத்தமானவர்களுக்கு சுயதொழில் உதவிகளை வழங்கவுள்ளது. பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார் (90)

# முரசின் இன்றைய பலன்



(08.02.2013 சனிக்கிழமை)

**விஜய வருஷம் தை மாதம் 26 ஆம் திகதி.**
**கார்த்திகை நட்சத்திரம்**
**பி.ப 12.25 வரை பின் ரோகிணி**
**இராகுகாலம் 9.35-11.05 வரை. சுபநேரம் 03.35 - 5.05 வரை.**

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | குற்றச் செயலால் தண்டனை, உறவினர் வருகையினால் இல்லத்தில் மகிழ்ச்சி களைகட்டல் |
| ரிஷபம் | காரணமில்லாமல் கோப உணர்வு ஏற்படும், புதிய மனை அமைக்கத் திட்டமிடல், காப்புறுதி செய்ய விரும்புதல்,சுபகாரியம் தொடங்க கடன்படுதல். |
| மிதுனம் | எதிர்பாராது பிரச்சினையில் சிக்குதல், துணையின்றி தனித்திருக்கும் நிலையை எண்ணி மனம் வருந்துதல் |
| கடகம் | வாயுமூலையில் வடமேற்குத் திசை நோக்கி நித்திரை செய்வதால் நன்மைகிட்டும், புறக்கணித்துப் பேசியவர் மனம் மாறி உறவுக்கு கைகொடுத்தல் |
| சிம்மம் | வீண்பழி சுமத்தியதால் மனவேதனைப்படல், விவாக பேச்சு இடையில் முறிதல். |
| கன்னி | நிலுவையில் ஒருபகுதி கிடைத்ததால் நிம்மதி ஏற்படல், இடமாற்றம் ஒத்திவைப்பதைக் கேள்வியுற்று ஆனந்தம் |
| துலாம் | பொறுப்பின்றி பணம்,நகை கொடுக்கத் துணிய வேண்டாம், நீண்டகாலப்பகை உணர்வு நீங்கியதால் பழிகளிப்பு அற்றுப் போதல் |
| விருச்சிகம் | சொத்துரிமை பற்றிய பிரச்சினை சுமூகமாதல், வியாபாரத்தில் புதிய யுக்தியை கையாளுதல் |
| தனுசு | துயர் ஏற்படும், வாடகைக்கு வீடு தேட அலைந்தமையால் தேகநலம் பாதிப்பு |
| மகரம் | நினைத்தது நடக்கவில்லை என்ற மன ஆதங்கம் ஏற்படல், சுபகாரியம் நடாத்த கடன்பெற அலைச்சல் ஏற்படல் |
| கும்பம் | காரியஞ் சாதிக்க சம்பந்தப்பட்டவரின் மனம் நோகாமல் பேசுதல், கைவிட்ட உறவு மீண்டும் உறவாட வருவதால் மகிழ்ச்சி |
| மீனம் | நம்பிக்கைக்கு துரோகம் இழைத்தவரைப் பற்றி வேதனைப்படல், இடையூறுகள் நேரிடாதிருக்க இறைநம்பிக்கை கொள்ளல். |

# கைகளின் அசைவுகளில் வெளிப்படும் உண்மைகள்

## அப்பாவி மனிதர்

ஒருவர் நிற்கும் வேளையில் அல்லது நடக்கும் வேளையில் தன்னுடைய கை விரல்களைச் சிறிதும் மூடாமல் விரியத்திறந்து வைத்துக் கொண்டிருந்தால் இவர் ஒரு அப்பாவி என்பதை ஐயந்திரி புற ஏற்றுக்கொள்ளலாம். இத்தகையோருக்கு எதிலுமே மன உறுதி இருக்காது வஞ்சனையும் சூதும் தெரியவே தெரியாது. எல்லோரிடத்திலும் மிகவும் திறந்த மனத்துடன் பழக முற்படுவர்.

தன்னுடைய சொந்த வாழ்க்கையின் அந்தரங்க இரகசியங்களை கூட பிறரிடத்தில் வெட்கமின்றி கூச்சமின்றி வெளியிட்டு விடுவார்கள் அதே போல் பிறருடைய இரகசியங்களைக் கூட இவரால் காப்பாற்றவே முடியாது. ஆகையால் இவருடன் நட்புக்கொள்வோர் தமது செய்திகளை இவரிடம் கூறாது விடுதல் அவசியமாகும். இவரின் கையிலே எவ்வளவு பணம் வந்தாலும் தங்காத ஓட்டை கையர்கள் கிடைத்த பணத்தை கண்மூடித்தனமாகச் செலவு செய்துவிட்டு முக்கியமான அத்தியாவசிய தேவைகளுக்கு பணங்கிட்டாது அல்லற்படுபவர். எக்காலத்திலும் பணத்தட்டுப்பாடு இருந்து கொண்டே இருக்கும் தன்னுடைய பணத்தை போலவே பிறருடைய பணத்தையும் செலவு செய்து விடுவர்.

எனவே பணவரவு செலவுகள் உள்ள பதவிகள் மற்றும் அரச உத்தி யோகர்க ளுக்கோ இவர்கள் தகுதியற்றவர்கள் தனக்குப்புதிதாக அறிமுக முள்ளவரிடத்தில் கூட இவர்கள் கூச்சமின்றி கடன் கேட்பார்கள். அப்படி வாங்கிக்கடனைப் பெரும்பாலும் திருப்பிக் கொடுக்க மாட்டார்கள். கவனம் அக்கறை இன்மையே ஒரு முறை இவ ருக்கு கடன் கொடுத்தவர்கள் மீண்டும் மறுமுறை தயங்குவர் கொடுத்த கடனை மீளப்பெற இவரை தண்டனை வழிக்கு கொண்டு வருவர் இவரின் அப் பாவித்தன்மையின் நடிப்பில் ஈர்க்கப்படுவோர் தப்பிப்பிழைப்பார்.

தனது காரியத்தைச் சாதித்துக் கொள்ள எந்தக் கோலமும் வேகமும் போடத் தயங்க மாட்டார்கள். அறிஞர்களும் பிரமு கர்களும் அரசியல் வரிகளும் கூட இவரின் வார்த்தைகளை நம்பி ஏமாந்து போவார்கள்.

**ஜோதிர் வித்யா ரத்னா**
V.A.சிவராசா,
[B.A.B.Phil.Dip - in -Ed]

## இல்ல மெய்வல்லுநர்

(வடமராட்சி)

வடமராட்சி கம்பர் மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் மு. ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இப் போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண உடற்கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே. சக்தி பாலன் கலந்துகொள்ளவுள்ளார். (109)

(காரைநகர்)

காரைநகர் யாழ்ரன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் வே. முருகமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் குணநாதன், சிறப்பு விருந்தினராக கல்விக் கருணவ் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (50)

(அச்சுவேலி)

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் அ. அருணந்திசிவம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன், சிறப்பு விருந்தினராக ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின்பிராந்திய முகாமையாளர் ஆனல்ட், பாடசாலையின் பழைய மாணவரும், அபிவிருத்தி உத்தியோகஸ்தருமாகிய கோ. சபேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (03)

# ஆரம்பமே சொதப்பல்

(ஒக்லாண்ட்)

நியூசிலாந்து அணிக்கெதிரான முதலாவது இனிங்ஸ் போட்டியில் இந்திய அணி சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றது.

இந்திய, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் நியூசிலாந்தின் ஒக்லாண்டில் நடைபெற்று வருகின்றது.

முதல் இனிங்ஸிற்காக நான்கு விக்கெட்டுக்களை இழந்து 329 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தை நியூசிலாந்து அணி தொடர்ந்தது. இதில் ஒரு முனையில் அதிரடியில் கலக்கிய கப்டன் மக்கலம் இரட்டைச் சதம் அடித்து அசத்தினார். இருப்பினும் மறுமுனையில் இசாந்த் சர்மாவினால் விக்கெட்டுகள் சாய்க்கப்பட்டு வந்தது. இறுதியில் நியூசிலாந்து அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 503 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கப்டன் மக்கலம் 307 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து" சிக்ஸர்கள், 29 பவுண்டரிகள் அடங்கலாக 224, அண்டர்சன் ஒரு சிக்ஸர், 13 பவுண்டரிகள் அடங்கலாக 77 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் இசாந்த் சர்மா ஆறு, சகீர்கான் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.



பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இந்திய அணி ஆரம்பத்திலேயே சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இந்திய அணிமுதல் மூன்று விக்கெட்டுக்களையும் 10 ஓட்டங்களுக்குள் இழந்து தடுமாறியது. இந் நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த ரோகித் சர்மா ஜோடி ஆடினர். மறுமுனையில் நிதானமாக ஆடிய முரளி விஜய் தனது விக்கெட்டைத் தாரை வார்த்தார். இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த ரஹானே,ரோகித் சர்மா ஜோடி பொறுப்புடன் ஆடி வருகின்றது. இறுதியில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை இந்திய அணி முதல் இனிங்ஸிற்காக நான்கு விக்கெட்டுக்களை இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் ரோகித் சர்மா 67, ரஹானே 23 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுள்ளனர். முரளி விஜய் 26 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் போல்ட் இரண்டு, ரிம். சௌத்தி ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். ஆறு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள




நிலையில் இந்திய அணி 373 ஓட்டங்களால் பின்னிலையிலுள்ளது. இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

## சச்சின், வோர்ன் மோதல்

(லண்டன்)

லோர்ட்ஸ் மைதானத்தின் 200ஆவது ஆண்டுவிழா கொண்டாட்டத்தையொட்டி சமீபத்தில் ஓய்வுபெற்ற சச்சின், ஆஸி. முன்னாள் சுழல் நட்சத்திரம் ஷேன் வோர்ன் தலைமையிலான அணிகள் மோதும் ஒருநாள் போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மெல்பேர்ன் கிரிக்கெட் கிளப் அணியின் கப்டனாக சச்சின், இதர உலக அணியின் கப்டனாக ஷேன் வோர்ன் நியமிக்கப்பட்டுள்ளனர். இரசிகர்களின் ஆவலைத் தூண்டியுள்ள இந்தப் போட்டி, ஜூலை 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. சச்சின் அணியில் ராகுல் ராவிட்டும் இடம் பெறுகிறார். மற்ற வீரர்கள் விவரம் விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பங்களாதேஷிற்கு இலக்கு 467



(சிட்டகொங்)

சிட்டகொங் டெஸ்ட் போட்டியில் 467 என்ற வெற்றியிலக்கை நோக்கி பங்களாதேஷ் அணி ஆடிவருகின்றது.


இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி பங்களாதேஷின் சிட்டகொங்கில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக எட்டு விக்கெட்டுக்களை இழந்து 409 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நான்காம் நாள் ஆட்டத்தை பங்களாதேஷ் அணி தொடர்ந்தது. மொகமதுல்லா சிறப்பாக ஆடியபோதும் நீண்ட நேரம் நிலைக்கவில்லை. இறுதியில் பங்களாதேஷ் அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 426 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மொகமதுல்லா 30, சமசூர் ரஹ்மான் 106, இம்றுல் கைல் 115 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஜந்த மெண்டிஸ் ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

161 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய இலங்கை அணி சங்கக்கார, சண்டிமால் ஆகியோரின் அபாரமான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் இலங்கை அணி இரண்டாவது இனிங்ஸிற்காக நான்கு விக்கெட்டுக்களை இழந்து 305 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் முதல் இனிங்ஸில் முச்சதம் விளாசிய சங்கக்கார இரண்டாவது இனிங்ஸிலும் சிறப்பாக ஆடி சதமடித்தார். இதன் மூலம் முதல் இனிங்ஸில் முச்சதம், இரண்டாவது இனிங்ஸில் சதடிமடித்த இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் கூச்சின் சாதனையை சங்கக்கார சமப்படுத்தியுள்ளார். 144 பந்துகளை எதிர்கொண்ட சங்கக்கார இரண்டு சிக்ஸர், 11 பவுண்டரிகள் அடங்கலாக 105 ஓட்டங்களைப் பெற்றார். இதன் மூலம் சுனில் கவாஸ்கர், லாரா ஆகியோரின் சத எண்ணிக்கையை முறிடியத்தார். மேற்படி இருவரும் 34 சதங்களைப் பதிவு செய்திருந்தனர். அத்துடன் டெஸ்ட் அரங்கில் சங்கக்கார பெற்றுக்கொண்ட 35ஆவது சதமாக இது அமைந்தது. ஒரு போட்டியில் இரு இனிங்ஸிலும் சங்கக்கார முதல் முறையாக சதம் கடந்தமை குறிப்பிடத்தக்கது. மற்றும் சண்டிமால் 100, மத்தியூஸ் 43 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். பந்து வீச்சில் மொகமதுல்லா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 467 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை, விக்கெட் இழப்பின்றி 12 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இன்று போட்டியின் இறுதி நாளாகும். இலங்கை முதல் இனிங்ஸ் 587.

# கோலாகல ஆரம்பம்



30· பில்லியன் யூரோக்கள் செலவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் ரஷ்யாவின் சோச்சி நகரில் கோலாகலமாக நேற்று ஆரம்பமானது.

30 வருடங்களுக்குப் பின்னர் அங்குரார்ப்பண நிகழ்விற்கு முன்னதாக போட்டிகள் ஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

16 நாட்கள் நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளில் 98 தங்கப் பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

87 நாடுகளைச் சேர்ந்த 2,871 வீர, வீராங்கனைகள் இந்தப் போட்டிகளில் பங்குபற்றியுள்ளனர்

டொமிக்கா, சிம்பாப்வே, மோல்டா, பரகுவே, டோஹோ, டொங்கா, கிழக்கு தீமோர் ஆகிய நாடுகள் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளுக்குள் புதிதாக பிரவேசித்துள்ளன.

விடுதி நிர்மாணம் தொடர்பில் சில பிரச்சினைகள் காணப்படும் நிலையில், போட்டி இடம்பெறும் பகுதிகளை முழுமையாக தயார்படுத்தும் நடவடிக்கையில் ஏற்பாட்டுக் குழுவினர் 24 மணிநேரமும் பணியாற்றி வருகின்றனர்.

## பீற்றர்சனுக்கு கிராக்கி

(புதுடில்லி)

இங்கிலாந்து அணியில் இருந்து நீக்கப்பட்டிருந்தாலும், அதிரடி சகலதுறை வீரர் கெவின் பீற்றர்சனுக்கு ஐ.பி.எல். வீரர்கள் ஏலத்தில் கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. பெங்களூரில் பெப்ரவரி 12ஆம் திகதி நடைபெறவுள்ள ஏலத்தில் இந்தியாவின் வீரேந்திர சேவாக், யுவராஜ் சிங் ஆகியோருக்கு இணையாக பீற்றர்சனுக்கும் அதிக தொகை கொடுத்து வாங்க அணிகள் முன்வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக அறிவிக்கப்பட்ட 651 வீரர்கள் அடங்கிய பட்டியலில் . இருந்து, மொத்தம் 514 வீரர்கள் கொண்ட இறுதிப் பட்டியலை ஐ.பி.எல். நிர்வாகம் நேற்று முன்தினம் வெளியிட்டது. இதில் 219 வீரர்கள் சர்வதேச போட்டிகளில் விளையாடியவர்கள் (169 இந்தியர்கள், 50 வெளிநாட்டு வீரர்கள்) என்பது குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்து அணி அறிவிப்பு

(லண்டன்)

உலக ருவென்ரி-20 தொடர் மற்றும் மேற்கிந்தியதீவுகள் தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. டானி பிரிக்ஸ், போய்ட் ரங்கின் ஆகியோர் அணியால் விலக்கப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்து 19 வயதுக்குட்பட்ட அணியை தலைமை தாங்கிய மொஈன் அலி மற்றும் ஸ்டீபன் பரி ஆகியோர் அணிக்குள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரது பெறுமதிகளும் கழக மட்டப்போட்டிகளில் நல்ல முறையில் உள்ளன. மொஈன் அலி இடது கைத் துடுப்பாட்ட வீரர். அதேவேளை இடதுகை சுழற் பந்துவீச்சாளர். இவர் கெவின் பீற்றர்சனின் இடத்தில் விளையாட அதிக வாய்ப்புக்கள் உள்ளன. இதேவேளை கடந்த காலங்களில் இங்கிலாந்து அணிக்காக சிறப்பாக விளையாடிய் லம்ப், அலெக்ஸ் ஹேல்ஸ், லூக் ரைட் ஆகியோர் அணியில் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளனர். புரொட் அணியின் தலைவராக தொடர்கின்றார். மேற்கிந்திய தீவுகள் ஒருநாள் தொடரில் இருந்து ஓய்வின் நிமிர்த்தம் குக் விலகியுள்ளதால் புரொட் அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அணி விபரம்

ஸ்ரூவெர்ட் புரொட், இயன் மோர்கன், மொஈன் அலி, ரவி போபார, ரிம் பிரஸ்ணன், பட்லர், ஜேட் டேர்ன்பக், அலெக்ஸ் ஹேல்ஸ், க்றிஸ் ஜோர்டான், லம்ப், ஸ்டீபன் பரி, ஜோ ரூட், பென் ஸ்டோக்ஸ், ஜேம்ஸ் ட்ரெட்வெல்,

# இல்ல மெய்வல்லுநர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் த. அருந்தவபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம் கலந்துகொள்ளவுள்ளார். (11)

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக ஏசியா பினான்ஸ் லிமிடெட் பிரதி முகாமையாளர் மார்க்கண்டு திருநீலகண்டன் கலந்து கொள்ளவுள்ளார். (109)

(நவாலி)

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திருமதி அம்பிகை சிவ ஞானம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவனும் மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையின் வைத்தியருமான ஏ.காந்தநேசன், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந்தராஜா, கௌரவ விருந்தினர்களாக ஓய்வு பெற்ற அதிபர்களான அ.மு.அருணாசலம், சி.நாகையா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (48)

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் தா. அரியகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் கலந்துகொள்ளவுள்ளார். பரிசில்களை திருமதி இரஞ்சிதமலர் பிறேமகாந்தன் வழங்கவுள்ளார். (109)

(பருத்தித்துறை)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் ரி. நவரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர். சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ளார். பரிசில்களை திருமதி ஆர். சத்தியசீலன் வழங்கவுள்ளார். (109)

# நெடுந்தீவுப் பிரதேச மட்ட எல்லே
## சென். அன்ரனீஸ், உதயசூரியன் சம்பியன்







(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேச அணிகளுக்கிடையிலான எல்லே போட்டியில் சென். அன்ரனீஸ், உதயசூரியன் அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

நெடுந்தீவுப் பிரதேச செயலக விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக தற்போது பெருவிளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றது. இதில் ஆண்களுக்கான எல்லேப் போட்டி கடந்தமுதலாம் திகதி நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம் மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் சென். ஜோண்ஸ் அணியும், சென். அன்ரனீஸ் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே சிறப்பான முறையில் ஆடிய சென். அன்ரனீஸ் அணி 6-3 புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இதில் சென். அன்ரனீஸ் சார்பாக றஜீன் இரண்டு புள்ளிகளையும், ஜேக்கப், அருள்நேசன், திருக்குமரன், நிரோஜன் ஆகியோர் தலா ஒவ்வொரு புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்து அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தனர்.

பெண்களுக்கான இறுதிப்போட்டியில் அன்ரனீஸ் யூத் அணியும், உதயசூரியன் அணியும் மோதின. இதில் உதயசூரியன் அணி 03 : 02 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இதில் நிக்ச்லா இரண்டு, ஜசோதா ஒரு புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்து அணியின் வெற்றிக்குப் பக்கபலமாக இருந்தனர்.

இப்போட்டிகள் நெடுந்தீவுப் பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்தர் மயூரன் தலைமையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (93)

# கருவம்பானை புதிய சவாரித்திடல்

(கருவம்பானை)

கருவம்பானை பகுதியில் புதிய சவாரித் திடல் ஒன்று உருவாக்கப்பட்டு வருகின்றது. தமிழர்களின் வீர விளையாட்டுக்களில் ஒன்றான மாட்டு வண்டி சவாரித்திடல் குறித்த பிரதேசத்தில் இல்லாத குறை இதன் மூலம் நிறைவேற்றப்படவுள்ளது.

இளவாலைப் பகுதி இளைஞர்களின் முயற்சியின் மூலம் கருவம்பானைப் பகுதி அரச காணியொன்றில் இது அமைக்கப்பட்டு வருகின்றது.

இதற்கு தனிநபரொருவரின் ஒரு இலட்சம் ரூபா நிதியுதவியுடன் கனரக வாகனங்கள் மூலம் பற்றைகள் மண்மேடுகள் அகற்றப்பட்டு வருகின்றது.

இதேவேளை இப்புதிய சவாரித் திடலில் அடுத்த வார இறுதிப் பகுதியில் சவாரிப் போட்டியொன்று இடம்பெற ஏற்பாடாகியுள்ளதாக தெரிய வருகின்றது. இப் போட்டிகளுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இப்போட்டிகளை நடாத்துவதற்கு அளவெட்டி விவசாய சம் மேளனம் மற்றும் யாழ். மாவட்ட மாட்டு வண்டிச் சவாரிச் சங்கம் இணைந்து ஏற்பாடு செய்து வருகின்றன. இப் புதிய திடதில் மூலம் இவ் வருடத்திற்கான முதலாவது சவாரிப் போட்டி நடாத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (48)

விளையாட்டுச் செய்திகள்


# மென்பந்து கிரிக்கெட்

(கொக்குவில்)

கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படவுள்ள மென் பந்து கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம், கலைவாணி சன சமூக நிலையம் ஆகிய மைதானங்களில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட ரீதியாக நடைபெறவுள்ள இப்போட்டி அணிக்கு ஆறு பேர் கொண்டதாக இடம்பெறவுள்ளது. இப்போட்டியில் பங்குகொள்ளும் அணிகளை நாளை நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் 0775530753 அல்லது 0776188486 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# கிண்ணம் வென்றது மட்டுவில் ஐங்கரன்





சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட பிரதேச மட்ட கரப்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை மட்டுவில் ஐங்கரன் அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ். சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் சுதந்திர தினத்தினை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச அணிகளுக்கிடையிலான மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரை நடாத்தியது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மீசாலை சீமா அணியும், மட்டுவில் ஐங்கரன் அணியும் மோதின.

ஐந்து செட்களைக்கொண்டதாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் முதலிரு செட்களையும் மட்டுவில் ஐங்கரன்அணி கைப்பற்றி முன்னிலை பெற்றது. தொடர்ந்து மூன்றாவது செட்டைக் கைப்பற்றிய மீசாலை சீமா பதிலடி கொடுத்ததுடன் ஆட்டத்தில் விறுவிறுப்பை ஏற்படுத்தியது. இதன் பின்னர் ஆக்ரோஷம் கொண்டு செயற்பட்ட மட்டுவில் ஐங்கரன் நான்காவது செட்டை 25-20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று வெற்றி கிண்ணத்தைக் கைப்பற்றியது. இறுதியில் மட்டுவில் ஐங்கரன் அணி 3-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை வசப்படுத்தியது.

இப்போட்டி நிகழ்வில் சாவகச்சேரி நகர பிதா இ.தேவசகாயம்பிள்ளை, சாவகச்சேரி பிரதேச இராணுவ அதிகாரி மேஜர் பிரசன்ன, சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ. பி.டி பொன்சேகா, சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் விளையாட்டு அதிகாரி பி.சக்திவேல், வண. பிதா ஜோசப் பிரான்சிஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். (93, 48)

# கரவெட்டியில் இன்று கரப்பந்தாட்டப் போட்டி

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட இளைஞர் அணிகளுக்கிடையிலான கரப்பந்துப் போட்டி இன்றைய தினம் இமையாணன் யூத் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஆண்களுக்கான போட்டி காலை 8.00 மணி முதல் நடைபெறும் எனவும் பெண்களுக்கான போட்டி மாலை 3.00 மணி முதல் நடைபெறும் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக அணிகள் குறித்த நேரத்தில் வருகை தந்து போட்டிகளில் பங்குபற்றுமாறு கரவெட்டி பிரதேச இளைஞர் சேவை உத்தியோகஸ்தர் மனோராஜ் கேட்டுள்ளார். (48)

**'சாத்திரி' எனப்படும் ஸ்ரீகௌரிபால் புலிகளின் சர்வதேசப் பிரிவின் முக்கியஸ்தர்களில் ஒருவராக இருந்தவர். ஆரம்பத்தில் புலிகள் அமைப்பில் வெடி பொருள் பிரிவில் பணியாற்றியதால் 'சக்கை சியாம்' என அழைக்கப்பட்டவர். தற்சமயம் 'சாத்திரி' என்கிற புனைபெயரில் எழுத்துலகில் அறியப்படுபவர்.**

**பேட்டி கண்டவர்: அருளினியன்**


2

# சாத்திரி பேசுகிறேன்

**நீங்கள் விடுதலைப் புலிகள் அமைப்பிற்காக செய்த வேலைகளை கூறுங்கள்?**

புலிகள் அமைப்பில் இணைந்து இந்தியாவில் ஆயுதப் பயிற்சியை முடித்த பின்னர் இயக்கத் தலைமையால் தேர்ந்தெடுக்கப் பட்ட சிலரிற்கு வெடிபொருட்கள் பற்றிய விசேட பயிற்சிகள் கொடுக்கப் பட்டது. அதில் நானும் ஒருவன். அது





பற்றிய பயிற்சி முடிந்ததும் ஈழத்திற்கு திரும்பிய நாங்கள் புலிகள் அமைப்பின் மூத்த உறுப்பினரான வெடி பொருள் பிரிவிற்கு பொறுப்பாக இருந்த அப்பையா அண்ணையோடு இணைந்து மானிப்பாய் பகுதியில் ஒரு ஆயுத தொழிற்சாலையை உருவாக்கி அங்கு இயக்கத்திற்குத் தேவையான கண்ணி வெடிகள், கைக்குண்டுகள், பொறி வெடிகள் எறிகணைகள் என அனைத்து வெடி பொருட்களையும் தயாரிக்கத் தொடங்கியிருந்தோம். முதன் முதலாக ஒரு விமானத்தையும் தயாரித்து பரிசோதனை பறப்புக்களும் செய்திருந்தோம். பின்னர் 1987 ஆம் ஆண்டு இந்தியப் படையின் வருகையோடு விமானம் செய்யும் முயற்சிகள் கைவிடப் பட்டது மட்டுமல்ல அந்த தொழிற்சாலையும் இந்தியப் படைகளால் அழிக்கப்பட்டது. 89 ஆம் ஆண்டு காயமடைந்து நாட்டை விட்டு வெளியேறிய நான் வெளிநாட்டில் சிகிச்சை பெற்றுக் கொண்டு மீண்டும் புலிகளின் வெளிநாட்டு கட்டமைப்பு பிரிவில் முக்கியமாக வழங்கல் பிரிவில் இணைந்து வேலை தொடங்கியிருந்தேன்.

**புலிகளுக்கு யுத்தத்தை நடத்த தேவையான வருமானம் எங்கிருந்து வந்தது?**

அனைத்து இயக்கங்களினதும் ஆரம்ப கால தலைமறைவு வாழ்க்கை என்பது மிகவும் சிரமமானதாக இருந்தது. போராளிகள் தங்கள் பணத் தேவைகளை தங்கள் உறவுகள் மற்றும் குடும்பத்திலிருந்து பெற்றுக் கொண்டார்கள். பின்னர் உணவுத் தேவைகளை பூர்த்தி செய்யப் பண்ணைகளை அமைத்தார்கள். இயக்கங்கள் வளரத் தொடங்க நிதித் தேவை அதிகரித்தது. அப்போது வங்கிக் கொள்ளைகளிலும், அரச நிறுவனங்கள், செல்வந்தர் வீடுகள் என கொள்ளையடிக்கத் தொடங்கினார்கள். இதில் பிரபாகரன் கூட குட்டிமணியோடு இணைந்து குரும்பசிட்டி என்னுமிடத்தில் ஒரு தனியார் வீட்டில் கொள்ளையடித்துவிட்டு பிடிபடாமல் இருக்க ஒருவரை சுட்டுக் கொன்று விட்டு ஓடிய சம்பவமும் நடந்திருக்கின்றது.

ஆனால் எம் மக்கள் மத்தியில் இந்தக் கொள்ளைகள் இயக்கங்கள் மீதான வெறுப்பை விதைக்கத் தொடங்கியிருந்தது. அதனால் புலிகள் அமைப்பானது கொள்ளையடிப்பதை கைவிட்டுவிட்டு வேறு வழிகளில் நிதித் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக சுய உற்பத்திகளாக சவர்க்காரம், விளக்குமாறு, தும்புத்தடி, குளிர்பானங்கள் என உற்பத்தி செய்து விற்கத் தொடங்கியிருந்தார்கள். ஆனால் அவற்றின் தரம் குறைந்திருந்த காரணத்தால் மக்கள் அதனைப் பெரிதும் விருப்பத்தோடு வாங்கவில்லை. 84இல் ஒரு ரூபாய் சவர்க்காரத்தை விற்பதற்காக நான் ஒருவரோடு ஒரு மணித்தியாலத்திற்கு மேலாக பேசி உலக விடுதலைப் போராட்டங்கள் பற்றியும், நாம் ஏன் போராட வேண்டும் என்றும் நா வறண்டு போகுமளவிற்கு விளக்கம் கொடுத்தும் அவர் கடைசிவரை சவர்க்காரம் வாங்கவில்லை.

நிலைமை இப்படியாகத்தான் இருந்தது. அதே காலகட்டத்தில் தான் இந்தியா மற்றும் தமிழக முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர் போன்றவர்களின் உதவி புலிகளிற்கு பேருதவியாக இருந்தது.

ஆனால் புலிகளின் தேவைகள் அதிகரிக்க அவர்கள் உலகளாவிய ரீதியில் போதைப் பொருட் கடத்தலில் ஈடுபட்டு அந்த வருமானத்தில் கள்ளச் சந்தையில் ஆயுதங்களை வாங்கிக் குவிக்க ஆரம்பித்தனர். இலங்கையரசே உலக நாடுகளிடம் கடன் வாங்கி ஆயுதம் வாங்கிக் கொண்டிருந்த போது புலிகள் தங்கு தடையின்றி நவீன ஆயுதங்களை தங்கள் பணத்தில் வாங்கியதன் இரகசியம் இதுதான். அதே நேரம் வெளிநாடுகளிலும் பெரிய சிறிய வியாபார நிறுவனங்கள், கோயில்கள், பாடசாலைகள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள், வைத்திய சாலைகள் என வருமானம் வரும் அனைத்தையும் பினாமிப் பெயர்களில் புலிகள் இயக்கினார்கள். 94 ஆம் ஆண்டுகளிற்கு பின்னர் தான் புலம்பெயர் தமிழர்களிடம் இருந்து பெருமளவான நிதி சேகரிப்புக்கள் புலிகளால் மேற்கொள்ளப்பட்டது.

**விடுதலையின் பெயரால் மனித குலத்திற்கு எதிரான போதைப் பொருட் கடத்தலில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டது அறம் கிடையாது அல்லவா?**

புலிகளின் விடுதலைப் போராட்டம் என்பது முழுக்க முழுக்க ஆயுதத்தை யுத்தத்தை மட்டுமே நம்பியது. இங்கு யுத்தம் என்று வரும் போதே அங்கு அறம் அடிபட்டுப்போய் விடுகிறது. யுத்தத்திற்கான ஆயுதத்தை எதிரே நிற்பவனை கொன்று எடுத்தாலென்ன கண்ணுக்கு தெரியாத யாரோ ஒருவனை போதைக்கு அடிமையாக்கி அந்தப் பணத்தில் ஆயுதம் வாங்கினாலென்ன எல்லாம் ஒன்றுதான் என்ற மன நிலை இருந்தது. சுருக்கமாக சொன்னால் கொன்றால் பாவம் தின்றால் போகும் என்பதைப் போலத்தான் இதுவும்.

**விடுதலைப் புலிகளின் போதைப் பொருள் கடத்தலுக்கான உலகளாவிய வலைப்பின்னல் இன்று யாரின் கட்டுப்பாட்டில் உள்ளது?**

அந்த வலைப் பின்னல் புலிகள் அமைப்பானது 2001 ஆம் ஆண்டு தனது சர்வதேச அமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வந்த பின்னர் புதிதாக பொறுப்பெடுத்தவர்களின் விவேகமற்ற செயற்பாடுகளால் இன்று சர்வதேச உளவமைப்புக்களாலும், சர்வதேச போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவாலும் முற்று முழுதாக அழிக்கப்பட்டு விட்டதோடு அதன் பொறுப்பாளர்களும் இன்று பல நாடுகளிலும் கைது செய்யப்பட்டு சிறைகளில் வாழுகிறார்கள்.


**ஆரம்ப காலத்தில் புலிகள் அமைப்பால் செய்யப்பட்ட சகோதரப் படுகொலைகளை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

ஈழ விடுதலைப் போராட்டத்தின் தோல்விக்கான முதற்படியாக அமைந்த விவேகமற்ற பக்கங்கள் அவை. வேகம் மட்டுமே இருந்த இளைஞர்களான எங்களிடம் அன்று விவேகம் இருந்திருக்கவில்லை. சரியான வழிநடத்தல்கள் இருந்திருக்கவில்லை. இந்திய இலங்கை உளவுப் பிரிவுகளின் சூழ்ச்சிகளை சரியாக இனம் கண்டு அவற்றை முறியடிக்கும் ஆளுமை இருந்திருக்கவில்லை. இவற்றின் தொடர்ச்சியே சகோதரப் படுகொலைகளிற்கு காரணங்களாக இருந்தது. ஈழ விடுதலை இயக்கங்கள் தங்களிற்குள் மோதிக் கொள்ளாமல் ஓரணியில் நின்று இயங்கியிருந்தால் 86 ஆம் ஆண்டே தமிழீழம் கிடைத்திருக்கும். இன்னொரு விடயம் சகோதரப் படுகொலைகள் என்பது புலிகளால் மட்டுமல்ல அனைத்து இயக்கங்களாலுமே நடத்தப்பட்டது. ஆனால் புலிகள் அதனை அதிகமாகவும் மோசமாகவும் செய்தார்கள்.

(தொடரும்)

## யானைகள் பற்றி என்ன தெரியும்?

- யானையின் தந்தம் சுண்ணாம்பால் ஆனது.
- யானை நடக்கும் போது ஒரு டெசிபல் சத்தம் கூட கேட்காது.
- யானைக்கு பற்கள் 6 முறை விழுந்து முளைக்கும்.
- யானையின் காலடித் தடத்தின் குறுக்களவை 6 ஆல் பெருக்கினால் அந்த யானையின் உயரம் தெரிந்துவிடும்!
- காட்டு யானை எந்த மிருகத்தையாவது, மனிதனையாவது அடித்துக் கொன்றுவிட்டால், உடனே ஆற்றுக்கோ, குளத்துக்கோ போய், குளித்த பின்புதான் உணவு உட்கொள்ளும்.
- பெண் யானைக்கு மதம் பிடிப்பதில்லை.
- நான்கு கால் மிருகங்களிலேயே அதிகமான காலம் கர்ப்பமாக இருந்து பிரசவிப்பது யானைதான். 22 மாதங்கள் அல்லது அதற்கு மேலும்கூட கர்ப்பமாயிருந்து பிரசவிக்கும்.
- யானைக்குட்டி பிறக்கும்போதே இரண்டரையிலிருந்து மூன்றடி உயரமும், 200 இறாத்தல் எடையும் இருக்கும்.
- யானைக்குட்டிகளுக்கு அதன் தாய் மட்டுமே பால் கொடுப்பதில்லை. பாலுள்ள எல்லாப் பெண் யானைகளுமே பால் கொடுக்கும்.
- நீரில் வாழும் விலங்குகளில் மிகப் பெரியது நீலத்திமிங்கலம். நிலத்தில் வாழும் விலங்குகளில் மிகப்பெரியது யானை, யானையின் எடை 7 மெட்ரிக் தொன். நீலத்திமிங்கலத்தின் எடை யானையைப்போல் 20 மடங்கு. நீளமோ 30 மீற்றர்.




1834 ஆம் ஆண்டு. லண்டன் "வெஸ்ட் மினிஸ்டர்" அரண்மனை பெருந் தீ விபத்து ஏற்பட்டு அங்கே மணிக்கூண்டில் இருந்த பெரிய மணி எரிந்து நாசமாகிவிட்டது. புதிய மணிக்கூண்டு புதிய பெரிய மணியும் எழுப்புவதென்று பிரிட்டிஷ் பாராளுமன்றம் தீர்மானித்தது. பல ஆண்டுகள் உழை மணிக்கூண்டையும் கடிகாரத்தையும் உருவாக்கினார் அப்போதுதான் அதற்கு என்ன பெயர் சூட்டுவது என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் தீவிரமாக விவாதித்தனர். ஆளாளுக்கு ஒவ்வொரு பெயரைச் சொன்னார்கள். "மணிகளின் ராணி" என்று சிலர் கூற, வேறு சிலர் "விக்டோரியா" என்ற பெயரைச் சிபாரிசு செய்ய, ஒரு முடிவும் எட்டப்படாமல் விவாதம் நீண்டுகொண்டே போனது. அப்போது பொதுப்பணித்துறை ஆணையாளராக இருந்தவர் சேர்.பென்ஞமின் என்பவர். அவர் ஒரு பெயரைக் கூறி அதையும் பரிசீலிக்கச் சொன்னார். இந்த சேர்.பென்ஞமின் பயங்கர குண்டான மனிதர். எல்லோரும் அவரைச் செல்லமாக "பிக் பென்" (Big Ben) என்று அழைப்பார்கள்! விவாதத்தில் எந்த முடிவும் ஏற்படாமல் வெறுத்துச் சலித்துப்போன உறுப்பினர்கள், "பேசாமல் "பிக் பென்" என்றே பெயர் வைத்து விடலாம்!" என்றார்கள். அதைக் கேட்டு எல்லோரும் ஒரேயடியாய்ச் சிரித்தார்கள். கடைசியில் அந்தப் பெயரே நிலைத்துவிட்டது!

('அட்லாண்டிக் அட்வகேட்' நூலிலிருந்து)



# அரசின் இதுவரை கால ஆட்சிக்கு தேர்தல் ஒரு தெளிவான கண்ணாடி!

- சாலையூரான் -




ஆளும் தரப்புக்கு மிகவும் வலுச் சேர்க்கக் கூடியதும் அவ்வாறே இந்த ஆதரவில் சற்று தளம்பலான நிலைமையையும் கொண்ட தெற்கு, மேற்கு மாகாணங்கள் இம்முறை தேர்தலை எதிர்கொள்ள இருக்கின்றன.

ஜனாதிபதியின் பிறப்பிடமாகவும் அதன் வழி அபிவிருத்திக்கான ஒதுக்கீடுகளையும் கூடுதலாகப் பெற்றுக் கொண்ட மாகாணம் என்ற வகையில் தென்மாகாண சபையை அரசு கைப்பற்றிக் கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகமிருப்பதாக கூறப்படுகிறது.

மறுபக்கத்தில் பின்தங்கிய வரட்சியான மாகாணம் என்ற வகையில் உச்சம் பெற்றுவிட்ட விலைவாசி அதிகரிப்புக்களால் தென்மாகாண மக்களுக்கு அரசை நோக்கிய அதிருப்திகள் வலுப்பெறுவதற்கு வாய்ப்புகள் இருப்பதாகவும் ஒரு கருத்துக் கணிப்பு தெரிவிக்கிறது.

தெற்கில் இடம்பெற்ற அபிவிருத்திகள் மாகாணத்தின் உட்கட்டமைப்பு மற்றும் நகராக்க வளர்ச்சிக்கு உதவியுள்ளதே தவிர, அங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தொழில் முன்னேற்றங்களுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை இந்த அபிவிருத்திகள் வழங்கவில்லை என்றும் ஒரு கருத்து முன்வைக்கப்பட்டிருக்கிறது.

கூடவே, இம்முறை தேர்தலில் நடிகைகள் வேட்பாளர்களாக களமிறக்கப்பட்டிருப்பது, ஒரு வித்தியாசமான பதிவை மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கின்றன. இது குறித்த அபிப்பிராயத்தில் நடிகரும் விரிவுரையாளருமான ஜெயலால் ரோஹண இந்த நடிகைகள் வெற்றி பெற்றால் நாடுமுழுவதும் விபசார விடுதி ஆகிவிடும் என்றிருக்கிறார்.


கூடவே, நாட்டில் ஊடகத்துறை சுதந்திரமாக இயங்க முடியவில்லை என்பதான முறைப்பாடு அரசை நோக்கி தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டுவரும் நிலையில் தென்பகுதி பெண் ஊடகவியலாளர் ஒருவர் இந்த தேர்தல் சமயத்தில் குத்திக் கொல்லப்பட்டிருக்கிறார்.

இது ஒருபுறமிருக்க அண்மைக் காலங்களில் சில சிங்கள தீவிரவாத அமைப்புக்கள் முஸ்லிம்களுக்கெதிராக மேற்கொண்ட முன்னெடுப்புக்கள் இம்முறை தேர்தலில் அரசை நோக்கி தெளிவான ஒரு நிலைப்பாட்டை வரையறுத்துக் கொள்ள முஸ்லிம் தரப்புக்களை நிர்ப்பந்தித்திருக்கின்றன.

அதிகரித்த வாழ்க்கை செலவினங்களால் சாமானியக் குடிமக்களின் அத்தியாவசிய நுகர்வுகள் வெகுவாக மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில் குறிப்பாக மேல்மாகாண வர்த்தக சமூகம் தனது வர்த்தக விநியோக நடவடிக்கைகளில் ஒரு சீரான வளர்ச்சியை கொண்டிருக்க முடியாதுள்ள நிலைமைகளும் இம்முறை தேர்தலில் அரசுக்கான ஆதரவை மட்டுப்படுத்தி இருப்பதாகவும் அபிப்பிராயங்கள் வெளியாகி இருக்கின்றன.

தமிழ் அரசியல் தரப்புக்கள் வடக்கு தமிழர்களை முன்னிலைப்படுத்தி மேற்கொள்ளும் பிரசாரங்களால் கொழும்பு வாழ் தமிழர்களின் அரசியலை அரசுக்கெதிரானதாக மாற்றியமைக்கும் ஒரு போக்கு வலுப்பெற்றிருப்பதாகவும் கருத்துக்கள் வெளிப்பட்டுள்ளன.


இங்கு வாழும் தமிழர், முஸ்லிம்களுடன் ஒப்பிடும் போது புதிய தொழில் முயற்சிகளை முன்னெடுப்பதில் எதிர்கொள்ளும் நெருக்கடிகளால் சிங்கள முதலீட்டாளர்களில் இடைநிலை மற்றும் கடைநிலை முயற்சியாளர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டிருப்பதும் இம்முறை மேல்மாகாண சபை தேர்தலில் பாதிப்பை உருவாக்கும் என்பதை அவதானிகள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.



எல்லாவற்றுக்கும் மேலாக, மார்ச் ஜெனிவா கூட்டத் தொடரை முன்னிறுத்தி அரசை நோக்கி வளர்ந்திருக்கும் அனுதாப அலையை வாக்காக மாற்றிக் கொள்வதற்காகவே இந்த வருட இறுதியில் நடாத்த வேண்டிய இந்தத் தேர்தலை மார்ச்சில் நடாத்த அரசு தீர்மானித்துள்ளதாகவும் அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

எது எவ்வாறாயினும் பதவியிலுள்ளள அரசாங்கம் தனது இதுவரை கால ஆட்சி முறைமைக்கான தெளிவான பிரதிபலிப்பொன்றை இந்த இரு மாகாண சபைத் தேர்தல்களதும் முடிவுகள் காட்ட அதிகம் வாய்ப்பிருக்கிறது என்பது மட்டும் உண்மை.

# அறிவு மேதை நீலன் திருச்செல்வம்




1944 ஜனவரி 31இல் பிறந்த நீலன் திருச்செல்வம் தமிழீழ விடுதலைப் புலிகளினால் (எல்.ரீ.ரீ.ஈ) 15 வருடங்களுக்கு முன்பு 1999 ஜூலை 29இல் கொடூரமாகக் கொல்லப்பட்டார். அவர் மரணமடையும்போது அவருக்கு வயது 55.

எப்பொழுதும் நான் நீலனின் பாதுகாப்பை பற்றி அவரை எச்சரிக்கும் போதெல்லாம், அது விதிப்படி நடக்கும் ஒரு விடயம், வேண்டுகோளை தைரியமாக உதறித் தள்ளிய மிகச் சில தமிழர் களில் நீலனும் ஒருவர்.

இந்த நேசத் தொடர்பு முயற்சி 1988 வசந்த காலத்தின்போது நீலன் திருச்செல்வம் ஹாவர்ட்

- டி.பி.எஸ் ஜெயராஜ் கட்டுரையிலிருந்து. **1**

என்று சாவை பற்றிய அவரது அணுகுமுறை அமைந்திருந்தது. "அது நடக்கும்போது யாராலும் அதைத் தடுக்க முடியாது, நாங்கள் வெறுமே செய்ய வேண்டியதை செய்துகொண்டு போகவேண்டிதுதான்" என்று அவர் என்னிடம் ஒருமுறை சொன்னார்.

தான் எப்படி மர்ணமடையப் போகிறோம் என்கிற ஒரு முன்னுணர்வு அவருக்குள் இருந்தது போலத் தெரிகிறது. "இப்போது கொழும்பில் எண்ணிக்கையற்ற வாகனங்கள் உள்ளன. ஒவ்வொரு சந்தியிலும் வாகன நெரிசல் உள்ளது. என்னுடை வாகனம் அதில் அகப்பட்டால் அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் கேலிக்கூத்தாகவே முடியும். எனது பாதுகாப்பு கடமைகளுக்காக நிறுத்தப் பட்டுள்ள எந்தவொரு காவல்துறை உத்தியோகத்தராலும் எதுவும் செய்ய இயலாது" அவர் சொன்ன இந்த வார்த்தைகள் எவ்வளவு தீர்க்கதரிசனம் உள்ளவை. தனியான கொலையாளி றொஸ்மீட் இடத்தில் போக்குவரத்து நெரிசலில் சிக்கி நின்ற விட்ட வாகனங்களுக்கு இடையில் எளிதாக நகர்ந்து வந்து அவரது வாகனத்தின்மீது பாய்ந்து தன்னை வெடிக்க வைத்தான்

சில நொடிப்பொழுது ஏற்பட்ட கிறுக்குத் தனத்தால் சமகால தமிழ் அரசியலில் முன்னணியில் திகழ்ந்த ஒரு அறிவு மேதையை புலிகள் கொன்றுவிட்டார்கள். அவரது இழப்பால் ஏற்பட்ட வெற்றிடம் இன்னும் நிரப்பப் படவேண்டி உள்ளது. இந்தக் கட்டத்தில் முக்கியமாக உணரவேண்டியது, இலங்கைத் தமிழர்கள், சுக்கான் இல்லாத ஓட்டைப் படகிலிருந்து நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கையில், அந்தப் படகை பதுகாப்பாகக் கரைக்கு கொண்டு வர்க்கூடிய திறமையான மாலுமிகள் இல்லாத சூழ்நிலையில் உள்ளார்கள் என்பதை.

உலகின் ஒரு குடிமகனாக இருந்த போதிலும், நீலனின் ஒவ்வொரு உணர்வும் அவர் எங்கள் மக்கள் என அவர் குறிப்பிடும் தமிழ் மக்களின் நிர்க்கதியான நிலைமை பற்றிய ஆழமான உணர்வாகவே இருந்தது. அதே நேரம் நீலன் இன மேலாதிக்கம் கொண்ட ஒருவரல்ல, மற்றும் அனைத்துப் பிரிவினராலும் முற்றாக ஏற்றுக் கொள்ளத்தக்க இறுதியான ஒரு தீர்வு காணவேண்டும் என்பதை நன்கு அறிந்திருந்தார்.

தங்களுக்கு ஆதரவளித்து தங்களுக்காக வேலை செய்ய வேண்டும் என எல்.ரீ.ரீ.ஈ விடுத்த

பல்கலைக்கழகத் தில் வருகை விரிவுரையாளராக இருந்தபோது ஏற்பட்டது. முன்பு எல்.ரீ.ரீ.ஈ யின் சர்வதேச சட்ட ஆலோசகராகவும், தற்பொழுது நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தில் சுயபாணி பிரதம மந்திரியாகவும் இருக்கும் விஸ்வநாதன் உருத்திரகுமாரன், அப்போது ஹாவர்ட் சட்டப் பாடசாலையில் ஒரு மூன்றாம் நிலை மாணவராக இருந்தார். சட்டப்பாடசாலையில் உருத்திரகுமாரன் ஒரு இடத்தைப் பெறுவதற்கு நீலன் திருச்செல்வம்தான் காரணமாக இருந்தார். என்ன அப்போது உருத்திரகுமாரனுக்கு எல்.ரீ.ரீ.ஈயுடன் தொடர்புகள் இருக்கின்ற விஷயம் நீலனுக்குத்


Daily News
The Quality English Daily with the largest circulation in Sri Lanka
No fences and barriers to humanism and human values — page 9
Black July 1983: recollections of the repressed — page 18
Lanka's diverse attractions cruise into German cities

Dr. Neelan Tiruchelvam assassinated by LTTE suicide bomber

Ministers express

தெரியாது.

1988இல் பிரகாசமான ஒரு நாளில் உருத்திரகுமாரன், தனது 30களின் கடைசிகளில் உள்ள இனிமையான முகமுடைய ஒரு மனிதரையும் அழைத்துக் கொண்டு மாசசூசெட்ஸ், கேம்பிரிட்ஜில் இருந்த நீலன் திருச்செல்வத்தை காணவந்தார். அந்தச் சந்திப்பு நடந்து கொண்டிருந்த போதுதான் வந்திருக்கும் நண்பர், நியுயோர்க்கை தளமாகக் கொண்ட எல்.ரீ.ரீ.ஈ அமைப்பின் தலைவரான அருட்தந்தை தோமஸ் அமல்தாஸ் என்று நீலன் திருச்செல்வத்துக்கு தெரிய வந்தது. (தோமஸ் அமல்தாஸ், அமெரிக்க எல்.ரீ.ரீ.ஈ தலைவராக வெகு காலம் இருக்கவில்லை. மேலும் அவர் தனது குருத்துவ வாழ்க்கையையும் துறந்து விட்டார் மற்றும் அவர் தொழில் முறை வைத்தியரான ஒரு ரோமானியப் பெண்ணையும் மணம் செய்து கொண்டுள்ளார்.) அமல்தாஸ் எல்.ரீ.ரீ.ஈ மேடைகளில் முக்கிய நடிகராக விளங்கினார். அவர் நீலன் திருச்செல்வத்திடம் எல்.ரீ.ரீ.ஈக்கு ஆதரவளித்து பிரசாரம் மற்றும் சர்வதேச சட்டப்பணிகளில் நேரடியாக உதவும்படி வேண்டுகோள் விடுத்தார். எல்.ரீ.ரீ.ஈயினால் மேற்கொள்ளப்படும் இத்தகைய வேண்டுகோள்கள், மாபியா. கூட்டத்தில், "அவரிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது, அதை அவரால் தட்ட முடியவில்லை" என்று கூறும் விளக்கத்துக்கு சமன்.

நீலன் திருச்செல்வம் அதை மறுத்துவிட்டார், நிச்சயமாக மிகவும் பணிவுடன்தான் அதை மறுத்தார். அகிம்சை, ஜனநாயகம், மற்றும் அரசியலமைப்பு என்பனவற்றை தீவிரமாக நம்பும் நீலன் திருச்செல்வத்துக்கு, எல்.ரீ.ரீ.ஈ மற்றும் அதன் செயற்பாடுகள் யாவும் வெறுப்புக்குரியனவாகவே தோன்றின. அவர் ஒருபோதும் எல்.ரீ.ரீ.ஈயுடன் ஒத்துப்போக விரும்புவதற்கு நிச்சயமாக வழியில்லை. உருத்திரகுமாரன் அமல்தாஸை கூட்டிவந்து ஒரு ஆச்சரியமான ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கியிராவிட்டால் தான் ஒருபோதும் அமல்தாஸை சந்தித்திருக்க முடியாது என்று நீலன் என்னிடம் சொன்னார். ஆனால் நீலன் திருச்செல்வம் உருத்திராவை கண்டிக்கவில்லை. உருத்திரகுமாரன் மற்றும் அமல்தாஸ் ஆகியோர், எல்.ரீ.ரீ.ஈயின் அழைப்பை நீலன் திருச்செல்வம் நிராகரித்ததை என்னிடம் உறுதிப்படுத்தினார்கள்.

பின்னைய வருடங்களில் எல்.ரீ.ரீ.ஈ தன்னை இலக்கு வைத்திருப்பதை அவர் அறிய நேர்ந்தபோதும் அவர் அவர்களை விமர்சிக்கவில்லை.

அவர் யாரையும் கடிந்து பேசியதில்லை, எல்.ரீ.ரீ.ஈ விடயத்தில் அவர்களின் முற்று முழுதான இலக்கு மற்றும் முறைகளை பூரணமாக எதிர்த்த போதிலும் நீலன் திருச்செல்வம் அதன் அங்கத்தவர்கள் மீது அளவற்ற அனுதாபம் கொண்டிருந்தார். இந்த இளைஞர்கள் நடைமுறைக்கு ஒவ்வாத மற்றும் அடையமுடியாத ஒரு இலட்சியத்துக்காக தங்கள் உயிர்களை வீணாக மாய்த்துக் கொள்கிறார்க்ள் என அவர் கருதினார்.

தமிழர்களின் துயரம் நிறைந்த இக்கட்டான நிலையை முக்கியமான தமிழர்கள் பலர் விரும்பியோ அல்லது விரும்பாமலோ கண்டும் காணாததுமாக இருப்பதைப் போலல்லாது, அதில் அதிக அக்கறை கொண்ட மனிதராக நீலன் திருச்செல்வம் விளங்கினார். அரசியல் பம்மாத்து அவரது பண்புகளில் ஒன்றாக இல்லாதபடியால், தமிழ் ஈழத்தை நிறுவுவது நடைமுறைக்கு ஒவ்வாதது அல்லது அடையமுடியாதது என்பதை நீலன் திருச்செல்வம் உணர்ந்திருந்தார். ஒரு வன்முறைப் பிரசாரத்தினூடாக அத்தகைய ஒரு கானல் நீரை பின் தொடர்வது தமிழர்களுக்கு நீண்டகால துன்பத்தையே ஏற்படுத்தும் என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

## மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு

# ஏனிந்த ஆடம்பர அர்த்தமற்ற ஆசை

அண்மைக்காலமாக பல பாடசாலைகள் அழைப்பிதழ்களை ஆங்கிலத்தில் வெளியிடும் மோகம் தலைதூக்கியுள்ளது. ஏனிந்த அர்த்தமற்ற ஆடம்பர ஆசை என்பதுதான் எவர்க்கும் புரியவில்லை. விழாவுக்கு வரும் விருந்தினர்கள் அனைவரும் தமிழர்களாக இருக்கும் அதேவேளை, அர்த்தமற்ற முறையில் ஆங்கிலத்தில் அழைப்பிதழ்களை வெளியிடுவது என்பது கல்விப்புலமே. சமூகத்திற்கு கற்றுக் கொடுக்கும் மாறான நடைமுறையாக உள்ளது.

இது தொடர்பாக ஓர் விருந்தினர் விமர்சனம் ஒரு பாடசாலையில் இடம் பெற்றது. கட்டட நிதி உதவி செய்தமைக்காக ஓர் மேலைத்தேச நாட்டு பிரதிநிதியை ஓர் பாடசாலை அழைத்திருந்தது. அவர் தனது சிறப்புரையில் அழைப்பிதழை தனக்கொருவனுக்காக ஆங்கிலத்தில் அச்சிட்டமைக்கு அதிபருக்கு நன்றி கூறி விட்டு, தன்னைத்தவிர விழாவில் கலந்து கொண்ட 500 இற்கும் மேற்பட்டோரின் நிலை என்ன என்பதனையும், அதிபரிடம் பகிரங்கமாக வினாவினார்.

இதை விடக் கேவலமான ஓர் கேள்வி அந்த அதிபருக்கு வேறெதுவுமில்லையென அந்தச் சபையினரால் பலமாக பேசப்பட்டது.

இது ஒரு புறமிருக்க, சபையில் வேற்று மொழியினர் எவரும் இல்லாத இடங்களில் கூட விழாவிற்கான அழைப்பிதழ்களை ஆங்கிலத்தில் அச்சிடப்படுகின்றது என்பது அந்த மேலைத்தேய நாட்டு விருந்தினருக்கு தெரியாது போய் விட்டது. பாவம் தனக்காக அது அடிக்கப்பட்டது என அவர் நினைத்தமை பாடசாலை கௌரவத்தை ஓரளவிற்கேனும் பாதுகாத்துள்ளது.

ஆங்கிலத்தை அழைப்பிதழில் கற்பிக்க இவர்கள் முற்படுகின்றனரா? அல்லது பாடசாலை சமூகம் ஆங்கிலத்தில் மூழ்கியுள்ளது என்பதனைக் காட்ட முற்படுகின்றனரா? அல்லது அதிபருக்கு ஆங்கிலம் தெரியுமென்பதைக் காட்ட முனைகின்றனரா? எதுவுமே புரியவில்லை. விருந்தினர்கள் அனைவரும் தமிழர்களாக இருக்கும் போது இடம், நேரம், காலம் என்கின்ற செய்தியை தெளிவுபடுத்தும் அழைப்பிதழ்களை ஆங்கிலத்தில் வெளியிடுவது எந்த வகையில் ஏற்புடையது.

> ஆங்கிலத்தை அழைப்பிதழில் கற்பிக்க இவர்கள் முற்படுகின்றனரா? அல்லது பாடசாலை சமூகம் ஆங்கிலத்தில் மூழ்கியுள்ளது என்பதனைக் காட்ட முற்படுகின்றனரா? அல்லது அதிபருக்கு ஆங்கிலம் தெரியுமென்பதைக் காட்ட முனைகின்றனரா? எதுவுமே புரியவில்லை.

இது அதிபர் ஆசிரியர்களின் சுயவிருப்பமென கூறமுடியாது. பாடசாலை என்பது பொதுநிறுவனம் கல்வியறிவு குறைந்த பெற்றோர்களும் விருந்தினர்களாக கலந்துகொள்ள வேண்டிய இடம்.

அர்த்தமற்ற ஆடம்பர சுயவிருப்புக்களை அதிபர், ஆசிரியர்கள் அரங்கேற்ற முடியாது. ஆங்கில அறிவு என்பது தேவை தான் அதன் முக்கியத்துவம் பாடசாலையூடாக புகட்டப்பட வேண்டிய ஓர்விடயம் தான். ஆனால் அதற்கு அழைப்பிதழ்களா கிடைத்தன? மொழிமாற்றத்தால் கலந்துகொள்ள வேண்டிய பெற்றோர்கள் எத்தனை பேர் கலந்து கொள்ளாத நிலை உருவாகி இருக்கும். பாடசாலை சமூகங்கள் இதைச் சிந்திக்க வேண்டும்.

அரசினர் தமிழ்க்கலவன பாடசாலையென ஆங்கிலத்தில் போடுவது எத்தகைய அசிங்கமான செயற்பாடு என சிந்தித்துப் பாருங்கள் தமிழ்க்கலவன் பாடசாலையாக இருந்தும் கூட ஆங்கிலத்தில் அழைப்பிதழ் வருவது எந்த வகையில் ஏற்புடையது சிந்தித்து செயற்படுங்கள் அர்த்தமற்ற ஆடம்பர அழகுகளை மேற்கொண்டு வருவதற்காக அநாகரீக முறைகளை நாடாதீர்கள்.

இது ஒரு புறமிருக்க ஒரு சில பாடசாலை மாணவர் வரவின்மைக்கான காரணக் கடிதத்தைக் கூட ஆங்கிலத்தில் கொண்டுவர வேண்டுமென பணிக்கப்படுகிறது என்ன கொடுமையிது ஏன் ஆசிரியர் வெள்ளைக்காரரீச்சரா ? தமிழ் தெரியாதா? இதனால் பல பிள்ளைகள் பெற்றோரின் மனநிலையைப் பாதிக்கின்றார்கள். குடும்பத்தில் பல குழப்பங்களோடு கண்ணீர்கள் பல மிச்சமாகின்றது இதற்கு பாடசாலை சமூகங்கள் காரணமாக இருககின்றன. சில பாடசாலைகள் இவ்வாறு ஆங்கிலத்தில் கடிதங்களை எதிர்பார்காதபோதும் பிள்ளைகள மற்றைய பிள்ளைகளுடன் ஒப்பிட்டு தானும் ஆங்கிலத்தில் கொண்டு வரவேண்டுமென சட்டம் போடுகின்றது. ஆனால் அனைவரும் தமிழில் தான் கடிதம் கொண்டுவர வேண்டுமென கூறப்படும் போது இந்தப் பிரசசினையில இருந்து விடுதலை பெறமுடியும்.

- *வெண்கட்டியன்*



# புதிர்ப் போட்டி 74



*புதிர்ப்போட்டி 74 இற்குரிய விடைகள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 20.02.2014*

**அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.**

### விடை தருக

01) ஒரு சோடி சப்பாத்தின் எடை 0.5 kg (கிலோகிராம்) தோல்பை ஒன்றின் எடை 3.5 ஒரு பெட்டியில் 6 சோடி சப்பாத்துகளும் மற்றொரு பெட்டியில் 4 தோல்பைகளும் பொதி செய்யப்படுகின்றன. சப்பாத்துக்கள் பொதி செய்யப்பட்ட 15 பெட்டிகளும் ஒரு வாகனததில் ஏற்றப்பட்டால் அவற்றின் தேறிய எடை என்ன? (.........................)

02) காந்தியின் மாதச் சம்பளம் 2500 ரூபாய் மார்ச் மாதத்தில் மேலதிக வேலையை செய்வதன் மூலம் அவர் 1500 ரூபாய்த் தொகையைச் சம்பாதிக்கிறார். இத் தொகையானது அவருடைய ஆண்டு சம்பளத்தில் எத்தனை சதவீதமாகும்? (.........................)

03) தனியார் வாகனமொன்று நகர்ப் பிரதேத்தில் மணித்தியாலயத்திற்கு 48 கதியிலும் புறநகர்ப்பிரதேசத்தில் மணித்தியாலயத்திற்கு 60 கதியிலும் கிராம பிரதேசத்தில் மணித்தியாலயத்திற்கு 80 கதியிலும் பிரயாணம் செய்கின்றது இவ் வாகனமானது நகர்ப் பகுதிகளுடாக 4 மணித்தியாலயங்களும் கிராம பகுதிகளுக்கூடாக 2 மணித்தியாலயங்களும் பிராயணஞ் செய்திருந்தால் அது பிராயணஞ் செய்த மொத்த தூரம் எவ்வளவு? (.........................)

04) மணித்தியாலத்திற்கு 40 கதியில் செல்லும் வாகனமொன்று ஒரு லீற்றர் பெற்றோலில் 20 (கிலோமீற்றர்) பயணஞ் செய்கையில் அது ஒரு லீற்றருக்கு பிராயணம் செய்கின்ற துாரத்தில் 10 சதவீதம் குறைகின்றது 11 லீற்றர் பெற்றோலைப் பயன்படுத்தி இவ் வாகனத்தினால் 50 கதியில் எத்தனை கிலோமீற்றர் துாரம் செல்லலாம்? (.........................)

### சென்ற வார விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 நி | ரு | 2 ப | ம் | ■ | 3 லே | 4 ச | ர் |
| க் | ■ | க் | ■ | 5 ப | சு | மை | ■ |
| 6 க | க் | கு | 7 வா | ன் | ■ | 8 ய | 9 தி |
| ல் | ■ | 10 வ | தி | ■ | 11 க | ல் | வி |
| ■ | 12 அ | ம் | ச | ம் | ■ | ■ | நெ |
| 13 ம | கி | ■ | ன் | ■ | 14 த | 15 ர | கு |
| 16 | ம் | 17 பி | ■ | 18 பா | வி | க | ம் |
| ■ | 19 சை | ரி | க | ம் | ■ | ளை | ■ |

**மாணவர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்! புதிர்பபோட்டி விடைகளுடன் உங்களது போட்டோப் பிரதி ஒன்றையும் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.**

### சரியான விடை எழுதி பாராட்டுப்பெறுபவர்கள் விபரம்

பெயர்:- சி.தேனுஜான்
பாடசாலை :- யா/ பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்.

பெயர்:- ம.யோதீஸ்வரன்
பாடசாலை :- யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.

பெயர்:- பி.திவ்யா
பாடசாலை :- யா/ இந்து மத்திய மகா வித்தியாலயம்.

பெயர்:- க.தாட்சாயினி
பாடசாலை :- யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை.

### அனுப்பவேண்டிய முகவரி

*புதிர்ப்போட்டி இல*
*தினமுரசு*
*இல. 373, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

### விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப்பெயர்:- ----------------------------------------

பாடசாலையின் பெயர் :- ----------------------------------------

தரம் :- ----------------------------------------

தொலைபேசி இல :----------------------------------------

முகவரி :- ----------------------------------------

# அடிப்படை வசதிகள் இன்றிவாழும் மன்னார் சேவாலங்கா கிராம மக்கள்

(மல்லாவி)

மன்னார் மாவட்டத்தின் வெள்ளாங்குளம் கணேசபுரம் சேவாலங்கா கிராம மக்கள் அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் மிக கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

வெள்ளாங்குளம் சந்தியிலிருந்து சேவாலங்கா கிராமத்துக்கு 6கிலோ மீற்றர் தூரம் செல்லவேண்டிய நிலையில் எவ்வித போக்குவரத்து வசதிகளும் இல்லாமல் இக்கிராம மக்கள் தனியார் வாகனங்களிலும், மணல் ஏற்றிச்செல்லும் வாகனங்கள் மற்றும் உழவு இயந்திரங்களிலுமே பயணத்தை மேற்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து மீள்குடியேறியுள்ள இக்கிராம மக்கள் வாழ்வாதார ரீதியாக கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படும் நிலையில் வீட்டுத்திட்டம் மின்சாரம் குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கூட தமக்கு வழங்கப்படவில்லை என இக்கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இக்கிராமத்தில் கல்வியை மேற்கொள்ளும் பாடசாலை மாணவர்களும் நீண்ட தூர நடைபயணத்தை மேற்கொண்டே கல்வியை கற்கும் அவலநிலை காணப்படுவதாகவும் இக்கிராம மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.


400இற்கும்மேற்பட்ட குடும்பங்கள் இக்கிராமத்தில் வாழ்ந்து வரும் நிலையில் வாழ்வாதாரத்துக்கான தொழில் நடவடிக்கை, பொருட்கள் கொள்வனவு, வைத்தியசேவை போன்றவற்றுக்கு நகர்ப்பகுதிக்கே வரவேண்டிய நிலை காணப்படுவதாகவும் பேருந்து சேவைகள் இல்லாமை பாரிய குறைபாடாக இருப்பதாக இக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இக்கிராமம் தாட்டை அண்டியதாக அமைந்துள்ளதால் யானைகளின் அட்டகாசத்திற்கும் முகங்கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கும் மக்கள் வலைப்பாட்டு வீதியூடாக வவுனியா செல்லும் பேருந்துகள் இக்கிராமத்துக்கூடாக செல்கின்ற போதிலும் அதிகாலை 6 மணிக்கும் மாலை 5 மணிக்கும் என இருசேவை இடம்பெறுவதால் அதில் பயன் ஒன்றும் இல்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வரும் இக்கிராம மக்களின் வாழ்க்கைத்தரத்தினை கருத்தில் கொண்டு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவ முன்வரவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(140)

# வறிய குடும்பத்துக்கு உதவி



(மானிப்பாய்)

அமரர் இராசையா நித்தியானந்தன் (கிராம அலுவலர்) ஞாபகார்த்த நிகழ்வு அண்மையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச செயலர், பிரதேசத்தினைச் சேர்ந்த பிரமுகர்கள், மற்றும் பிரதேச செயலக அலுவலர்கள் நினைவுரைகள் ஆற்றினர்.

நிகழ்வினைத் தொடர்ந்து அன்பர்களின் உதவியுடன் வறுமை நிலையில் உள்ள சில குடும்பங்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டன. போரில் குடும்பத்தலைவரை இழந்த ஒரு குடும்பத்திற்கு ரூபா ஒருஇலட்சத்திற்கான நிலையான வைப்பு - சேமிப்புச் சான்றிதழ வழங்கப்பட்டது. மூன்று மாணவர்களுக்கு கல்விச்செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கில் துவிச்சக்கர வண்டிகளும், ஆறு குடும்பங்களுக்கு உணவுப்பொருட்களும் (உலர் உணவுகள்) வழங்கப்பட்டன.

(48)

# விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொது நூலகம் சனசமூக நிலைய ஆண்டு விழாவினை முன்னிட்டு நடாத்தப்படும் வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கான பொது அறிவுப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டியானது தரம் 5 தொடக்கம் 13 வரையான மாணவர்களுக்கு நடாத் தப்படவுள்ளது.

பாடசாலை மாணவர்கள் விரும்பினால் நூலகத்தினூடாகவும் வெளிவாரியாக பங்குபற்றமுடியும். பரீட்சையானது பொது அறிவு, பொது உளச்சார்பு, மொழித்திறன் ஆகிய பாடங்களில் இடம்பெறவுள்ளன. போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முனபாக இணுவில் பொது நூலகம், சனசமூக நிலையம், மானிப்பாய் வீதி, இணுவில் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். பொது அறிவுப் போட்டிகள் மார்ச் மாதம் 2ஆம் திகதி ஞாயிறுக்கிழமை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

(63)





**வடமாகாண கலாசார திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச கலாசார பேரவை நடாத்தும் கோயில் நகரம் இறுவட்டு வெளியீட்டு விழா அண்மையில் செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா உள்ளிட்ட விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் மாணவர்களின் இசை நிகழ்வையும் காணலாம். (68)**




## மக்களின் தெரிவுகளும் மறுதுருவக் குழப்பங்களும்

கடந்த மகாணசபைப் பொதுத் தேர்தலில் பல்வேறு எதிர்பார்ப்புகளின் மத்தியில் ஒருமித்த குரலாக வடபகுதி மக்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களித்தார்கள். முன்பின் முரணான கசப்பான சம்பவங்கள் தெரிந்தும் கூட அரச எதிர்ப்பை வெளிப்படுத்த மாற்றுவழி இல்லாத கட்டத்தில் மக்கள் தெரிவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் வெற்றி பெற்றார்கள்.

இவ்வெற்றியின் பின்னணியில் பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. பல்வேறு தீர்வுகள் முன்மொழியப்பட்டன. அத்தனையும் பகற்கனவாகி காலங்கள் உருண்டோடி இருக்கும் இந்தக் கணப்பொழுதில் மீண்டும் கூட்டமைப்புக்குள் பூகம்பம் வெடிக்க ஆரம்பித்துள்ளது. ஒரு துருவத்தில் ஆனந்தசங்கரி எதிர்ப்பு அணியை உருவாக்கும் திட்டத்தை வைத்து எச்சரிக்கின்றார். மறுதுருவத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளரான முதலமைச்சரே கூட்டமைப்பு உறுப்பினர்களின் மக்கட்துரோகங்களை மனந்திறந்து பேசுகின்றார்.

முதலமைச்சரால் முடியாத நிலை உருவாகி வருகின்றது. துரோகங்கள் மலிந்த தூரதேச அரசியல்களை அனுபவத்தில் ஆங்காங்கே தற்போது அறிந்து வருகின்றார். அந்தஸ்தில் உயர்ந்த மனிதன், அரசியலில் புதிதாக நுழைந்த மனிதன், கூட்டமைப்பின் குத்துக்கரணங்களைப் பொறுக்காது திண்டாடுகின்றார். எங்குபோய் முடியப்போகின்றதோ தெரியவில்லை எமது சந்ததியின் எதிர்காலம்.

கடந்த தேர்தல்களில் மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்கி அதனூடாக மக்களின் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் எம்மில் பலர் வழங்கிய வாக்குறுதிகளை இதுவரை நிறைவேற்றவில்லை என்று வடமாகாண சபை முதலமைச்சர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

வடக்கில் மக்களின் பிரதிநிதியாக நாடாளுமன்றுக்கும் மாகாண சபைக்கும் தெரிவாகிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மீண்டும் அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்களே தவிர மக்கட் தேவைகளை வாக்குறுதிக்கேற்ப நிறைவேற்ற எவரும் தயாராகவில்லை என்பதை பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்டிருக்கின்றார்.

மக்கள் மயப்பட்ட அரசியல் கொள்கைகளில் மிகக் கேவலமான ஓர் நிலையில் வடபகுதி மக்களின் அரசியல் சிந்தனை இருப்பதற்கு இது ஓர் சிறந்த உதாரணம். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஓர் கட்சிசார் முதலமைச்சரே எமது உறுப்பினர்கள், கட்சிக்காரர்கள் சீராக தொழிற்படவில்லையென மக்களிற்கு விளங்கப்படுத்தும் அளவிற்கு மக்களின் அரசியல் சிந்தனைகள் மறுதுருவங்களை சிந்திக்க மறுக்கின்றது. எனின், எமது சந்ததி அரசியல் எதிர்காலம் எங்குபோய் முடியப் போகின்றது என்பதை எல்லோரும் சிந்திக்க வேண்டும்.

மாகாணசபை உறுப்பினர்கள் சுயலாபு அரசியலிற்காக வெவ்வேறு துருவங்களில் நகர்வது ஒருபுறமிருக்க தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரி பகிரங்க மடல்கள் பலவற்றை தலைவர் சம்பந்தர் ஐயாவிற்கு எழுதிய வண்ணம் உள்ளார்.

ஜெனிவாவில் நடந்து முடிந்த மனித உரிமை ஆணைக்குழுவின் அமர்வுகளில் கூட்டமைப்பு கலந்து கொள்ளாத துரோகங்கள் உட்பட பல துரோகங்களை மக்களிற்கு தமிழரசுக்கட்சி செய்து வருவதாக கூறிவரும் ஆனந்த சங்கரி இது தொடரும் பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஓர் எதிர்ப்பு அணி உருவாகும் என எச்சரித் துள்ளார்.

எந்தக் காரியத்திலும் சுயதீனமாக சம்பந்தர் தொழிற்படுவதாக கூறும் ஆனந்தசங்கரி, கூட்டமைப்பு சார்பான பல பொட்டுக் கேடுகளை தானும் வெளியிட வேண்டிய நிலைவருமென மிரட்டியுள்ளார்.

இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்கின்ற போது தமிழ் மக்களை சுத்த மடையர்களாகவே அனைவரும் நினைத்து தொழிற்படுகின்றனர் என்பது மட்டும் தெளிவாகின்றது.

**குட்டக்குட்டக் குனிந்தால் குனியக்குனிய குட்டுவதற்கு பலர் காத்திருப்பதில் தப்பில்லைத்தானே.**

சிங்களப் பேரினவாதமென்று மார்புதட்டி மமதைகொள்வதை இனியாவது விட்டுவிட்டு எமக்குள் இருந்து எம்மையே அழிக்கும் துரோகிகளை முதற்கண் மக்கள் இனம் காணவேண்டும். அர்த்தமற்ற இனவாத சிந்தனைகளிற்கப்பால் ஆழக்கடல் அலையொன்று அழிக்க எம்மைச் சூழ உள்ளது. அதை இனம்காண்பதே ஆரோக்கியமான மறத்தமிழரென மார்புதட்டும் அரசியல் பண்பு. **- வெண்கட்டியன்.**

# மாணவர்களுக்கு தனியார் பேருந்துகளில் அரைவாசிக் கட்டணத்தில் முற்கொடுப்பனவு அட்டை

## இலங்கை போக்குவரத்து ஆணைக்குழு தகவல்

எதிர்காலத்தில் அமைச்சரவை அனுமதியுடன் பாடசாலை மாணவர்களுக்கு "சிசு செரிய" திட்டத்தின் ஊடாக அமைச்சரவை அனுமதியுடன் அரைவாசி கட்டணத்திலான முற்கொடுப்பனவு அட்டையும் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற, தனியார் பேருந்துகளுக்காக இலத்திரனியல் முற்கொடுப்பனவு அட்டையை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் கலந்து உரையாற்றிய போதே அதன் தலைவர் ரொஸான் குணவர்தன இந்த கருத்தை வெளியிட்டார்.

பொதுப்போக்குவரத்தை நாடும் 80 சதவீதமான மக்கள் 70 சதவீதம் தனியார் பேருந்துகளிலேயே பயணிக்கின்றனர்.


சுமார் 23 ஆயிரம் பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதன்போது, முறையான கட்டணங்கள் செலுத்தப்படாமலும், எஞ்சிய பணமோ, பற்றுச்சீட்டோ வழங்கப்படாமல் அசௌகரியங்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

இந்த முற்கொடுப்பனவு அட்டை காரணமாக பேருந்து உரிமையாளர்களுக்கும் 20 சதவீதத்திற்கும் அதிகமான நிதிசேமிப்பு கிடைக்கின்றது என்றார்.

# பல்கலைக்கழகக் கனவுடன் மாணவர்களை வளர்க்க வேண்டும்

## வடமாகாணசபை உறுப்பினர் தவநாதன் ஆலோசனை



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள யாழ்.பல்கலைக் கழத்தினை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளும் அளவுக்கு பாடசாலைகளின் கல்வித்தரம் மேம்பட வேண்டும் என ஈ.பி.டி.பி வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கரியாலை நாகபடுவான் இலக்கம் 2 பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வித்தர மேம்பாடு தற்போது பாரிய சவாலை எதிர்கொண்டுள்ள நிலையில், மாணவர்கள் கல்விக்காக அலைந்து திரிகின்ற சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. இருப்பினும், எமது சமூகத்தின் அடித்தளத்தை பலப்படுத்த வேண்டும் என்ற கொள்கையில் உறுதியுடனும் அதற்கான ஒரே வழி கல்வி மேம்பாடே என்ற இலக்கிலிருந்தும் நாம் விலகப் போவதில்லை. அந்த இலக்கை எட்டுவதற்காக நாம் பல சவாலகளுக்கு முகம் கொடுத்தபோதும் உறுதியுடன் உழைத்து வருகிறோம். அதன் ஒரு அங்கமாகவே கிளிநொச்சியில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக் கழக பீடங்களின் உருவாக்கம் அமைந்துள்ளது.

இந்த பல்கலைக்கழகத்தின் உருவாக்கத்திற்காக 560 ஏக்கர் காணியை பெற்றுக்கொள்வதில் நுட்பமான அரசியல் வழிமுறை கையாளப்பட்டுள்ளது. அத்தோடு இப் பல்கலைக்கழகத்தில் விவசாயம் மற்றும் பொறியியல் பீடங்கள் மட்டுமன்றி மேலும் சில பீடங்களின் உருவாக்கத்திற்கும் அதனை யாழ். பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி வளாகமாக மாற்றுவதற்கும் உறுதி மொழிகள் பெறப்பட்டுள்ளன.

இவை அனைத்தையும் நாம் ஒரு சரியான அரசியல் நகர்வினூடாகவே சாத்தியமாக்கியுள்ளோம். எமது எதிர்கால சந்ததியினரின் மேம்பாட்டை இலக்காகக் கொண்டே இவற்றை செயற்படுத்தியும் வருகின்றோம் எனவும் தெரிவித்தார். அத்தோடு உருவாக்கம் பெறும் இப்பல்கலைக்கழகத்தினை எமது மாவட்ட மக்கள் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மாவட்டத்தின் நகரங்கள், கிராமங்கள் என்று வேறுபாடின்றி அனைத்து பகுதிகளில் இயங்கும் பாடசாலைகளிலும் மாணவர்கள் பல்கலைக்கழக கனவுகளுடன் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அதற்காக ஆசிரியர்களும், பெற்றோர்களும் உழைக்க வேண்டும் என்றார்.

வித்தியாலய அதிபர் திருமதி நகுலேஸ்வரனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பூநகரிக்கோட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் தருமரத்தினம், டொன்பொஸ்கோ நிறுவன இயக்குநர் அருட்தந்தை செபஸ்ரியான், முழங்காவில் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி குமணன், ஓய்வுபெற்ற அதிபர்களான கனகலிங்கம் மற்றும் இரவீந்திரன் ஆகியோரும், மற்றும் அயற்பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# வெளிவிவகார அமைச்சரிடம் சரியான திட்டங்கள் இல்லை

## ராவண பலய அமைப்பு குற்றச்சாட்டு



(கொழும்பு)

இந்நாட்டின் வெளிவிவகார அமைச்சில் எந்தவொரு கொள்கையும், சரியான திட்டங்களும் இல்லை என ராவண பலய பொதுச் செயலாளர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கைக்கு எதிராகச் சாட்சியமளிப்பவர்கள், சூழ்ச்சியாளர்கள் இந்நாட்டில் இருப்பதற்கு அனுமதியளிக்கப்படக் கூடாது.

சர்வதேசத்திலிருந்து எழுகின்ற அழுத்தங்களுக்கு ஆதரவாக எங்கள் நாட்டுத் தூதுவர்கள் சிலர் இருப்பது பெரும் தலையிடியாக இருக்கின்றது.

பிரச்சினைக்குள் சிக்கிக் கொண்டுள்ள கால கட்டத்தில் அரசாங்கம் உடனடியாக வெளிவிவகார அமைச்சரை பதவிவிலக்கி, புதியதொரு வெளிவிவகார அமைச்சரை நியமிக்க வேண்டும என்றார்.

# சட்டவிரோதமாக இடம்பெற்ற 9 தேர்தல் பிரசார ஊர்வலங்கள்

## கபே அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

சட்டவிரோதமான 9 தேர்தல் பிரசார ஊர்வலங்கள் நேற்று முன்தினம் கண்காணிக்கப்பட்டதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் குற்றஞ் சாட்டியுள்ளன.

பேருவளை, கட்டுநாயக்க, கடவத்தை, காலி மற்றும் அக்மீமன பகுதிகளில் சட்டவிரோத ஊர்வலங்கள் இடம்பெற்றதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

மேல் மற்றும் தென் மாகாண சபைகளின் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று முன்தினம் நிறைவடைந்த பின்னர் இந்த சட்டவிரோத ஊர்வலங்கள் நடத்தப்பட்டன.

பொது மக்களுக்கு பெரும் இடையூறாக வாகனப் பேரணிகள், ஊர்வலங்கள் நடாத்தப்பட்டமை மற்றும் ஒலிபெருக்கி பயன்படுத்தப்படுவதை நிறுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்காமை துரதிர்ஷ்டவசமானது

இதேவேளை, தேர்தல் சட்டங்களை கவனத்திற் கொள்ளாது, மக்களுக்கு அசௌகரியம் ஏற்படும் வகையில் நேற்று முன்தினம் ஊர்வலங்கள் நடாத்தப்பட்டுள்ளமை தொடர்பில் பதிவாகியுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

வேட்பாளர்கள் தேர்தல் சட்டங்களை மீறி நேற்று முன்தினம் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

காலி, மாத்தறை, கொழும்பு, அளுத்கம போன்ற பகுதிகளில் இத்தகைய சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன.

தேர்தல் சட்டங்களுக்கு மதிப்பளித்து பிரசார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும், இதன்போது மதுபானம், பொலித்தீன் பாவனைகளை வேட்பாளர்கள் தவிர்க்க வேண்டும் எனவும் அரசியல் கட்சிகளின தலைவர்கள், செயலாளர்களுக்கு பகிரங்க வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கமநலசேவை எழுதுநர் பதவிக்கு திறந்த போட்டிப் பரீட்சை

கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் கமநல சேவைகள் எழுதுநர்கள் சேவையில் iii ஆம் வகுப்பிற்கான உத்தியோகத்தர்களுக்கான திறந்த போட் டிப் பரீட்சைக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித் தகைமையாக கபொத (சா/த), க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்த சிறந்த நடத்தையும், நல்ல தேகாரோக்கியமுள்ளவராகவும், நாட்டின் எப்பாகத்திலும கடமையாற்றக் கூடியவராகவும் இருத்தல் அவசியமாகும். விண்ணப்ப முடிவு திகதி 07.03.2014 ஆகும். வயது 18 இற்கும் 30 இற்கும் இடைப்பட்டவராக இருத்தல் அவசியமாகும்.

பரீட்சைக் கட்டணம் 500 ரூபாவாகும். எழுத்துப் பரீட்சை கணக்கீடு, புரிந்துணர்வுப் பரீட்சை நடைபெறும். பரீட்சை சிங்களம். தமிழ் ஆகிய மொழிகளில் இடம்பெறும்.

பரீட்சைகள் யாழ்ப்பாணம் (10) மன்னார் (11), வவுனியா (12) முல்லைத்தீவு (13), கிளிநொச்சி (14) உட்பட நாட்டின் சகல நகரங்களிலும் நடைபெறும. விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் நாயகம் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் கமநல சேவைகள் நிலைய எழுதுநர்கள் சேவையில் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2013 (2014) எனக் குறிப்பிட வேண்டும்.

(105)

# மக்களுடன் மட்டுமே எதிர்காலத்தில் கூட்டணி

## ஜே.வி.பி. தலைவர் உறுதி

எதிர்காலத்தில் மக்களுடன் மட்டுமே கூட்டணி வைத்துக் கொள்வோம் என ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எந்தவொரு கட்சியுடனும் கூட்டணி சேரப் போவதில்லை எதிர்வரும் மார்ச் மாதம் 29ஆம் திகதி நடைபெறவுள்ள மேல் மற்றும் தென் மாகாணசபைகளுக்கான தேர்தல்களில் தனித்துப் போட்டியிடவுள்ளோம்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக கட்சி அல்லது ஆளும் கட்சியுடன் கூட்டணி சேர்வதற்கான வாய்ப்புக்கள் கிடையாது.

எதிர்காலத்தில் மக்களுடன் மட்டுமே கூட்டணி சேருவோம். ஜே.வி.பி. இலங்கையின் மாற்று அரசியல் சக்தியாகவே திகழ்கின்றது என்றார்.

# தங்க பிஸ்கட்டுக்கள் கடத்தியவர் கைது

தங்க பிஸ்கட்டுக்களை கடத்த முயன்றதாகக் கூறப்படும் 40 வயதான இலங்கையர் ஒரு வரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்றுக் காலை சுங்க அதிகாரிகள் கைதுசெய்துள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

15.5 மில்லியன் ரூபா பெறுமதியான 31 தங்க பிஸ்கட்டுக்களை இவர் வைத்திருந்துள்ளார்.



இந்தச் சந்தேக நபர் 16 தங்க பிஸ்கட்டுக்களை தனது பாதணியினுள்ளும் 15 தங்க பிஸ்கட்டுக்களை அவரது காற்சட்டையின் இடுப்புப் பகுதியினுள்ளும் மறைத்துவைத்திருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# க.பொ.த. (உ/த) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்



அளவையியலும் விஞ்ஞானமுறையும்

நேரம்: 2 மணி

## பகுதி 1

01) "இடைமாறு" தொடர்பினை வெளிப்படுத்தி நிற்கும் கூற்று எது?
1) A யின் தந்தை B : B யின் தந்தை C
2) A யின் எதிரி B : B யின் எதிரி C
3) A யின் நண்பன் B : B யின் நண்பன் C
4) A யிலும் B பெரிது : B யிலும் C பெரிது
5) A யின் சகேதரன் B : B யின் சகோதரி C

02) விஞ்ஞானம் தொடர்பான பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
1) சோதனையின் மூலம் பொய்ப்பிக்கப்படக்கூடிய அறிவாகும்.
2) பௌதிக அதீத அறிவாகும்.
3) விஞ்ஞானிகள் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் செயற்பாடாகும்.
4) விஞ்ஞான முறைகளைப் பின்பற்றி உருவாக்கப்படும் அறிவாகும்.
5) 15 ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் இருந்து ஐரோப்பாவில் துரிதமாக வளர்ச்சி அடைந்த அறிவின் பகுதியாகும்.

03) "அழகியல்" என்பது
1) விடய விஞ்ஞானம் 2) விபரிப்பு விஞ்ஞானம்
3) விடயி விஞ்ஞானம் 4) சமூக விஞ்ஞானம்
5) இயற்கை விஞ்ஞானம்

04) வாய்ப்புப் பார்த்தல் அல்லது பொய்ப்பித்தலை விஞ்ஞர்னத்தின் முறையாகக் கொள்வதற்கு காள் பெப்பரிற்கு இருந்த ஒரு காரணம்
1) வாய்ப்புப் பார்த்தலுக்கு அவதானம் தேவை.
2) அளவையியல் ரீதியில் வலிதான வாதத்தினை முறையியல் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.
3) விஞ்ஞான அறிவு பொய்யேயன்றி ஒருபோதும் உண்மையானதல்ல.
4) வாய்ப்புப் பார்த்தலுக்கு பல பரிசோதனைகள் தேவை.
5) தர்க்க ரீதியான உண்மைகள் விஞ்ஞான ரீதியானவை அல்லாதிருப்பதனால்.

05) "அவன் வழுக்கல் தலை உடையவனாகவும் அதேநேரம் வழுக்கல் தலை அற்றவனாகவும் இருக்க முடியாது" எனும் கூற்று உண்மையாவதுடன் தொடர்புபடுவது
1) ஒருமை விதி 2) எதிர்மறை விதி
3) புரணாமை விதி 4) இரட்டை மறுப்பு விதி
5) போதிய நியாய விதி

06) "உலகம் நீரினால் ஆனது" எனக் கூறியவர்
1) தேலிஸ் 2) அனெக்சி மாந்தர்
3) அனக்சிமினஸ் 4) டேக்காட்
5) ஹெரக்கிளைட்டஸ்

07) பௌதிக விஞ்ஞானத்திற்குள்ளும் சமூக விஞ்ஞானத்திற்குள்ளும் ஒருங்கே உள்ளடக்கும் துறை.
1) உளவியல் 2) மானிடவியல்
3) புவியியல் 4) இரசாயனவியல்
5) வெப்பவியல்

08) பின்வருவனவற்றுள் எது நற்சூத்திரம் அல்லாதது
1) $N(NP \rightarrow Q)$ 2) [PV QVR]
3) $(P \rightarrow Q \rightarrow R)$ 4) (P N Q)
5) $\{P \rightarrow [Q \leftrightarrow R (-) \rightarrow 5)]\}$

09) "கைவினைவாத மரபும் புலமைவாத மரபும் ஒன்றிணைவதன் அவசியத்தை" ஒரு தீர்க்கதரசியைப் போல வலியுறுத்தியவர்.
1) டேவிட் ஹியூம் 2) லைபினிஸ்ற்
3) விக்கன்ஸ்ரைன் 4) பிரான்சிஸ் பேக்கன்
5) டேக்காட்

10) $N(NP \rightarrow Q)$ எனும் வாக்கியத்திற்கு தர்க்க ரீதியாக சமனான வாக்கியமாக அமைவது
1) $(P \leftrightarrow Q)$ 2) (NPnNQ) 3) (NPVN6)
4) $N (P \rightarrow NQ)$ 5) $[(PnQ) \rightarrow NQ]$

11) "கருவியின்" அவசியமாக அமையாதது
1) அளவிலுக்கு 2) பரிசோதனைக்கு
3). அவதானத்திற்கு 4) தனியாள் ஆய்விற்கு
5) அகழ்வாய்விற்கு

12) எல்லா மாணவர்களும் புத்திசாலி எனின் ஒவ்வொரு மாணவரும் புத்திசாலி என்பது
1) முறையான மறுமாற்றம் 2) முறையற்ற நேர்மாற்றம்
3) முறையற்ற எதிர்வைக்கை 4) முறையற்ற மறுமாற்ற நேர்மாற்றம்
5) முறையற்ற மறுமாற்ற எதிர்வைக்கை.

13) விற்தராசிற்கு அடிப்படையாக அமைவது
1) சார்ள்சின் விதி 2) ஹீக்ஸின் விதி
3) கலிலியோவின் விதி 4) உலோகம் விரிவடைவது
5) புவியீர்ப்புக் கோட்பாடு

14) விஞ்ஞானத்தில் தொடர்புவாதம் எனும் கருத்தை முன்வைத்த விஞ்ஞான முறையியலாளர் பெயர்
1) காள்பொப்பர் 2) தோமஸ்கூன்
3) லக்காதோஸ் 4) கான்ஹெம்பல்
5) பெயிராபெண்ட்


15) "இருமதிப்பு அளவையியலில் மாறிகள் நான்கினைக் கொண்ட உண்மை அட்டவணையின் பெறுமதிகளின் எண்ணிக்கை
1) 2 2) 4
3) 8 4) 16 5) 32

16) எழுவாயும் பயனிலையும் முறையே வியாப்த்தி அல்லாமலும் வியாப்த்தியாகவும் இருக்கும் வரிசை ஒழுங்கானது
1) நிறை விதி எடுப்பு 2) நிறை மறை எடுப்பு
3) குறை விதி எடுப்பு 4) குறைமறை எடுப்பு
5) தனி விதி எடுப்பு

17) பொயிலின் விதி -
1) தனி நேர்வாகும். 2) கொள்கையாகும்.
3) அனுபவ பொதுமையாக்கம் ஆகும்.
4) புள்ளிவிபரவியல் பொதுமையாக்கும் ஆகும்.
5) வெப்பநிலை மாற்றமடையும்போது பொருந்துவதில்லை.

18) பின்வருவனவற்றுள் சமூக விஞ்ஞானங்கள் எவ்வகை சோதனையை அதிகமாக பயன்படுத்திக்கொள்ளும்.
1) அவதானம் 2) பரிசோதனை
3) தீர்ப்புசோதனை 4) கட்டுப்பாட்டு குழுமுறை
5) தனியாள் ஆய்வுமுறை

19)




என்ற வென்வரைபடத்திலிருந்து பின்வருவனவற்றில் எது வலிதான முடிவு எனக்கூறுக.
1) A = w 2) $xy \notin A$ 3) $y \notin B$
4) B ⊙ 5) $A \notin O$

20) நீள்வட்ட வடிவிலான பாதை எந்தக் கோளிலிருந்து முதலில் கண்டு பிடிக்கப்பட்டது.
1) செவ்வாய் 2) புதன் 3) வியாழன்
4) வெள்ளி 5) சந்திரன்

21) "நாகமும், புடையனும் ஆபத்தானது ஆகவே நாகமெல்லாம் புடையனாகும்" எனும் வாதத்தில் இடம்பெறும் போலி
1) நாற்பதப் போலி 2) இருகூற்றுப் போலி
3) பெரும்பதசட்டவிரோதப் போலி 4) சிறுபதசட்டவிரோதப் போலி
5) மத்தியபதப் போலி

22) நியூட்டனின் புவியீர்ப்புக் கோட்பாடு விளக்குவது
1) எரிநட்சத்திரக்கல்லினை 2) பொயிலின் விதியினை
3) சூரியமையக்கோட்பாட்டினை 4) கெப்ளரின் விதிகளை
5) வியாழக்கிரகத்தின் சந்திரன்களை


23) பின்வரும் கூற்றுக்களில் "சரியானது" எது
1) நேர்ப் பெறுகையில் மட்டுமே துணைப்பெறுகை பயன்படுத்தப்படும்.
2) நிபந்தனைப் பெறுகையில்தான் எடுகோள் முன்வைக்கப்படுகிறது.
3) நேர்ப்பெறுகையில் மட்டும்தான் எடுகோள் பயன்படுத்தப்படுகிறது.
4) சரிவு நிபந்தனை வாக்கியமாக இருக்கும்போது மட்டுமே நிபந்தனைப் பெறுகை பயன்படுத்தப்படுகிறது.
5) துணைப் பெறுகை நிறைவு பெற்றவுடன் பிரதான பெறுகை நிறைவு பெற்றுவிடும்.

24) 13 வரையான இரட்டை எண்களின் இடையமாக அமைவது
1) ஓர் ஒற்றை இலக்கம் 2) 6
3) முழுமையின் அரைவாசி 4) ஓர் இரட்டை இலக்கம்
5) 8

25) "பெண்களைத் தவிர வேறெவரும் தாய்மை உடையார் அல்லர்" என்ற எடுப்பின் சரியான எடுப்பு வடிவம்
1) பெண்கள் மட்டுமே தாய்மை உடையவர்
2) தாய்மை உடையவர் மட்டுமே பெண்கள் ஆவர்.
3) பெண்கள் எல்லோரும் தாய்மை உடையவர் ஆவர்.
4) தாய்மை உடையவர் எல்லோரும் பெண்கள் ஆவர்.
5) சில பெண்கள் தாய்மை உடையவர்.


26) சேர்தல் விதி, மறுத்து விதித்தல் விதிகள் இரண்டும் பின்வருவனவற்றில் எவ்வாக்கியத்திற்கு பொருத்தப்பாடுடையது
1) உட்கிடை 2) இணைப்பு
3) உறழ்வு 4) இரட்டை உட்கிடை
5) மறுப்பு

27) பின்வரும் படலத்தின் வெளியீட்டைச் சரியாகக் குறிப்பிடும் சூத்திரம் எது?




1) [(P n Q) V N (PVQ)]    2) [ (PAQ)  V (PVQ)]
3) [N(P n Q) V (PVQ)]    4) (PnQ) V N (PVR)
5) [(P → Q) V  N(P→ NQ)]

28) (NPVN Q) என்பதன் உண்மை விருட்சம்
1) NP    2)




3) NP
Q
4) P
NQ
5)




29) புறவயத் தன்மை என்பதன் மூலம் கருதுவது
1) புறஉலகில் மட்டும் இருக்கின்ற ஒன்றாகும்.
2) அனைவராலும் ஏற்கக்கூடியது.
3) பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படுவது
4) நூறுவீதம் துல்லியமானது
5) சோதிக்கப்படக்கூடியது.


30) பால்வெளியிலிருந்து ஏனைய அசைகின்ற நட்சத்திரக் கூட்டத்தினைக் கண்டுபிடித்தவர்.
1) சேர்ஹெட்மண்ட் ஹெலி
2) எட்வின் அபல்
3) ஜோர்ஜ்கெமவ்
4) சேர் பிரட்ஹொயில்
5) சிறிஸ்டியன் ஹெப்ளர்

31) நியூட்டன் தனது முதலாவது விதியினால் வெளிப்படுத்துவது
1) வலு என்பதன் அர்த்தத்தினை எடுத்துக்காட்டுவது
2) உட்கிடையாக்கத்தின் அர்த்தத்தினை எடுத்துக்காட்டுவது
3) வலுவின் விசாலத்தன்மையினை நிர்ணயம் செய்வதற்கான முறை ஒன்றினை எடுத்துக்காட்டுவது.
4) நிலையான அசைவு நேர்கோடொன்றின் நிலையான வேகத்தில் நிகழ்கின்றது என்பதனைக் காட்டியமை.
5) ஈர்பின் திணிவினை நிலையான திணிவிலிருந்து வேறுபடுத்துவதாகும்.

32) பின்வருவனவற்றுள் எது மூடிய உண்மை விருட்சமுறைக்கு அமைவாக உள்ளது?
1) (P n Q) P    : NQ    2) (PV Q) Q    : NP
3) (NP→Q)  NQ    : P    4) (NP →Q)  (QVR) NP : R
5) (P →Q)  (QnR) : (PnR)

33) பின்வரும் தர்ப்படலைகளுள் எது (P → Q) எனும் வெளிப்பாட்டினைக் கொண்டுள்ளது.


1)





2)





3)




4)




5)




34) சமூக விஞ்ஞானத்தில் நேரடியாக பயன்படுத்த முடியாத நவீன தொழில்நுட்பம் எது?
1) DNA தொழில்நுட்பம்
2) கணனித் தொழில்நுட்பம்
3) தகவல் தொழில்நுட்பம்
4) விண்வெளி ஆய்வுத் தொழில்நுட்பம்
5) கதிரியக்கத் தொழில்நுட்பம்

35) லாவோசியரின் தகனம் பற்றிய பிராணவாயுக் கோட்பாட்டினைப் போன்று வோல்டன் அணுக்கோட்பாடு பின்வருவனவற்றுள் எதில் கவனம் செலுத்தப்பட்டதால் பெறப்பட்டது.
1) அணுக்கள்
2) வெப்பம்
3) இரசாயனத் தொகுதி
4) நிறை
5) புலொஜிஸ்டன்

36) "மாணவர் மட்டுமே புத்திசாலி" என்பதைக் குறித்து நிற்கும் சரியான குறியீட்டு வாக்கியம்
1) A B =    2) AB =
3) AB ≠    4) AB ≠
5) AB =

37) இந்திய அளவையியலில் பரார்த்த அனுமானத்தில் காணக்கூடிய அனுமானப் படிமுறைகள் மொத்தம் எத்தனை?
1) 2    2) 3
3) 5    4) 6    5) 7

38) சமூக விஞ்ஞான ஆய்வில் வினாக்கொத்து முறை
1) ஒரு பரிசோதனையாகும்.
2) நேர்முக விசாரணை முறை சாத்தியமில்லாத நிலையில் மட்டுமே பயன்படுத்தப்படல் வேண்டும்.
3) மாதிரியினைப் பயன்படுத்துவதில்லை.
4) பரந்தளவிலான விடையப் பரப்பிலிருந்து தரவுகளைத் திரட்டிக்கொள்ளப் பயன்படும்.
5) தொலைபேசியினூடாக செயற்படுவதில்லை.

39) எந்த ஒரு காகமும் நான்கு காலுடைய விலங்கு அல்ல என்பதன் சரியான குறியீட்டாக்கம்
1) x fx → Gx    2) x Fx → x Gx
3) Vx (Fx  Gx)    4) x (F x n Gx)
5) Fx → NGx

40) உள்பொருள் தனியனாக்கத்தில் புதிய மாறி பயன்படுத்தப்படவேண்டுமாயின் Vx (Fy  Hx) என்பதற்கு பின்வருவனவற்றுள் எது பொருத்தமானது
1) (Fa  Hx)    2) (Fy  HB)
3) (Fx  Hy)    4) Fy  Hq)
5) (Fa  Ha)

41) முக்கூற்று நியாயத்தொடையில் சிறுபதப் போலி நிகழ்வதற்கு
1) முடிவு விதி எடுப்பாக இருப்பது அவசியம்
2) முடிவு மறை எடுப்பாக இருப்பது அவசியம்
3) முடிவு குறை எடுப்பாக இருப்பது அவசியம்
4) முடிவு நிறை எடுப்பாக இருப்பது அவசியம்
5) முடிவு நிறை, குறை எடுப்பாக இருப்பது அவசியம்

42) கீழ்வரும் விஞ்ஞானிகளில் பரிணாமவாதக் கோட்பாட்டுடன் நேரடியாக தொடர்பு இல்லாதவர் யார்?
1) சார்ஸ் டார்வின்    2) எஸ்மஸ்டார்வின்
3) லாமார்க்    4) தோமஸ் ஹக்ஸ்லி
5) லீனியஸ்

43) சமயம் மற்றும் ஒழுக்கவியலிற்கு ஒரே நேரத்தில் பிரச்சினையினை ஏற்படுத்தாத தொழில்நுட்ப செயற்பாடு
1) குளோனிங்
2) பிறப்புரிமை தொழில்நுட்ப
3) சூரிய சக்தியைப் பயன்படுத்திக் கொள்ளல்
4) சுகமரணம்
5) சந்திரனை வெற்றி கொள்ளல்

44) நவீன மெய்யியலின் தந்தை யார்?
1) டேவிட் கியூம்    2) ஜோன்லொக்
3) டேக்காட்    4) ஸ்பினோசா
5) விக்கன்ஸ்ரைன்

45) "பிரபஞ்ச தோற்றத்திற்கு அடிப்படைக் காரணம் காற்று" எனக் கூறிய மெய்யியலாளர்
1) தோல்ஸ்    2) அனெக்சி மாந்தர்
3) அனெக்சி மினஸ்    4) ஹெரக்கிளைட்டஸ்
5) டேக்காட்

46) விஞ்ஞானத்தின் தாய் விஞ்ஞானம் என அழைக்கப்படுவது
1) மெய்யியல்    2) சமூகவியல்
3) பௌதிக விஞ்ஞானம்    4) ஒழுக்கவியல்
5) அழகியல்

47) அனுபவ முதல்வாத சிந்தனையாளர்களில் ஒருவராக கருதக்கூடியவர்
1) டோக்காட்    2) லைபினிஸ்ற்
3) ஸ்பினோரா    4) ஜோன்லொக்
5) அரிஸ்ரோட்டில்

48) அறிவுமுதல்வாத சிந்தனையாளர்களில் ஒருவராக கருதக்கூடியவர்
1) டோக்காட்    2) ஜோன்லொக்
3) டேவிட்ஹியூம்    4) பாக்லி
5) விக்கன்ஸ்ரைன்

49) "பிரமச்சாரிகள் திருமணமாகாதவர் அல்லர்" என்பது
1) பகுப்பெடுப்பு    2) தொகுப்பெடுப்பு
3) கூறியது கூறல் எடுப்பு    4) முரண்பாட்டெடுப்பு
5) குறைமறை எடுப்பு

50) "சென். ஜோன்ஸ் சிறந்த கல்லூரி" என்பது நாற்பிரிவுத் திட்டத்தில்
1) நிறைவிதி    2) நிறை மறை
3) குறை விதி    4) குறை மறை
5) தனி விதி

கடந்த ஞாயிறு, செவ்வாய் வெளியான புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாவிற்கான விடைகள் நாளை வெளிவரும்

# இந்தியாவில் உயர்கல்வி இலங்கை மாணவர்களுக்கு வாய்ப்பு

மருத்துவ, பல்மருத்துவ இளமாணி, பொறியியல் இளமாணி, மருந்தியல், இளமாணி மற்றும பொறியியல் டிப்ளோமா மருந்தியல், டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகளை இந்தியக் கல்லூரிகளில் அல்லது பல்கலைக்கழகங்களில் தொடர சுய நிதியிடல் திட்டத்தின் கிழ் 2014-2015 கல்வியாண்டுக்கான இலங்கை மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மருத்துவ, பல்மருத்துவ இளமாணிக்கான அனுமதித் தகைமையாக மாணவர் இந்தியாவில் நடைபெறும் தேசிய தகைமை மற்றும் அனுமதித் தேர்வுக்கு (Nationl Eligibility Cum Entrance test) சமூகமளிக்க வேண்டுமா என்பது இந்திய உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்கமையவே தீர்மானிக்கப்படும் என்பதை விண்ணப்பதாரிகள் கவனத்திற் கொள்ள வேண்டும். கிடைக்கக் கூடிய ஆசனங்களின் எண்ணிக்கை 2014 ஜீன், ஜீலை மாதமளவிலேயே தெரியவரும்.

**விண்ணப்பதாரிகள் பின்வரும் ஆவணங்களின் மூன்று பிரதிகள் அனுப்புவதை உறுதி செய்ய வேண்டும்.**

அ) விண்ணப்பத்தின் மூன்று தொகுதிகள்,

ஆ) இந்தியத் தூதரகம் அல்லது யாழ்ப்பாண இந்தியத் தூதரகத்தால் உரிய முறையில் சான்றுபடுத்தப்பட்ட விண்ணப்பதாரியின் அண்மையிலெடுக்கப்பட்ட 3 புகைப்படங்கள்.

இ) மூன்று சான்றுபடுத்தப்பட்ட தகைமைகாண் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் சத விகிதத்துடனுள்ள பெறுபேற்று அட்டையும் விண்ணப்பதாரியின் சான்றிழ்களும்.

(புதுடில்லியிலுள்ள இந்தியப் பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பால் பரீட்சார்த்தியின் தகைமைகாண் பரீட்சையானது மருத்துவ பல்மருத்துவ இளமாணி பொறியியல் இளமாணி மருந்தியல் இளமாணி மற்றும் பொறியியல் டிப்ளோமா மருந்தியல் டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகளுக்கு அனுமதி வழங்கும் நோக்கில் இந்தியாவினது இரண்டாம் நிலைக் கல்விக்கான மத்தியசபையின் 10+2 இற்கு நிகரானது எனவழங்கப்படும் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

ஈ) விண்ணப்பதாரியின் பின்வரும் ஆவணங்களின் சான்றுபடுத்தப்பட்ட 3 பிரதிகள்.

01. கடவுச்சீட்டின் முதல் 4 பக்கங்கள்,
02. பிரஜாவுரிமைச் சர்ன்றிதழ்,
03. பிறப்புச் சான்றிதழ்,
04. இறுதியாகக் கற்ற கல்வி நிறுவனத் தலைவரின் நற்சான்றிதழ்

4. மாணவர்கள் இந்தியாவினது இரண்டாம் நிலைக் கல்விக்கான மத்தியசபையின் 10+2 இற்கு நிகரான தமது தகைமைப்பரீட்சையின் பெறுபேற்றுக்காக காத்திருக்கும் நிலையிலும் தமது முன்மொழிவு விண்ணப்பப்பத்திரத்தைத் தாக்கல் செய்யலாம். **எவ்வாறாயினும் இத்தகைய முன்மொழிவுகள் அவர்களது தகைமைத் தேர்வில் பெறும் திறமையான தேர்ச்சியில் தங்கியிருக்கும்.**

5. வெறுமனே விண்ணப்பத்தை அனுப்புவது தமது தெரிவுக்கான நிச்சய வழியாக கருதப்படக்கூடாது என்பதை விண்ணப்பதாரிகள் கவனத்திற் கொள்ள வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் இந்தியாவிற்குள் நுழையும் போது எயிட்ஸ் பரிசோதனை உள்ளிட்ட மருத்துவப் பரிசோதனைக்கு உட்பட வேண்டியிருக்கும். விண்ணப்பதாரிகள் அந்தந்த பல்கலைக்கழகத்தின் அல்லது கல்லூரியின் அனுமதி நடைமுறைக்கு அமைய நடக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

7. இந்திய அரசினது வெளிநாட்டு மாணவருக்கு எவ்வித நிதிஉதவியோ புலமைப்பரிசிலோ வழங்குவதில்லை. என்பதை விண்ணப்பதாரிகள் கவனத்திற்கொள்ள வேண்டும். மருத்துவ இளமாணிப்பட்டத்திற்கு தெரிவாகும் மாணவரிடம் மருத்துவ விஞ்ஞானங்களுக்கான அனைத்திந்திய நிறுவனத்தால் மூன்று தவணைகளில் 75,000 அமெரிக்க டொலர் பணம் அறவிடப்படும் என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

8. **பல்வேறு கற்கை நெறிகளுக்கான தகைமைகள்**

அ) **மருத்துவ பல்மருத்துவ இளமாணி கற்கைளுக்கு** ஒரு பரீட்சார்த்தி பௌதிகவியல் இரசாயனவியல், உயிரியல், (தாவரவியல், விலங்கியல்) ஆகிய பாடங்களில் தனித்தனியாக குறைந்தது 60 சதவீத புள்ளிகள் பெற்றிருப்பதுடன் ஆகக் குறைந்த சரீரப்புள்ளி 60 சதவீதத்தையாவது பெற்றிருக்க வேண்டும். அத்துடன் தகைமைகாண் பரீட்சையில் ஆங்கில மொழிக்கு 50 சதவீதம் பெற்றிருக்க வேண்டும்.(இந்தியாவினது இரண்டாம் நிலைக் கல்விக்கான மத்தியசபையின் 10+2) இற்குநிகரானது என புதுடில்லியிலுள்ள இந்தியப் பல்கலைக் கழகங்களின் கூட்டமைப்பால் வழங்கப்படும் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

ஆ). **பொறியியல் இளமாணிக் கற்கைக்கு** ஒரு பரிட்சார்த்தி பௌதிகவியல் இரசாயனவியல், கணிதம் ஆகிய பாடங்களில் தனித்தனியாக குறைந்தது 60 சதவீத புள்ளிகள் பெற்றிருப்பதுடன் ஆகக் குறைந்தது சராசரிப்புள்ளி 60 சதவீதத்தையாவது பெற்றிருக்க வேண்டும். அத்துடன் தகைமைகாண் பரிட்சையில் ஆங்கில மொழி 50 வீதம் பெற்றிருக்கவேண்டும். அத்துடன் தகைமைகாண் பரீட்சையில் ஆங்கில மொழிக்கு 50 சதவீதம் பெற்றிருக்க வேண்டும். (இந்தியாவினது இரண்டாம் நலைக்கல்விக்கான மத்தியசபையின் **10+2** இற்கு நிகரானது என புதுடில்லியிலுள்ள இந்தியப் பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பால் வழங்கப்படும் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

இ) **மருந்தியல் இளமாணி அல்லது டிப்ளோமா கற்கைகளுக்கு**- ஒரு பரீட்சார்த்தி பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல் (தாவரவியல், விலங்கியல்) ஆகிய பாடங்களில் தனித்தனியாக குறைந்தது 60 சதவீதபுள்ளிகள் பெற்றிருப்பதுடன் குறைந்த சராசரிப்புள்ளி 60 சதவீதத்தையாவது பெற்றிருக்க வேண்டும். அத்துடன் தகைமைகாண் பரீட்சையில் ஆங்கிலமொழிக்கு 50 சதவீதம் பெற்றிருக்க வேண்டும். (இந்தியாவினது இரண்டாம் நிலைக் கல்விக்கான மத்தியசபையின் 10+2 இற்கு நிகரானது என புதுடில்லியிலுள்ள இந்தியப் பல்க லைக்கழகங்களின் கூட்டமைப்பால் வழங்கப்படும் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

ஈ) **பொறியியல் டிப்ளோமா கற்கைகள்**- ஒரு பரீட்சார்த்தி பௌதீகவியல், இரசாயனவியல் கணிதம் ஆகியபாடங்களில் முதற் தடவையில் தனித்தனியாக குறைந்தது 60 சதவீத புள்ளிகள் பெற்றிருப்பதுடன் குறைந்த சராசரிப்புள்ளி 60 சதவீதத்தையாவது பெற்றிருக்க வேண்டும். அத்துடன் 10 ஆம் தரம் மற்றும் 12 ஆம்தரம் ஆகியவற்றின் தகைமைகாண் பரீட்சையில் ஆங்கிலமொழிக்கு 50 சதவீதம் பெற்றிருக்க வேண்டும். (இந்தியாவினது இரண்டாம் நிலைக் கல்விக்கான மத்தியசபையின் 10+2 இற்கு நிகரானது என புதுடில்லியிலுள்ள இந்தியப் பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பால் வழங்கப்படும் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

01. பொறியியல் டிப்ளோமா கற்கையின்முதல் வருடத்துக்கு அனுமதி பெற விரும்பும் ஒருவர் 01.08.2014 இல் 21 வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

02. சில தொழில்நுட்பக் கல்வி இயக்கங்கள் தேவையான குறைந்த பட்ச சராசரிப்புள்ளிகள் முதற் தடவையிலேயே பெறப்பட்டிருக்க வேண்டும் என வேண்டுகின்றேன்.

09). கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் தகவல் உறுதிப்படுத்தலுக்காக பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெறப்படும் கடைசி நாள் 30 மார்ச் 2014 ஆகும். அதன் பின்னர் விண்ணப்படிவங்கள் புதுடில்லியிலுள்ள வெளிவிவகார அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்படும். கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திற்கு 30 மார்ச் 2014 இன் பின்னர் வந்தடையும் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டா.

10).யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா,மன்னார் மாவட்டத்தில் வசிக்கும் மாணவர்களுக்கு மேற்கூறிய 3 ஆம் பந்தியின் பிரகாரம் தமது விண்ணப்பங்களை இலக்கம் 14 மருதடி வீதி நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்திலும் 30 மார்ச் 2014 இற்கு முன்னர் கொழும்பிலுள்ள தூதரகத்துக்கு அனுப்புவதற்காகச் சமர்ப்பிக்கலாம் எனும் தெரிவும் உள்ளது.

விண்ணப்பப்படிவத்தை யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத்தூதரகத்தின் (www.egijaffna.org) எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

## —இலங்கை மற்றும் ஈரானைச் சேர்ந்த—
# புகலிடக் கோரிக்கையாளர்களை விடுதலை செய்யக் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை மற்றும் ஈரான் புகலிடக் கோரிக்கையாளர்களை விடுதலை செய்யுமாறு அவுஸ்ரேலிய சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை மற்றும் ஈரானைச் சேர்ந்த பத்து புகலிடக் கோரிக்கையாளர்களை விடுதலை செய்யுமாறு நான்கு அவுஸ்ரேலிய சட்டத்தரணிகள் கோரியுள்ளனர். குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் நவுரு தீவுகளில் அமைந்துள்ள புகலிடக் கோரிக்கையாளர் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஜோர்ஜ் நியுஹவுஸ், ஜுலியன் பேர்ன்சயிட், டேன் மொரி மற்றும் ஜேய் வில்லியம்ஸ் ஆகிய் சட்டத்தரணிகளே இவ்வாறு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் சட்டவிரோதமானதும், மனிதாபிமானத்திற்கு புறம்பானதுமான வகையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.நவுரு தீவுகளின் உச்ச நீதிமன்றில் குறித்த சட்டத்தரணிகள் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் நியாயமற்ற வகையில் நீண்ட காலத்திற்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரகடனத்திற்கு புறம்பான வகையில் குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் குறிப்பிட்டுள்ளனர்.

நவுரு தீவுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள புகலிடக் கோரிக்கையாளர்கள் காலவரையறையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இது நவுருவின் அரசியல் சாசனத்திற்கு புறம்பானது எனவும் சட்டத்தரணி ஜோர்ஜ் நியுஹவுஸ் தெரிவித்துள்ளார்.

புகலிடக் கோரிக்கையாளர்களை காலவரையறையின்றி தடுத்து வைப்பதனை நவுரு அரசியல் சாசனம் அனுமதிக்காது எனத் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட ஓர் காலப்பகுதிக்கு அதாவது புகலிட கோரிக்கை பரிசீலிக்கப்படும் வரையில் தடுத்து வைப்பதனை அனுமதித்த போதிலும், காலவரையறையின்றி தடுத்து வைக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். நவுரு தீவ்களின் சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து திருப்தி கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

# நிதியை எவ்வாறு கையாள்வது விழிப்பூட்டல் செயலமர்வு



இலங்கை மத்திய வங்கியின் ஏற்பாட்டில் நிதியை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பான ஒருநாள் விழிப்புணர்வூட்டும் செயலமர்வு முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் கேட்போர கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கிராமிய அபிவிருத்தி வங்கியின் கிளிநொச்சிக் கிளையின் அனுசரணையில் நடைபெற்ற செயலமர்வில் கிராமிய அபிவிருத்தி வங்கியின் முல்லைத்தீவு மாவட்ட பயனாளிகள், இலங்கை மத்திய வங்கியின் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்ட குழுத் தலைவர் எஸ்.ஸ்ரீ.பத்மநாதன், கிராமிய அபிவிருத்தி வங்கியின் வட பிரதேச முகாமையாளர் எஸ்.கீர்த்திசீலன், கிராமிய அபிவிருத்தி வங்கியின் கிளிநொச்சி முகாமையாளர் ஜீ.சற்குணபாலன், கரைதுறைப் பற்று பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சிவநேசராஜா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது எவ்வாறு போலி நாணயங்களை இனங்காண்பது, தொழில்சார் நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது, வங்கியில் பெறும் கடனை எவ்வாறு மீளச் செலுத்துவது ஆகியவை தொடர்பில் விளக்கமளிக்கப் பட்டன.

# கன்னாதிட்டி காளியம்பாள் வருடாந்த மஹோற்சவம்


யாழ்.வண்ணை-கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம் கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் மகோற்சவம ஆரம்பித்து தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா நடைபெறுகின்றது.

எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை சப்பறத் திருவிழாவும், 13 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 14 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும், 15 ஆம் திகதி பூங்காவனமும், 16 ஆம் திகதி ஞாயிறு பகல் 11 மணிக்கு அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் பிராயச்சித்த அபிஷேகமும் அன்று மாலை 4 மணிக்கு வைரவர் மடையும் நடைபெற்று முடிவுறும்.

காலை, மாலை விசேட பூசைகளும் இடம்பெறுகின்றன. மாலை உற்சவமாக யானை, காமதேனு நாகம், குதிரை பூசைகள் இடம்பெறுகின்றன. (105)

# தீவிரவாதத்தை முடிவுறுத்த தலிபான்கள் - பாக்.அரசு முடிவு

## பேச்சு வார்த்தையில் இணக்கம்




(இஸ்லாமாபாத்)


ஆரம்பகட்ட முட்டுக்கட்டைக்கு பின் பாகிஸ்தான் அரசு குழுவும் மற்றும் தலிபான் நியமித்த குழுவும் நேற்று முன்தினம் இரகசிய இடத்தில் சந்தித்தன. அப்போது தீவிரவாதத்தை முடிவுக்கு கொண்டு வருவது குறித்தும், நாட்டில் அமைதியை நிலைநாட்டுவது குறித்தும் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது.

பாகிஸ்தான் அரசு அறிவித்த நான்கு பேர் குழுவின் ஒருங்கிணைப்பாளரும், மூத்த பத்திரிக்கையாளருமான இர்பான் சித்திக்கி இதுபற்றி கூறுகையில், தடை செய்யப்பட்ட தெஹ்ரிக்-இ-தலிபான் அமைப்புடன் திறந்த மனதுடன் பேச்சுவார்த்தை நடாத்தி உள்ளதாக தெரிவித்தார். முன்னதாக இஸ்லாமாபாத்தில் அரசுக்குழுவினர் தங்களுக்குள் கூடி பேச்சுவார்த்தையை எப்படி முன்னெடுத்துச் செல்வது என்பது குறித்து ஆலோசனை நடாத்தினர்.

பெப்ரவரி 4ஆம் திகதியே நடைபெற வேண்டிய இப்பேச்சுவார்த்தை சில தவிர்க்க இயலாத காரணத்தால் நேற்று முன்தினம் தொடங்கியது. அரசுக் குழுவில் சித்திக்கி, முன்னாள் தூதர் ருஸ்தாம் ஷா முகமது, பத்திரிக்கையாளர் ரஹிமுல்லா, யுசூப்சாய் மற்றும் ஓய்வு பெற்ற முன்னாள் ஐ.ஏ.எஸ அதிகாரியான மஜ் முகமது அமீரும் தாலிபான் சார்பாக அவ்வமைப்பின் தந்தையாக கருதப்படும் சமியுல் ஹக், ஜமாத்-இஇஸ்லாம் தலைவரான இப்ராஹிம் கான், லால் மசூதியின் செயலாளரான அப்துல் அஜிஸ் ஆகியோரும் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர். இரு தரப்புமே அமைதியை நிலைநாட்டுவதில் ஆர்வம் கொண்டிருப்பதாகக் கூறியுள்ளது.

உலகச் செய்திகள்

# இத்தாலிக் கடலில் தத்தளித்த 1100 அகதிகள் மீட்பு



இத்தாலி கடற்பகுதியில் மூழ்கும் நிலையிலிருந்த படகுகளில் இருந்து 1100 அகதிகள் மீட்கப்பட்டுள்ளனர்.


கடந்த 24 மணித்தியாலங்களில் இவ்வாறு 1100 அகதிகள் மீட்கப்பட்டிருப்பதாக இத்தாலிய கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த அகதிகள் அனைவரும் வடக்கு ஆபிக்காவில் இருந்து வந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. இத்தாலியின் லம்பெடுசா பகுதியில் இருந்து 120 கடல்மைல் தொலைவில் அவர்கள் பயணித்த எட்டுப் படகுகளும் மூழ்கும் நிலையில் இருந்தன.

இதனை அவதானித்த கடற்படையினர் அவர்களை மீட்டு கரை சேர்த்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.வறுமை மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் உயிரையும் மதிக்காமல் கடுமையான குளிர் நிலவும் மிகவும் ஆபத்தான கடல் பயணத்தை மேற்கொண்டு ஐரோப்பா மற்றும் அவுஸ்ரேலிய நாடுகளுக்குள் சட்டவிரோதமாக புகுந்து வருகின்றனர்.

குறிப்பாக ஆசியா மற்றும் ஆபிரிக்காவைச் சேர்ந்த மக்களே இந்த ஆபத்தான பயணத்தை மேற்கொள்கின்றனர். எனத் தெரிவிக்கப்படுகிறது.

# வீட்டிற்குள் இருந்த பெண்ணின் சடலம் 8 வருடங்களின் பின்னர் மீட்பு



அவுஸ்ரேலியாவின் சிட்னியில் உள்ள இன்னர் சிட்டிப் பகுதியில் வசித்து வந்த வயது முதிர்ந்த பெண்மணி ஒருவர் தனது வீட்டிலேயே இறந்து கிடந்தது எட்டு ஆண்டுகளுக்கு பின் தெரிய வந்துள்ளது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் கிளெப்பில் உள்ள நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, நடாலி வுட் என்ற அந்தப்பெண்மணி 2004ஆம் ஆண்டு மரணமடைந்ததாகவும், அவர் இறந்துபோனது 2011ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் வெளியுலகிற்கு தெரியவந்ததாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. தனது படுக்கையில் விழுந்த அவர் எழுந்திருக்க முடியாமல் இறந்துபோயிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. அவருக்கு சொந்தமான மாடி வீட்டில் அவர் கண்டெடுக்கப்பட்டபோது, அவ்வீடு மிகவும் பாழடைந்து கிடந்ததாகவும், வீட்டில் ஒட்டடை படிந்து கிடந்ததாகவும், வீட்டின் ஜன்னலுக்கு மேலே மரம் ஒன்று வளர்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரது வீட்டில் தொலைக்காட்சிப்பெட்டி குளிர்சாதனப் பெட்டி போன்ற பொருட்கள் எதுவும் காணப்பட வில்லை. அவர் அணிந்திருந்த நகைகள் ஏதும் திருடப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

1924ஆம் ஆண்டு பிறந்த அவர் தனது வாழ்நாள் முழுவதையும் தனிமையிலேயே கழித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# பாரம்பரிய சின்னங்கள் சிரியாவில் அழியும் அபாயம்

## யுனெஸ்கோ கவலை

சிரியாவில் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் அகழ்வாராய்ச்சிகளால் அந்த நாட்டின் பாரம்பரிய சின்னங்கள் அழிந்துவிடும் என்று யுனெஸ்கோ துணை இயக்குநர் பிரான்ஸ்கோ பேண்ட்ரின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து யுனெஸ்கோ துணை இயக்குநர் பினாஸ்கோ பேண்ட்ரின், நியூயோர்க்கில் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்:

சிரியாவில் சுமேரிய நகரமான மேரி முதல் பழங்கால் நகரங்களான எல்பா, பால்மைரா, பாமியாவரை சட்டவிரோதமாக அகழ்வாராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அங்கு கிடைக்கும் அரிய பொருட்கள், மாபியா கும்பல், போதை கடத்தல் கும்பல்கள் மூலம் வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. அந்த வகையில் ஆண்டுக்கு 42 ஆயிரம் கோடிரூபா அளவுக்கு கலைப் பொருட்கள் கடத்தப்பட்டு விற்கப்படுவதாகத் தெரிகிறது. உள்நாட்டுப் போரால் அழிந்து வரும அந்த நாட்டின் பாரம்பரியச சின்னங்களைப் பாதுகாக்க



யுனெஸ்கோ பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக லெபனானில் யுனெஸ்கோவின் கிளை அலுவலகத்தை திறக்க திட்டமிட்டுள்ளோம். இத்திட்டத்துக்காக ஐரோப்பிய யூனியன் நிதி ஒதுக்கியுள்ளது.

தற்போதைய நிலையில் பெரும்பாலான புராதன சின்னங்கள் அழிந்து விட்டன. குறிப்பாக மத்திய காலகட்டத்தைச் சேர்ந்த அலெப்போ நகரச் சந்தை, 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த உம்மயாத் மசூதி ஆகியவற்றை குறிப்பிடலாம்.

பல்வேறு விரும்பத்தகாத சம்பவங்கள் நடைபெற்றுள்ளபோதிலும் சில நல்ல விஷயங்களும் அங்கு நடந்துள்ளன. உள்நாட்டுப் போர் தொடங்கியதும் நாட்டின் 34 அருங்காடசியகங்களில் இருந்த கலை பொக்கிஷங்களை அரசுத் துறை அதிகாரிகள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றிவிட்டனர். அதனால் அவை தப்பிவிட்டன என்றார்.

# ஜெயலலிதாவின் பிரதமர் ஆசையை தி.மு.க. முறியடிக்க வேண்டும்

## ஸ்ராலின் தெரிவிப்பு

ஜெயலலிதாவின் பிரதமர் ஆசையை தி.மு.க.வினர் முறியடிக்க வேண்டுமென்று தி.மு.க பொருளாளர் மு.க.ஸ்ராலின் கூறியுள்ளார்.


திருமண நிகழ்வு ஒன்றில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாற்பதும் நமதே என்ற முழக்கத்துடன் அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா பிரதமர் பதவிக்கு ஆசைப்படுகிறார். தமிழ்நாடு தற்போது இருண்ட மாநிலமாக உள்ளது. இந்தியா முழுவதையும் இருண்ட நாடாக மாற்ற அவர் பிரதமர் பதவிக்கு ஆசைப்படுகிறார்.

அவரது ஆசையை தி.மு.க தொண்டர்கள் ஒற்றுமையாக செயற்பட்டு முறியடிக்க வேண்டும்.தி.மு.க தொண்டர்கள் செயற்திறன் மற்றும் ஆற்றல் மிக்கவர்கள். அவர்கள் இருக்கும் வரை, தி.மு.க.வை எந்த சக்தியாலும் அழிக்க முடியாது.

எனக்கு அரசியல் பணி, நாட்டு பணி, தேர்தல் பணி என பல பணிகள் இருக்கின்றன. அந்தப்பணிகளை ஒதுக்கி வைத்துவிட்டு இங்கு வந்துள்ளேன். தொண்டர்களின் இல்ல திருமணத்தை நடாத்தி வைப்பது தான் முக்கியமான பணி என்பதால் இங்கு வந்துள்ளேன்.

இந்த மணமக்கள் தாழ்த்தப்



பட்ட வகுப்பைச் சேர்ந்த பட்டதாரிகள். ஒரு காலத்தில் உயர்ந்த வகுப்பினர்தான் பட்டப் படிப்பு படிக்க முடியும் என்ற நிலை இருந்தது.

அதை மாற்றிக் காட்டியவர் தலைவர் கருணாநிதி. நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன. கூட்டணி அமைப்பதற்கான நடவடிக்கைகளும் மும்முரமாக நடந்து வருகின்றன என்றார்.

# குழந்தைகளுக்கான நோபல் பரிசு; மலாலாவின் பெயர் பரிந்துரை



பெண் குழந்தைகளின் கல்விக்காக போராடி வரும் மலாலாவின் பெயர் குழந்தைகளுக்கான நோபல் பரிசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இதுபற்றி கருத்துத் தெரிவித்த விருதுக்குழு உறுப்பினர் லிவ் ஹெசர்பெர்க் கூறுகையில், குழந்தையாக உள்ள மலாலா பாகிஸ்தானில் மட்டுமல்லாமல் உலக அளவில் பெண்களின் கல்விக்காக குரல் கொடுத்து வருகிறார்.அவருக்கு மனித உரிமைக்கான ஐரோப்பிய யூனியனின் உயரிய சகாரோ விருது ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் பிறந்த மலாலா சிறுவயது முதல் பெண்களின் கல்விக்கு குரல் கொடுத்தும், போராடியும் வருகிறார்.

இந்நிலையில் மலாலாவின் பெயர் குழந்தைகளுக்கான நோபல் பரிசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.உலக அளவில் 110 நாடுகளில் பெண் கல்வி பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த, கடந்த 2000ஆம் ஆண்டு இந்த விருது முதன்முதலாக அறிமுகப்படுத்தப் பட்டது என்றார்.

# ஊர்காவற்றுறை வைத்தியசாலை குறைபாடுகள் நேரில் ஆராய்வு



(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், தீவக ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) நேரில் சென்று ஆராய்ந்தார்.

அங்கு வைத்தியசாலை அதிகாரிகளால் கட்டடங்கள் பற்றாக்குறை மற்றும் புனரமைப்பு, ஆய்வுகூட வசதியின்மையும் அதன் தேவைப்பாடும், வைத்தியசாலை ஏறுவாசல் நோயாளர்களை கொண்டு செல்ல ஏற்றதாக அமையப்பெறாமை, கழிவு நீரோட்டத்திற்கு ஏற்றவாறு அமையாத கழிவு வாய்க்காலினால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சுகாதார முறையில் அமையப்பெறாத சமையலறை போன்றவை தொடர்பான விடயங்களை நாடாளுமன்ற உறுப்பினரிடம் சுட்டிக் காட்டினர்.

அதனைத் தொடர்ந்து வைத்தியசாலையின் அனைத்துப்பகுதிகளையும் நேரில் பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஊர்காவற்றுறை பிரதேசத்திற்கு விசேடமாக மத்திய அரசினால் ஒதுக்கப்பட்டுள்ள 100 மில்லியன் நிதி, எமது விசேட நிதிகள் மூலம் விரைவில் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படும் எனத் தெரிவித்தார்.

# ஆட்டோ - சைக்கிள் விபத்து; இளைஞனுக்கு காயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் இடம்பெற்ற ஆட்டோ - சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் ஆஸ்பத்திரி வீதியால் வந்த ஆட்டோ ஒன்றும் கோவில் வீதியில் வந்த சைக்கிள் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் பயணித்த ம.மகிந்தன் (வயது-25) என்ற நாவற்குழியைச் சேர்ந்த இளைஞர் காயமடைந்தார். (இ)

# கண்ணிவெடி அகற்றுவது எப்படி? அமெரிக்காவின் பயிற்சி நிறைவு

(கொழும்பு)

வடக்கில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள இராணுவத்தின் பொறியியல் படைப்பிரிவின் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவுக்கு அமெரிக்க படையினர் அளித்து வந்த பயிற்சி நேற்றுடன் நிறைவு பெற்றுள்ளது.

வவுனியா பூவோயா இராணுவ முகாமில் கடந்த மாதம் 27 ஆம் திகதி தொடக்கம், இந்தப் பயிற்சி வழங்கப்பட்டு வந்தது.

அமெரிக்காவின் பசுபிக் இராணுவத்தின், நான்காவது மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவு இந்தப் பயிற்சிகளை வழங்கியது.

இதன்போது, அமெரிக்க இராணுவத்தின் மருத்துவ, கால்நடை மருத்துவ, வெடிபொருள் நிபுணர்களும் பயிற்சிகளை வழங்கினர்.

2003 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில், கண்ணிவெடிகளை அகற்றும் பணிக்கு அமெரிக்கா உதவிகளை வழங்கி வருகிறது.

2003 தொடக்கம் 2013 வரையிலான காலப்பகுதியில், 35.5 மில்லியன் டொலரை இந்தப் பணிக்காக அமெரிக்கா செலவிட்டுள்ளது.

இந்த ஆண்டில், மேலதிகமாக கருவிகள் மற்றும் பயிற்சிகளுக்காக அமெரிக்கா 2.7 மில்லியன் டொலரை செலவிடவுள்ளது என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

# தாக்குதல் நடத்தி ஸ்கூட்டி பறிப்பு சந்தேக நபர்கள் இருவர் கைது

சாவகச்சேரி ஐயா கடையடியில் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொண்டதுடன், அவரது மோட்டார் சைக்கிளையும் அபகரித்த சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

நான்கு பேர் அடங்கிய குழு ஒன்று பிரஸ்தாப குடும்பஸ்தர் மீது தாக்குதல் மேற்கொண்டதுடன், அவரது ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிளையும் அபகரித்துச் சென்றுள்ளது.

உடனடியாக வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தாக்குதலுக்கு வந்த மோட்டார் சைக்கிளின் இலக்கத்திற்கு அமைய சந்தேக நபர்கள் இருவர் உடனடியாக சாவகச்சேரிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் கோப்பாய், சுன்னாகம் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

இதில் ஒரு சந்தேக நபர் ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், மற்றொரு நபர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலும் இருவரைத் தேடி பொலிஸார் வலை விரித்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேற்றுத் தெரிவித்தார். (இ)

# குடை சாய்ந்தது ஆட்டோ; காயமடைந்தார் இளைஞன்

வேகக்கட்டுப்பாட்டை இழந்த ஆட்டோ குடை சாய்ந்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

உடுவில் ஆலடிப் பகுதியில் இச்சம்பவம் நேற்றுக்காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் உடுவில் தெற்கைச் சேர்ந்த கமலநாதன் கஜேந்திரன் (வயது - 32) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ)

## வடக்கிற்கு...

...ந்தேன். அதற்கு அவர் நிச்சயமாக அவ்வாறான செயற்பாட்டை முன்னெடுப்பதாக பல தடவைகள் கூறிவந்தார். அதாவது முன்னாள் அமைச்சர் இராசதுரை விபுலானந்தர் அக்கடமியை அமைத்தார். அது இன்றும் புகழ்பெற்று விளங்குகின்றது. அவ்வாறான நிலையான செயற்திட்டமே எமது மக்களுக்கு நிலையான உயர்வைத் தரும் எனவும் நான் குறிப்பிட்டு வந்திருக்கிறேன். அதற்கமைவாக இவ்வளாகத்தின் உருவாக்கத்தினூடாக அவர் அச்செயற்திட்டத்தினை நடைமுறைப் படுத்தியிருக்கின்றார் என்றே கருதமுடியும்

இந்தப் பீடங்களுக்கான காணியைப் பெறுவதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மிக அதிகமாக முயற்சித்துள் ளார். கொக்காவில் தொலைத் தொடர்பு கோபுரத்தின் திறப்பு விழாவின்போது பல்கலைக்கழகமாக உருவாக வேண்டும் என்ற நோக்கில் தெரிவு செய்யப்பட்ட இக்காணி தொடர்ந்தும் அதே நோக்கிற்காக பயன்படுத்த வேண்டும் என்ற சிந்தனையுடன் அவர் ஜனாதிபதியிடம் இக்காணியைப் பெறுவதற்கான கோரிக்கையை விடுத்தார், அமைச்சரின் கோரிக்கைக்கு மறுப்பு தெரிவிக்க முடியாத ஒரு நிலைப்பாட்டின் அடிப்படையிலும் ஜனாதிபதி அமைச்சரின் மீது கொண்டிருக்கும் பற்றின் பிரகாரமும் அக்காணியை பெற்றுத்தருவதற்கு ஜனாதிபதி ஒப்புதலளித்தார் எனச் சுட்டிக்காட்டினார்.

பொதுவாக இக்காணியைப் பெறுவதென்பதில் பல்வேறுபட்ட அழுத்தங்களுக்கும், பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலை காணப்பட்டது.

ஆனால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மிக நேர்த்தியான அரசியல் அணுகுமுறை யினூடாக விலைமதிப்பற்ற சொத்தை இன்று யாழ்.பல்கலைக்கழகம் பெற்றிருக்கின்றது எனவும் மேலும் குறிப்பிட்டார்.

## குருநகர்...

தோருடன் கலந்துரையாடி நடவடிக்கை முன்னெடுக்கப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதனிடையே மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர்கள் குருநகர் கடற்பகுதியில் தடைசெய்யப்பட்ட சுருக்கு வலை மற்றும் டைனமைற் வெடிவீசி தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதால் தமது தொழிற்துறை நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்படுவதாகவும் அமைச்சரிடம் சுட்டிக்காட்டப்பட்ட போது குறித்த விடயம் தொடர்பில் தாம் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி உரிய தீர்வினைப் பெற்றுத் தருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன்போது அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி குகேந்திரன், ஈ.பி.டி.பி.யின் யாழ்.நகர இணைப்பாளரும், யாழ்.மாநகர சபை உறுப்பினருமான துரைராசா இளங்கோ (றீகன்) உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## யாழ்.இந்திய...

யாழ்ப்பாணத்தில் இந்தியத் துணைத்தூதரகம் திறந்து வைக்கப்பட்டது முதல் தற்போது வரை துணைத் தூதுவராக மகாலிங்கம் கடமையாற்றி வந்த நிலையிலேயே இங்கிருந்து மாற்றம் பெற்றுச் செல்லவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் துணைத் தூதரகம் நவம்பர் 2010 இல் ஆரம்பிக்கப்பட்ட போது முதலாவது துணைத் தூதராக நியமனம் பெற்றது முதல் கடமையாற்றி வருகிறார். இராஜதந்திரத் துறையில் அவருக்கு இருபது வருடத்துக்கு மேற்பட்ட அனுபவம் உள்ளது.

பொறியியலாளரும், அஹமதாபாத்திலுள்ள புகழ்பூத்த முகாமைத்துவத்துக்கான இந்திய நிறுவனத்தின் முகாமைத்துவப் பட்டதாரியுமான இவர் ஜகார்த்தா, கோலாலம்பூர் மற்றும் சக்ரெப் ஆகிய இடங்களிலுள்ள இந்தியத் தூதரகங்களில் பணியாற்றியுள்ளதுடன், சென்னை, டில்லி ஆகிய இடங்களில் பிராந்தியக் கடவுச்சீட்டு அதிகாரி உள்ளிட்ட பதவிகளில் வெளிவிவகார அமைச்சில் சேவையாற்றியுள்ளார்.

கயானாவில் தனது கடமைகளை வெகு விரைவில் இந்திய உயர்ஸ்தானிகராக பொறுப்பேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், யாழிலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் அடுத்த தூதுவர் தொடர்பில் எந்தவித அறிவிப்புக்களும் விடுக்கப்படவில்லை.

## பொறுப்புக்கூறும்...

எதற்காக பொறுப்புக் கூறப்பட வேண்டும் என்று நாம் நம்புகிறோம் என்பதை தெளிவுபடுத்தி விட்டோம். தீர்ப்புக் கூறுவதை நாம் உறுப்பு நாடுகளிடமே விட்டு விட்டோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## முறைப்பாடுகளை...

மூலமாகவோ, வாய்மூலமாகவோ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் முறையிடலாம். அல்லது என்னிடம் முறையிடுங்கள். எந்தவொரு பொதுமகனின் முறைப்பாட்டையும் ஏற்க முடியாது எனக் கூறமுடியாது. சாட்சிகள் குறித்து பொலிஸார் விசாரிப்பது அவர்கள் குற்றவாளிகளை இலகுவாக இனம்கண்டு கைது செய்ய முடியும் என்பதற்காகத்தான். சாட்சி இல்லை என்பதற்காக முறைப்பாட்டை ஏற்க முடியாது என்று பொலிஸார் சொல்ல முடியாது.

இதனைப் பொதுமக்கள் அறிந்து கொண்டு செயற்பட வேண்டும். முறையிடுவது தொடர்பில் மக்கள் பூரணமாக விளங்கிக் கொள்வதன் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார். (இ)

## அமெரிக்காவின்...

களும் பெறப்படவில்லை.

இந்தநிலையில் இந்த விடயம் குறித்து பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதி நண்டியை சந்தித்து ஆட்சேபனையை வெளியிட்டுள்ளார் .

இந்த விடயம் தொடர்பில் ஐ.ஓ.எம். மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

இதேவேளை, அமெரிக்கப் பிரதிநிதி ஏன் முன்னாள் சிறுவர் போராளிகளை சந்திக்கவில்லை" என்றும் கோத்தாபய கேள்வி எழுப்பியுள்ளார்.

## அமைச்சர்...

ஜீயின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விசேட தூதுவராகவே விஜயம் செய்யவுள்ளார்.

சீனாவிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளும் வெளிவிவகார அமைச்சர் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை அங்கு தங்கியிருப்பார் என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

# வடக்கின் கிராமிய அபிவிருத்திக்கு மேலதிக நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

இந்த ஆண்டுக்கான வட மாகாணத்தின் உட்கட்டுமான அபிவிருத்திக்காக 5 ஆயிரத்து 551 மில்லியன் ரூபா மாகாண குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்படி 5551 மில்லியன் ரூபாவுடன் மேலதிகமாக இப்போது 280 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நிதி ஆணைக் குழு செயலாளர் டபிள்யூ.எச். முனசிங்க வடமாகாண பிரதம செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

2014 இல் தனித்து விடப்பட்டதும், பின்தங்கியதுமான கிராம அபிவிருத்தி என்னும் தலைப்பில் நிதி ஆணைக்குழுவின் செயலாளரினால் முன்வைக்கப்பட்ட கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மகிந்த சிந்தனை தொலை நோக்கின் கீழ் வட்க்கில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் உள்ள நலிவுற்ற கிராமங்களின் உட்கட்டுமானம் தொடர்பான அபிவிருத்திகள் முன்னுரிமைப் படுத்தப்படவுள்ளன.

இதன்கீழ் 34 உள்ளூராட்சி சபைகளின் கீழ் உள்ள மிகவும் பின்தங்கிய கிராமங்கள் பொறுப பேற்று சட்டம் ஊடாகத் தெரிவு செய்யப்பட்டு முன்னுரிமை பிரகாரம் தெரிவுகள் முன்வைக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.


இதற்கான திட்டங்களில் முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டிய பகுதிகள், இலக்குகள், நோக்குகளை முன்வைத்து 2014 திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

மேற்படி நிதி 34 உள்ளூராட்சி சபைக்கும் வீதிகள், போக்குவரத்துக் காணிகள், கல்வி, சுகாதாரம், உள்ளூராட்சி (வாரச்சந்தைகள், குடிதண்ணீர், நூலகம், மயானம்), நன்னடத்தை, சமூகசேவை, வீடுகள், கலாசாரம் உள்ளிட்ட 25 துறைகளில் திட்டங்களை முன்வைக்கலாம்.

எனினும், சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் தமது திணைக்களத்தின் கீழ் வரும் விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என ஆணைக்குழு கேட்டுள்ளது.

மேற்படி அபிவிருத்தி உட்கட்டுமான திட்டங்களை விரைந்து அமுல்படுத்த மாகாண பிரதம செயலாளர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

# சிவனொளிபாத மலையில் கண்டாமணி திறந்துவைப்பு



சிவனொளிபாத மலையில் பொருத்தப்பட்டுள்ள கண்டாமணி மற்றும் தூண்டாவிளக்கு ஆகியன பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவினால் நேற்று திறந்து வைக்கப்பட்டன.

காலை 10.00 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது மலைக்கு மேலாக ஹெலிகொப்டரில் பறந்துகொண்டிருந்த ஜனாதிபதி, அதிலிருந்தவாறே சிவனொளிபாதமலைக்கு மலர்களைத் தூவி தனது வணக்கத்தைச் செலுத்தினார்.

சிவனொளிபாத மலையில் 8,613 கிலோ நிறையுள்ள தூண்டாவிளக்கும் 9,000 கிலோ நிறையுள்ள கண்டாமணியும் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றைத் திறந்துவைக்கும் நிகழ்வில் ஜனாதிபதி கலந்துகொள்வார் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது.

இருப்பினும், ஜனாதிபதி இந்நிகழ்வில் கலந்துகொள்ளாத நிலையில், சிவனொளிபாதமலைக்கு மேலாக ஹெலிகொப்டரில் பறந்தவாறு மலர்களைத் தூவி வணக்கம் செலுத்தினார்.

குறித்த கண்டாமணியும், தூண்டாவிளக்கும் பாதுகாப்பு செயலாளரினால் திறந்து வைக்கப்பட்டதுடன் அங்கு இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளிலும் அவர் கலந்துகொண்டார்.

சிவனொளிபாதமலை விகாரையின் பொறுப்பாளர் தேரர் தலகஸ்கந்தே வஜிரவின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இராணுவத் தளபதி தயா ரத்னாயக்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை விடயத்தில் பொறுமையைக் கடைப்பிடியுங்கள்

## பிரான்ஸிற்கான இலங்கை தூதுவர் கோரிக்கை

யுத்தத்துக்குப் பிந்திய இலங்கையின் விடயங்களில் சர்வதேச சமூகம் பொறுமையை கடைப்பிடிக்க வேண்டியது அவசியமானது என பிரான்ஸிற்கான இலங்கைத் தூதுவர் கருணாதிலக்க ஹங்கேவத்த தெரிவித்துள்ளார். பயங்கரவாத பிடியிலிருந்து மீண்டுள்ள இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த போதியளவில் கால அவகாசம் வழங்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கருணாதிலக்க ஹங்கேவத்த உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் ஓர் அங்கத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு நூற்றுக்கணக்கான பரிந்துரைகளை செய்துள்ளதாகவும் ஒன்றன் பின் ஒன்றாக இவை அமுல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸின் தலைநகர் பாரிசில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வுகளில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். ஆயுதம் ஏந்திய நபர்களை தண்டித்து ஒதுக்காமல், அவர்களுக்கு புனர்வாழ்வு அளித்து சமூகத்துடன் மீள இணைத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அநேகமான முன்னாள் போராளிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்கப்பட்டுள்ளதுடன் தொழில் வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக கருணாதிலக்க ஹங்கேவத்த தெரிவித்துள்ளார்.

# ஜெனிவா குழுவுக்கு யார் தலைமை ஜனாதிபதியே தீர்மானிப்பார்

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் பங்கேற்கும் இலங்கைப் பிரதிநிதிகள் குழுவினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே தீர்மானிப்பார் என ஜனாதிபதியின் செயலாளர் லலித வீரதுங்க தெரிவித்துள்ளார்.

2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு எதிராக ஏற்கனவே தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானத்திற்கு எதிராக சவால் விடுக்கப்பட மாட்டாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சவாலை எதிர்நோக்க வேறும் வழிகள் பயன்படுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிபுணர் குழு அறிக்கையின் சட்டரதியான தன்மை குறித்து கேள்வி எழுப்பக் கூடிய சாத்தியங்கள் குறைவு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் எவ்வாறு அமுல்படுத்தப்படுகின்றது என்பது குறித்து சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கையை யார் பிரதிநிதித்துவம் செய்வார்கள் என்பதனை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே தீர்மானிப்பார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பூசா முகாமினுள் அனுமதியின்றி நுழைந்தாரா அமெரிக்காவின் விசேட தூதுவர்



## காலம் கடந்து கசிகிறது தகவல்

கடந்த மாதம் கொழும்புக்கு பயணம் மேற்கொண்ட அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் பூகோள குற்றவியல் நீதிக்கான பணியகத்தில் போர்க்குற்ற விவகாரங்களைக் கவனிக்கும் சிறப்பு தூதுவரான ஸ்டீபன் ஜே ராப், பூசாவில் உள்ள இராணுவ முகாம் ஒன்றுக்குள் சென்று சோதனை நடத்தியதாக தகவல் தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த மாதம் முதல் வாரம் கொழும்புக்கு பயணம் மேற்கொண்டிருந்த ஸ்டீபன் ராப் தலைமையிலான அமெரிக்கக் குழுவினர், காலியில் உள்ள பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை பார்வையிடுவதற்காக சென்றிருந்தனர்.

இதன்போது, பூசா தடுப்பு முகாமுடன் இணைந்திருந்த இராணுவ முகாம் ஒன்றுக்குள் அவர்கள் உள்நுழைந்து பார்வையிட்டுள்ளனர்.

போரின் இறுதிக்கட்டத்தில் படையினரிடம் சரணடைந்த விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்கள் பலர், இன்னமும் எங்குள்ளனர் என்று தெரியாதுள்ளது.

இவர்கள் இரகசிய தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக, தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில், பூசா தடுப்பு முகாமுக்கு அருகில் இருந்த படையினரின் முகாமும், அத்தகைய இரகசியத் தடுப்பு முகாமாக பயன்படுத்தப்படலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே ஸ்டீபன் ராப் குழுவினர் அதற்குள் நுழைந்து பார்வையிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மருத்துவரின் விபரீத ஆசை; பிரிட்டிஷ் நீதிமன்றம் தண்டனை

(லண்டன்)

யுவதி ஒருவரின் கால்களை ஒளிப்பதிவு செய்த இலங்கை வைத்தியர் ஒருவருக்கு இங்கிலாந்து நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.

லண்டன் பக்கிங்ஹாம் பகுதியில் வசித்துவரும் வைத்தியர் ஒருவரே இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்தார்.

பர்மிங்ஹாமில் கடைத் தொகுதியொன்றினுள் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியமை தொடர்பில் அங்கிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் கண்காணிக்கப்பட்டதை அடுத்து. இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

63 வயதான சம்பந்தப்பட்ட வைத்தியர், மிகவும் சிறிய ரக கெமராவினால் யுவதியொருவரின் கால்களை ஒளிப்பதிவு செய்தமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

பொது ஒழுக்க விழுமியங்களை மீறிய குற்றச்சாட்டின் பேரில் கைதான வைத்தியர், பர்மிங்ஹாம் நீதவான் நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

தனது செயற்பாடுகளால் எவருக்கும் பாதிப்புகள் ஏற்படவில்லை என்பதால், அதனை குற்றமாக தாம் கருதவில்லை என்றும் வைத்தியர் நீதிமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும், யுவதியின் அந்தரங்கத்தை அனுமதியின்றி ஒளிப்பதிவு செய்தமை குற்றம் என நீதவான் அறிவித்துள்ளார்.

குற்றவாளியாகக் காணப்பட்ட வைத்தியருக்கு மூன்று மாத பணி நிறுத்தத்துடன், 240 ஸ்டர்லிங் பவுண்கள் அபராதம் விதிக்கப்பட்டது.

இதுதவிர மறு அறிவித்தல் வரை பெண் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கும் குற்றவாளியான வைத்தியருக்கு பர்மிங்ஹேம் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

HP யின் உத்தியோகபூர்வ வியாபார பங்காளர் நளினின் Mega offer

NALIN Information Technologies(Pvt)Ltd.

NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.

யாழ்ப்பாணத்திலும்

HP Pavilion 15 i3 3rd gen

500 GB / 4 GB / 15.6" LED
Wifi / BT / Webcam/
Optional Win 8

Free
STC HSPA 7.2 Multi Dongle
Head phone
Mouse
HP Original Bag
With Warranty

64,900/= மட்டுமே

முந்துங்கள் ! கையிருப்பு உள்ளவரை மட்டுமே !

BRANDED PC & Laptop
HP Genuine warranty
1 year parts Warranty
2 years service free

சுன்னாகத்திலும் (C/3406)

Assemble Pc யின் விலையில்
நீண்டகால பாவனைக்கு HP Dualcore Pc

2030 Dualcore processor
500 GB (7 200) / 2 GB (DDR 3)/
DVD writer / Card Reader /
18.5" LED HP / Optional Win 8

49,500/= மட்டுமே Free Head phone

021 222 1121 077 766 7975 021 222 4994 facebook/nalin_it

Branch: No. 116 G, K.K.S. Road, Chunnakam. 021 224 2222 077 714 0431

இப்பத்திரிகை இல. 873 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 பெப்ரவரி 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.